கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05



தீபாவளி வாழ்த்துக்கள்

தீபத் திருநாளைக் கொண்டாடும் எம் சகோதர இந்து மக்கள் அனைவருக்கும் ஞான ஒளியின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்


**பரிசுத்த திருத்தந்தையின் இலங்கைக்கான விஜயம்**

**“அன்பில் நிலைத்திருங்கள்”**

Facebook account
www.facebook.com / popevisitsrilanka2015

POPE FRANCIS Sr Lanka 2015

இறைவனின் நன்மைத்தனத்திற்கு எல்லைகள் என்பது இல்லை, பாகுபாடுகள் பார்க்கப்படுவதுமில்லை

திருத்தந்தையின் பொன்மொழி


(19.10.2014 - 19 ஐப்பசி, 2014 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 97 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014


# இறை அரசின் விழுமியங்களை பறைசாற்ற நமது வாழ்வை மாற்றிடுவோம்.

உலக மறைபரப்பு ஞாயிறு 19.10.2014

“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்” என்ற இயேசுவின் கட்டளையை நடைமுறைப்படுத்த மண்ணுலகில் ஆண்டவர் இயேசுவினால் உருவாக்கப்பட்டதே திருச்சபை. திருச்சபை இம் மண்ணில் உருவாகிய நாள் முதல் நற்செய்தி பறைசாற்றும் பணியை தனது இயல்பாக கொண்டுள்ளது. நற்செய்தி பறைசாற்றும் பணியின்றி திருச்சபையும் இல்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நற்செய்தியில் கூறப்பட்டிருப்பது போல் திருச்சபையானது தன்னிடம் கொடுக்கப்பட்ட பணியை முழு அளவில் பிரமாணிக்கத்துடன் நிறைவேற்றி வருகின்றது. தொடக்கக் காலத்திலிருந்தே திருச்சபை ஏழைகள் மற்றும் ஒதுக்கப்பட்டோரின் பால் அன்பும், கரிசனையும் காட்டவேண்டியது தனது நற்செய்திப் பணியில் இன்றியமையாத அம்சமாக கொண்டிருக்கின்றது. நம் ஆண்டவர் இயேசு மண்ணுலகில் வாழ்ந்த போது ஏழைகள், ஒதுக்கப்பட்டோர் பால் ஆழ்ந்த அன்பும், அக்கறையும் கொண்டிருந்தார் என்பதை நற்செய்தியாளர்கள் தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். இயேசுவின் “நற்செய்தியை பறைசாற்றும்” கட்டளையை தன் வாழ்வாக ஏற்றுக் கொண்ட திருச்சபையும் இன்றுவரை இயேசுவைப் போன்று ஏழைகள், ஒதுக்கப்பட்டோர்..


தொடர்ச்சி 15ஆம் பக்கம்


# திருவிவிலியத்தை தினமும் வாசிக்க வேண்டும்

### ஆயர் மாமன்றத்தில் திருத்தந்தை

ஒவ்வொரு குடும்பத்திலும், ஒரு விவிலியம் இருக்க வேண்டும். அதை அலுமாரியில் வைக்காமல் கையில் வைத்து அதை தினமும் தனியாகவோ அல்லது குடும்பமாகவோ அடிக்கடி வாசிக்கவேண்டும். கணவனும், மனைவியுமாக பெற்றோரும் பிள்ளைகளுமாக மாலை நேரங்களில் சிறப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் விவிலியத்தை வாசிக்குமாறு கேட்டுக் கொண்டார். குடும்பம், நம்பிக்கையிலும், உறுதியிலும் முன்னோக்கிச் செய்வதற்கு இறைவார்த்தையால் ஊட்டம் பெறுவதற்கு விவிலிய வாசிப்பு அவசியம் என்று விவிலியத்தை தூக்கி காண்பித்த படியே கூறினார் திருத்தந்தை. செபமாலை அன்னையிடம் குடும்பம் குறித்து செபியுங்கள். அத்தாய் குடும்பங்களுக்கும், முழு உலகுக்கும் அமைதியை அருள்வார் எனவும் விசுவாசிகளிடம் கேட்டுக் கொண்டார் திருத்தந்தை.



# கொழும்பு உயர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க மறைக்கல்வி நடுநிலைய அறிவித்தல்கள்

### கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்விப் பரீட்சை – 2014

கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி அப்போஸ்தலிக்கப் பணியகத்தினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் மறைக்கல்வி பரீட்சையானது இவ்வருடம் கார்த்திகை மாதம் 1ம் திகதி காலை 9.00 மணிக்கு பங்கு மறைப்பாடசாலைகளில் நடைபெறும். பங்குத்தந்தையர்களும், பொறுப்பு ஆசிரியர்களும், பெற்றோர்களும் இதனைக் கவனத்திற் கொண்டு பிள்ளைகளை குறித்த நாளில் குறித்த நேரத்திற்கு முன்பதாக அனுப்பி பரீட்சைக்கு சமூகமளிக்கச் செய்யவும்.

### தேசிய மறைப்பணியாளர் பரீட்சை – 2014

தேசிய மறைப்பணியாளர் பரீட்சையானது கார்த்திகை மாதம் 15ம் திகதி நடைபெறவுள்ளது. முதல் பிரிவு காலை 9.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணிவரையும், இரண்டாவது பிரிவு பகல் 1.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரையும் நடைபெறும். பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்கள் அனுமதிப்பத்திரத்துடன் தேசிய அடையாள அட்டையையும் எடுத்து வர வேண்டும். காலை 8.30 மணிக்கு பரீட்சை நிலையத்திற்கு சமூகமளித்து சிரமங்களை தவிர்த்துக் கொள்வது வரவேற்கத்தக்கது. இவ்வருடம் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் சாதாரண தேர்வுக்கு 81 மறைப்பணியாளர்களும், சிறப்புத் தேர்வுக்கு 39 மறைப்பணியாளர்களும், கௌரவத் தேர்வுக்கு 13 மறைப்பணியாளர்களும் தோற்றவிருக்கின்றார்கள். பரீட்சை நிலைய விபரங்கள் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது. கீழ்வரும் வட்டாரங்களுக்கான பரீட்சை நிலையங்கள்.

**புனித சூசையப்பர் கல்லூரி, டாலி வீதி, கொழும்பு 10.**

வடகொழும்பு, மத்திய கொழும்பு, தென் கொழும்பு, கோட்டே, வத்தளை

**தூய லோயலா கல்லூரி, தழுவகொட்டுவ**

கட்டாண, நீர்கொழும்பு

*கொழும்பு மறைக்கல்வி நடுநிலையம்.*

# அகில இலங்கை குறும் திரைப்படப் போட்டி

**இயக்குனர் அருட்.திரு. சிறில் காமினி பர்னாந்து**

பாப்பரசரின் வருகையை முன்னிட்டும், முத்திப்பேறு பெற்ற யோசேவ்வாஸ் அடிகளாரின் புனித நிலைக்கு உயர்த்தப்படும் நிகழ்வை முன்னிட்டும் நடாத்தப்படும் அகில இலங்கை குறும் திரைப்படப்போட்டி

“அன்பில் நிலைத்திருங்கள்” என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு நடாத்தப்படும் குறும் திரைப்படப் போட்டியினை இலங்கை சிக்னிக் நிறுவனம் பாப்பரசரின் வருகையை முன்னிட்டும், முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாசின் புனித நிலைக்கு உயர்த்தும் நிகழ்வை முன்னிட்டும் நடாத்தவுள்ளது.

இத்திரைப்படத்தை பார்வைக்கு சுவையூட்டுவதாகவும், காதுகளால் கேட்டு உணரக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இவ் 3 நிமிடத் திரைப்படமானது இறுவெட்டு வடிவில் எங்களுக்கு 30.10.2014க்கு முன்னதாக கையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**விலாசம் : பாப்பரசரின் வருகை தொடர்பாடல் காரியாலையம் இல 45, கிங்ஸிசி றோட் கொழும்பு – 08.**

**போட்டிக்கான நிபந்தனைகள் பின்வருவாறு**

- ஒரு நபர் ஒரு ஆக்கத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
- சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் ஏதாவது..


தொடர்ச்சி 15ம் பக்கம்


# சகல மரித்த விசுவாசிகளுக்கான விசேட திருப்பலி

**மாதம்பிட்டி, பொரளை சேமக்காலையில் :**

கார்திகை 2ந் திகதி 3.30 மணிக்கு செபமாலைத் தியானமும் அதனைத் தொடர்ந்து 4.00 மணிக்கு திருப்பலியும் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் துணை ஆயர்கள் தலைமையில் இடம்பெறும்.

# தமிழ் மொழி மூலமான அரச, தனியார் பாடசாலைகளில் கல்வி கற்பிற்கும் கத்தோலிக்க ஆசிரியர்களுக்காக விசேட ஒன்று கூடல்

கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் வழிகாட்டலில் கொழும்பு உயர் மறைமாவட்ட விசுவாச உயிரூட்டல் பணியகத்தால் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் ஏற்பாடு செய்துள்ள விசேட ஒன்று கூடலானது 01.11.2014 சனிக்கிழமை அன்று பி.ப 3.00 மணியளவில் கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அதில் கலந்து சிறப்பிக்க உங்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

# தொழில்சார் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கான விசேட ஒன்று கூடல் (Professional)

கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் வழிகாட்டலில் கொழும்பு உயர் மறைமாவட்ட விசுவாச உயிரூட்டல் பணியகத்தால் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் ஏற்பாடு செய்துள்ள விசேட ஒன்று கூடலானது 30.10.2014 வியாழக்கிழமை அன்று பி.ப 6.30 மணியளவில் கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அதில் கலந்து சிறப்பிக்க உங்க-ளையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

**விசுவாச உயிரூட்டல் பணியக சார்பில்,**
**அருட்தந்தை அருளானந்தம் உதயதாஸ் அடிகள்**
**பேராயர் இல்லம், பொரளை.**


Please Like pope visit sri lanka official facebook page.

www.facebook.com/popevisitsrilanka2015 ■ www.popefrancissrilanka.com




**“மாட்சியையும் ஆற்றலையும் ஆண்டவருக்குச் சாற்றுங்கள்” (தி.பா 96)**

# திருவிழிப்பு

அன்னை மரியாளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இவ்வாண்டிலே செக்கட்டித் தெரு புனித அன்னம்மாள், வேளாங்கண்ணி ஆலய பங்கு, அன்னை மரியாளுக்கு விசேட காலமாக ஐப்பசி மாதத்தை பிரகடனப்படுத்தியுள்ளது. ஐப்பசி மாதம் 10 - 20 வரை ஸ்பெயினிலிருந்து கொண்டு வரப்பட்ட பாத்திமா மாதா அன்னையின் திருயாத்திரை திருச்சுரூபம் கொண்டுவரப்பட்டுள்ளது. 10ந் திகதி மாலை 5.30 மணிக்கு அன்று தொடக்கம் 10 நாட்களுக்கு பங்கிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அன்னையின் திருச்சுரூபம் எடுத்துச் செல்லப்படவுள்ளது. இக்கால கட்டத்தில் ஐப்பசி மாதம் 18ந் திகதி சனி இரவு முழு இரவு திருவிழிப்பு தியானம் நடைபெறவுள்ளது. 8.30 மணிக்கு ஆரம்பமாகி ஞாயிறு காலை 5.00 மணிக்கு காலைத் திருப்பலியுடன் முடிவடையும். வேளாங்கண்ணி ஆலயத்தில் நடைபெறும் இத்திருவிழிப்புக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்றைய தினம் விசேட நிகழ்வாக மெழுகுதிரி பவனியும் நடைபெறும்.

**பங்குத் தந்தை அருட்தந்தை. ஆனந்தன் பெர்னாண்டோ புள்ளே**

# மரியாயின் சேனை மாநாடு 2014

**இ.தங்கராஜா, இணைச்செயலாளர்**

**பரிகாரமாதா கொமித்சியம் – கொழும்பு.**

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் மரியாயின் சேனை தமிழ் பிரசீடீயங்களின் ஒன்றியமான பரிகாரமாதா கொமிசியத்தின் ஏற்பாட்டில் மரியாயின் சேனை உத்தியோகர்ளுக்கான சேனை மாநாடு கடந்த 08.09.2014. கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில், அருட்திரு லிங்ரன் அடிகளாரின் திருப்பலியுடன் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.30 வரை நடைபெற்றது.

சேனைக் கைநூல் விதிகளின்படி இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்நிகழ்வில் அருட்தந்தையர்களான அருட்பணி உதயதாஸ், அருட்பணி அந்திரியாஸ், அருட்பணி கிளேரியன் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் கருத்துரைகளையும் வழங்கியிருந்தனர். சேனை உத்தியோகத்தர்களது கடமைகள், சேனைப் பணிகளில் ஏற்படும் தடைகளை வென்று தீர்வுகாணும் அணுகுமுறைகள், சேனை மனப்பான்மையும் நோக்கமும், சேனை அப்போஸ்தலத்தின் அடிப்படைக் கொள்கைகள், திவ்விய நற்கருணையும், சேனையாரும் ஆகிய தலைப்புக்களில் இம்மாநாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான்கு அமர்வுகளாக நடைபெற்ற இம்மாநாட்டிற்கு கொழும்பு மறைமாவட்ட மரியாயின் சேனை ஆன்மகுருவும், வழிகாட்டியுமான, அருட்தந்தை இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளாரும், கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி சிஸ்வான் குரூஸ், அடிகளாரும் ஆசியுரை வழங்கியிருந்தனர்.

புதுப்புது வழிகளைக் கண்டு பிடிப்பதும், மாறுதல்களைத் தேடுவதும், திறமையான செயல்முறைக்கு வழிவகுக்கும் என்ற அடிப்படையில், தற்கால சவால்களை முறியடித்து முன்செல்லும் வேலைத்திட்டங்களையும், வேலைத்துறைகளையும் ஆராய்ந்து, ஒவ்வொரு ஆன்மாவுக்கும் நன்மை செய்யும் வகையில் சேவையைப் பெருக்குவதற்கான நுட்பங்களை ஆராய்ந்து சமர்ப்பித்து அவற்றினை கொமிசிய மேற்சபைக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் கியூறியாக்களில் செயற்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்வதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகவிருந்தது.

ஆன்மா உடலை இயக்குவது போல் பக்தி செயலை இயக்க வேண்டும். திருச்சபை தாயாக விளங்கும் புனித கன்னிமரியாள் திருச்சபையை பிரசவித்த பெந்தகொஸ்தே நாளன்று கிறிஸ்துவின் கட்டளைக்கேற்ப அவரின் சீடர்களுடன், செபத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு, திருச்சபைக்காக அவர்கள் செய்யப்போகும் வேலைகளுக்கு திடம் தரும் ஆவியைப் பெற்றுக்கொண்டார்களோ அந்த அனுபவத்தில் உள்ள பத்திமுறையை இம்மாநாட்டில் 30 இற்கும் மேற்பட்ட பிரசீடியங்களிலிருந்து பங்கு கொண்ட 150க்கும் மேற்பட்ட சேனை அலுவலர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் ஆடம்பரமின்றி இம்மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை அதன் நோக்கத்தை அடையும் சிறப்பம்சமாக இருந்தமை குறிப்பிடக்கூடியதொன்றாக அமைந்திருந்தது.

கூட்டங்களை நடத்தும் முறை, உறுப்பினர்கள் வேலை அறிக்கை சமர்ப்பித்து வேலகளைப் பற்றிய விளக்கம் கூறும்முறை....

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

**கொழும்பு, மரியாயின் சேனையின் கனிஷ்ட**

**கியூரியா இளையோர் ஒன்றியம்**

22.10.2014, காலை 9.00 மணிமுதல்
மாலை 3.30 வரை
புனித சூசையப்பர் கல்லூரி சிற்றாலயம்,
கொழும்பு - 10.
செபம், தியானம், பொழுதுபோக்கு மற்றும்
விளையாட்டுக்கள்
பகலுணவு, தேநீருக்கான கட்டணம் 150/-
ஐப்பசி 20ம் திகதிக்கு முன்னர் உங்கள் வரவை எமக்கு உறுதி செய்யுங்கள்

**வருன்ஜனி 0715363703, சஹான் 077578824**

# பாடற்பயிற்சி

கொழும்பு உயர் மறைமாவட்ட முழு நாள் பாடற் பயிற்சி எதிர்வரும் 6.11.2014 அன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை மருதானை புனித சூசையப்பர் கல்லூரியில் இடம்பெறுகிறது.

கொழும்பு உயர்மறைமாவட்ட திருவழிபாடு ஆணைக்குழுவும் - யோசேவ்வாஸ் புனித சூசையப்பர் கல்லூரி சர்வதேச பாடற்குழு இலங்கை மன்றம் ஆகியவற்றின் அனுசரனையுடன் அதன் அமைப்பாளர் திரு. F,D அல்மேடா அவர்களும் இணைந்து இதனை வழிநடத்துகின்றனர். இந்நிகழ்ச்சியின் நோக்கம் இலத்தீன் திருவழிபாட்டு, பாடல்களை கிரகோரியாவின் பல இராகங்களை ஒன்றித்து ஒலிக்கும் இசை முழக்கம் மூலம் இலத்தின் மொழி இசையை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்கு / இந்நிகழ்வு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் அன்றைய தினம் காலை மரியாவின் திருச்சுரூப பவனியுடன் ஆரம்பமாகி மாலை நற்கருணை ஆசீர்வாதத்துடன் நிறைவுபெறும்.

இந்த அரிய நிகழ்வில் பங்குபெற பாடகர் குழாம் தலைவர்கள், பாடகர்கள், குருக்கள், துறவிகள், பாடசாலை மாணவ மாணவிகள் பங்கு பெற விரும்பினால் அதற்குரிய விண்ணப்பங்களை நேரடியாக 25.10.2014 முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் மேற்குறிப்பிட்ட பாடல்களை பாடுவதற்கு தேவையான நூல்களை பெறுவதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

**தொடர்புக்கு: இயக்குனர். அருட்தந்தை இந்திரஜித் பெரேரா கொழும்பு உயர்மறைமாவட்ட திருவழிபாட்டு. கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் இல்லம் கொழும்பு – 08.**

# வரைதல் கண்காட்சி

கொம்பனித்தெரு புனித செபமாலை மாதா தமிழ் மறைக்கல்வி பாடசாலையில் மரியன்னை ஆண்டினை முன்னிட்டு மாணவரால் வரைதல் கண்காட்சி ஒன்று நடாத்தப்பட்டது. அக்கண்காட்சியினை பங்குத் தந்தையர்களும், பெற்றோர்களும், பங்கு மக்களும் பார்வையிட்டனர். மேலும் தமிழ் மறைக்கல்வி பாடசாலையில் மறைப்பணி ஆற்றும் மறையாசிரியர்களையும், பங்குத் தந்தை அருட்தந்தை அயசிந் பெரேரா அவர்களையும், உதவிப் பங்குத் தந்தை அருட்தந்தை லியோன் பபாபிள்ளை அவர்களையும், அருட்தந்தை செபஸ்டியன் லின்டன் அவர்களையும் படத்தில் காணலாம்.




# அதிபர் நிலைக்கு விண்ணப்பம்

இலங்கை அதிபர் சேவையின் 1, 2-1, 211, 3ம் வகுப்புக்களின் உத்தியோகத்தவர்களுக்கான வினைத்திறன் காண், தடை தாண்டல், பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இலங்கை (அரசு) கல்வி அமைச்சுகளால் கோரப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி 2014.10.20 ஆகும். இலங்கை அரசினால் வெளியிடப்படும் 1981ஆம் இலக்க 2014.09.19 திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை பார்வையிடவும்

# திருப்பாலத்துவ சபை

## ஊக்குவிப்பாளர்களுக்கான முதலாவது பயிற்சி பாசறை

கொழும்பு உயர் மறைமாவட்டத்தினால் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான முதலாவது பயிற்சி பாசறை 2014, செப்டம்பர் 26, 27, 28ம் திகதிகளில் றாகமை, தேவத்தையிலுள்ள தியான இல்லத்தில் நடைபெற்றது.

உயர்மறைமாவட்டத்தில் திருப்பாலத்துவ சபைக்கு இயக்குனரான அருட்தந்தை பிரடி சாந்திக்குமார் அடிகளாரின் தலைமையில் அருட்தந்தை ஒனாசியஸ் அடிகளாரினாலும், அருட்தந்தை எவரஸ்ட் டயஸ் அடிகளாரினாலும் வழிநடத்தப்பட்டது. ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் அரச, குருத்துவ, இறைவாக்கினர் பணிற்கு அழைப்புப் பெற்றுள்ளதால் இவர்கள் சிறுவர், சிறுமியர்களை இயேசுவை நோக்கி அழைத்துச் செல்லவும் ஊக்குவிப்பாளர்களாக செயல்படுவோம் என, ஒளியேற்றி இறைவனுக்கு வாக்குறுதியளித்தனர்.

இப்பயிற்சி செயலமர்வில் 32 ஊக்குவிப்பாளர்கள் பங்கு கொண்டு தமது அழைப்பை உறுதிப்படுத்தினர்

# பாத்திமா அன்னையின் திருயாத்திரைத் திருச்சுரூபம்





மரியன்னை ஆண்டை முன்னிட்டு செக்கட்டித்தெரு புனித அன்னம்மாள் பங்கில் ஸ்பெயின் நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட பாத்திமா திருயாத்திரை அன்னையின் திருச்சுரூபம் நற்செய்தி தூது சகோதரர்களால் பங்கிலுள்ள கத்தோலிக்க வீடுகளுக்கும், பிறமத குடும்பங்களின் வேண்டுகோளுங்கு இணங்க அவ்வில்லங்களுக்கும் எடுத்து சென்று சிறிய செப வழிபாட்டை நடாத்தி அருட்தந்தையால் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டது அன்னையின் திருச்சுரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம்.

**தகவல் : டிக்சன் பர்னாந்து**



பதுளை மறைமாவட்ட நாயபெத்த பங்கு புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் கடந்த புரட்டாதி மாதம் 13ம் திகதி 13 சிறுவர்கள் நற்கருணை அருட்சாதனத்தின் வழியாக இயேசுவை முதன் முதலாகப் பெற்றுக்கொண்டார்கள். அச்சிறுவர்களையும், அருட்தந்தையர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : பங்குத்தந்தை**



கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் கல்லூரி சிறார்கள் தேவநற்கருணை அருட்சாதனத்தை 4.10.2014 அன்று புனித லூசியாள் பேரோலயத்தில் பெற்றுக் கொண்டனர். இயேசுவைப் பெற்றுக் கொண்ட சிறார்களையும், பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி. சாந்தனா (கார்மேல் சபை) அவர்களையும், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : டிக்சன் பர்னாந்து**

ஞான ஒளி GNANA OLI
கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
19 ஐப்பசி மாதம், 2014 ஞாயிற்றுக்கிழமை.

## எம் துயரத்தை நீக்கி கண்ணீரைத் துடைத்து எம்மை அரவணைத்துக்கொள்ளும் ஒரே தாய் என்றால் அது மரியன்னையாகத்தான் இருக்க முடியும்..

ஆண்டவருக்குப் பணிந்து நடப்போர் தங்கள் அன்னையருக்குப் பணிந்து நடப்பர். அந்தவகையில் இன்று எத்தனைப் பேர் ஆண்டவருக்குப் பயந்தவர்களாக அன்னையருக்குப் பணிந்து வாழ்பவர்களாக இருக்கின்றோம்? இதற்கு நல்லதொரு உதாரணமாக புனித அகுஸ்தினாரைக் கூறலாம். இவர் பள்ளிப்பருவத்தில் தனது அன்னையான மொனிக்காவுக்கு அதிகம் துயரம் தந்தவராக வர்ணிக்கப்படுகிறார். தனது அன்பு மகனை எப்படியாவது இறையன்பில் வளர்த்தெடுக்க கிட்டத்தட்ட பதினாறு வருடங்கள் தொடர்ச்சியாக செபித்து வந்தார். அன்னை மொனிக்கா இறைப்பக்தி நிறைந்தவர். அவரது செபத்தை இறைவன் கேட்டார். புனித அகுஸ்தினாரும் மனமாறினார். ஒரு குருவாகவும், ஆயராகவும், மறைவல்லுனராகவும் திகழ்ந்து இறுதியில் மரித்து ஒரு புனிதரானார். அன்னையின் தொடர்ச்சியான வழிகாட்டலும் செபமும் தான் இவரை புனிதராக்கியது எனலாம். இந்த அன்னையின் அன்பே இப்படிப்பட்டதென்றால் எம் மரியன்னையின் அன்பை எப்படி வர்ணிப்பது?

ஜேர்மனி நாட்டில் வைகாசித் திங்கள் 2ம் ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் சிறப்பாக கொண்டாடப்படும். அன்றைய தினத்தில் அன்னையர்கள் ஓய்ந்திருக்க அவர்களது பிள்ளைகள் வேலை செய்வார்கள். அதேவேளையில் சிறந்த பரிசுகளையும் அளித்து அன்னையர்களை மகிழ்விப்பார்கள். எம்மை பத்து மாதங்கள் சுமந்து தாய் பெற்றெடுத்தாள் என்று வெகு இலகுவாக சொல்கிறோம். அக்காலக்கட்டத்தில் தாய்மார் உடல் ரீதியாக, உளரீதியாக எத்தனை உபாதைகளை சந்திக்கிறார்கள் என்று எம்மால் கூறமுடியாது. அவர்கள் மரண வேதனையைத்தான் அனுபவித்திருப்பார்கள். பெற்றது மட்டுந்தானா? பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்கும், கல்வி கற்பதற்கும் அவர்கள் படும்பாடு வாய்விட்டுச் சொல்ல முடியாதது. இவ்வாறான அன்னையர்களை சிறப்பித்து பரிசில்கள் வழங்குவது நியாயமானதும் பொருத்தமானதுமாகும். அன்னையர்கள் இவ்வாறு போற்றப்பட்டு புகழப்பட்டால் உலகோர் அனைவருக்கும் அன்னையாகத் திகழும் மரியன்னையை எவ்வாறு புகழ்வது?

அன்னையருக்கெல்லாம் அன்னையாகவும் அன்பின் பிறப்பிடமாகவும் திகழும் அன்னை மரியின் அன்பை என்னவென்று சொல்வது. எம் துன்ப வேளையில் அன்னையின் பாதத்தில் அடைக்கலம் புகும்போது எம் துயரத்தை நீக்கி கண்ணீரைத் துடைத்து எம்மை அரவணைத்துக்கொள்ளும் ஒரே தாய் என்றால் அது மரியன்னையாகத்தான் இருக்க முடியும். அதனால்தான் கொழும்பு உயர் மறைவாட்டம் ஓராண்டு காலத்தை மரியன்னையின் ஆண்டாக பிரகடனப்படுத்தியது. அக்காலத்தில் விசேஷ விதமாக அன்னைக்கு எமது அன்பை வெளிப்படுத்தி நிற்கவும் அன்னை எமக்கு செய்துவரும் நன்மைகளுக்காவும் எமது நன்றியை தெரிவிக்கவும் எமக்கு தரப்பட்ட காலந்தான் இது. மரியன்னைக்கு பல இடங்களில் விழா எடுத்தும், கண்காட்சி நடாத்தியும் திருயாத்திரைகள் நடாத்தியும் தமது அன்பையும் நன்றியையும் அன்னையின் பக்தர்கள் வெளிப்படுத்தி வந்ததும், வருவதும் குறிப்பிடத்தக்கது.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**



# செபமாலை அமைதி தரும் ஆயுதம்

அமெரிக்காவில் பனிப்போர் நடந்து கொண்டிருந்த வேளை அது. ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனைப் பார்க்க பால்ய கால நண்பர் வந்தார். மாலை வேளையிலே வந்த நண்பனை உபசரித்துவிட்டு தங்குவதற்கு தன்னுடைய மாளிகையிலே இடமளித்தார் ஆபிரகாம் லிங்கன். நள்ளிரவில் தூக்கம் வராததால் நண்பர் தனக்குக் கொடுக்கப்பட்ட அறைக்கு வெளியே உலாவிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் பக்கத்து அறையிலிருந்து சத்தம் வருவதைக் கேட்ட அவர், பக்கத்து ஜன்னல் வழியாக உற்றுநோக்கிய போது உலகமெல்லாம் புகழ்பெற்ற ஆபிரகாம் லிங்கன் இறைபதம் மண்டியிட்டு **"என் ஆண்டவரே, நீர் கொடுத்த இம்மக்கள் இன்று சண்டை போட்டு அமைதியில்லாமல் குழப்பத்தில் வாழ்கின்றார்கள். உமக்குச் சித்தமானால் என் மக்களுக்கும், என் நாட்டிற்கும் அமைதியைத் தாரும்"** என வேண்டினார். பெருந்தலைவனின் இறைவிசுவாசத்தைப் பார்த்த நண்பர் ஆச்சரியத்தில் உறைந்து போனார்.

ஆம், அன்பிற்குரியவர்களே, வாழ்க்கையில் உயர்ந்த மக்கள் எல்லோரும் ஆண்டவருக்குப் பயந்து வாழ்ந்தவர்கள். செபமாலை இறை பயத்தை மற்றும் இறை பக்தியை இப்பாரினில் கொண்டுவர வல்லது. இச்செபமாலையை கரங்களில் ஏந்துபவர்கள் பேறுபெற்றவர்கள். செபமும், இறை உறவும் மரத்திற்கு வேரைப் போன்றது. வேரறுந்த மரம் வளர இயலாது. வெகு சீக்கரமே மாண்டுவிடும். அமைதியில்லாத, நிம்மதி இல்லாத வாழ்க்கை கூட வேர்கள் அறுந்த வாழ்க்கைக்குத்தான் சமம்.

நிலை வாழ்வின் வேர்களை அறுப்பது ஊனியல்பின் அடிமைப்படும் மக்களின் பாவமும், பாவ நாட்டங்களும்தான். ஊனியல்பின் செயல்கள் பரத்தமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியன (கலா 5:19-21). இச்செயல்கள் யாவும் வாழ்க்கையின் அமைதியை பறிப்பன. இச்செயல்களின் அடிமைகள் சாத்தானின் செல்லப் பிள்ளைகளேயாம். இவர்களின் வாழ்க்கையால் உலகத்திற்கும் அதன் சிறந்த படைப்பாம் மக்களுக்கும் எந்தப் பயனும் இராது. பிறருக்கு பயனற்ற என் வாழ்க்கை என்னைப் படைத்த பரமனுக்கும், இவ்வுலகில் என்னைப் பெற்ற தாய்க்கும் கனம் செய்யாது. **"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் – தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்"** எனும் அறிஞர் வாக்கு போல - மனிதன் அமைதியுடன், அடுத்தவனுக்கு பயனுடன் வாழ, ஊனியல்பை விட்டு தூய ஆவியின் கனிகளால் வாழவேண்டும். அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, தன்னடக்கம் (கலா 5:22-23) இவைகள் தான் அக்கனிகள்.

இக்கனிகளை கொண்டு வாழ செபமாலை மனிதனுக்கு வழிவகுக்கிறது. செபமாலையின் செபங்கள் விரக்தியில் வாழும் மக்களுக்கு நிறைவு தரவல்லது. அமைதி இல்லா நெஞ்சங்களுக்கு அமைதியின் உறைவிடமாகிறது. தூய ஆவியின் கனிகள் மனிதனை சான்றோனாக மாற்ற வல்லது. செபமாலையை கரம்பிடித்த வாழ்க்கை தினமும் ஒரு மனிதனை "நான் இந்த நாளில் பிறருக்காகச் செய்த நன்மை என்ன?" என சிந்திக்க அழைக்கிறது. வாழ்கின்ற குடும்பத்தில் மற்றும் இச்சமூகத்தில் அமைதி கொண்டு வர செபமாலை எனும் ஆயுதத்தை கரத்தில் ஏந்துவோம். அடுத்தவன் மன அமைதியை பார்வையால், வார்த்தையால், செயலால், கெடுக்காத மக்களாக மாற இறை அன்னை நமக்கு தானமாக கொடுத்த செபமாலை எனும் ஆயுதம் உறுதுணையாக இருக்கட்டும்.

**செபமாலையின் ஆற்றலால் நிறைவோடு வாழ்வோம். மன அமைதியோடு வாழ்வோம். கலக்கங்கள் மாறி குழப்பங்கள் அகன்று நிம்மதியோடு வாழ்வோம். அயலானுக்கு நன்மை செய்வோம்.**



## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# திருவிவிலியக் கண்ணோக்கில்



# கிறிஸ்தவ விசுவாச வாழ்வு புனித வாழ்வாகும்

அருட்தந்தை. ஜெராட் டீ ரொசாய்ரோ, அ. ம. தி.

திருவிவிலியப்படி விசுவாசமே புனித வாழ்வுக்கு வித்தும், ஆற்றலும் மையமும் ஆகின்றது. விசுவாசம் விசுவாசியின் ஆன்மீக மனநிலையைப் பிரதிபலிக்கின்றது. இங்கு திருவிவிலியத்தின் படிப்பினையில் விசுவாச வாழ்வின் சிறப்பியல்புகளையும், அவை விசுவாசியின் புனித வாழ்வுக்கு அடிப்படையாகின்றன என்பதையும் காணலாம்.

## தந்தை ஆபிரகாமின் விசுவாசம்

விசுவாசத்தின் தந்தையாக திருவிவிலியம் ஆபிரகாமை முன்வைக்கின்றது. ஆண்டவரின் வாக்குறுதியில் நம்பிக்கை வைத்து ஆபிரகாமின் வாழ்க்கை ஆரம்பமாயிற்று. அவை நிறைவேறும் என்ற நம்பிக்கைக்கு இடம் இல்லாத போதும் (உரோ. 4: 9), அவர் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டார் (தொநூ. 15: 6). அவரது விசுவாசம் மகனையே பலியாக்கும் அளவுக்கு வலிமை வாய்ந்ததாக இருந்தது (தொநூ. 22). அவரது விசுவாச வாழ்வால் அவர் இறைவனுக்கு ஏற்புடையவரானார்.

## இடையாளர் மோசேயின் விசுவாசம்

இறைவனுக்கும் மக்களுக்கும் இடையாளராக மோசே கண்ணுக்குப் புலப்படாத இறைவனைக் கண்ணால் பார்ப்பவர் போல அவரது திட்டத்துக்குப் பதிலளித்தார். இறைவனின் திட்டத்தை மக்களுக்கு அறிவித்து, "தளராமல் நிலைத்து நின்றார்." (எண். 11: 1-12; திபா. 106: 32...; எபி. 11: 23-29). மோசேயுடன் ஆரம்பித்த மக்களின் விடுதலைப் பயண நிகழ்ச்சியை கண்ணுக்குப் புலப்படாத இறைவனின் செயலாக கண்டு, அறிவிப்பது அவர்களின் விசுவாச அறிக்கையாகும் (இச. 26: 5-9; திபா. 79, 105). அவர்களுக்கு விசுவாசம் என்பது இறைவனின் அன்பை உயிருள்ள விதத்தில் நினைவு கூர்ந்து வாழ்வதாகும் (திபா. 133).

## இறைவாக்கினரின் விசுவாசம்

இஸ்ரயேலரின் விசுவாசம் இன்னலுக்கு உட்பட்டது. அவர்கள் விசுவாசத்தை அழித்த சிலைவழிபாட்டையும் (ஓசே. 2: 7-15; எரே. 2: 5-13), அவர்களின் வழிபாட்டில் உண்மைத் தன்மையை அழித்த புறச்சடங்குகளையும் (ஆமோ. 5: 21; எரே. 7: 22..), ஆயுத பலத்தால் மீட்பைத் தேடுதலையும் (ஓசே. 1: 7; எசா. 31: 1..) இறைவாக்கினர்கள் கண்டனம் செய்தார்கள். உலகைப் படைத்தவருடைய (எசா. 40: 28..), வரலாற்று ஆண்டவருடைய (எசா. 41: 1-7; 44: 24..) வல்லமையை இறைவாக்கினர்கள் பறைசாற்றினார்கள். அவர்களுக்கு இஸ்ராயலேரின் விசுவாசம் அவர்களது வருங்காலப் பிணைப்பாயிற்று. அதாவது வருங்காலத்தில் இஸ்ரயேலர்கள் ஒரு "விசுவாசிகளின் சமூகமாக" இருப்பதோடு, அவர்களின் விசுவாசம் பிறநாடுகளையும் திறந்த மனத்துடன் தன்னுள் ஏற்றுக் கொள்ளும் போக்கைப் பெறுவார்கள் என்பது எதிர்நோக்காகும். ஏனெனில் அவர்களும் விசுவாசத்தில் ஒரே இறைவனை ஏற்று (எசா. 43: 10), அவரை அறிக்கையிட்டு (எசா. 45: 14), அவரது வல்லமையால் தங்கள் மீட்பை எதிர்பார்ப்பர் (எசா. 51: 5..) என்பது இறைவக்கினரின் நம்பிக்கையாகும்.

## இஸ்ரயேல் மறைசாட்சிகளின் விசுவாசம்

இஸ்ரயேலர்கள் நாடுகடத்தலுக்குப் பிறகு இரத்தம் சிந்தும் வேத கலாபனையால் தாக்கப்பட்டார்கள் (1மக். 1: 62; 2: 29-38). இறைபிரசன்ன மின்மையை எதிர்கொண்ட போதும், அவர்கள் விசுவாசம் தளரவில்லை. அவர்கள் இறை பிரமாணிக்கத்தில் உறுதிகொண்டு அழியா வாழ்வை எதிர்நோக்கி விசுவாசத்தில் ஆழமடைந்தார்கள் (2மக். 7; தானி. 12: 2.; ஞான. 2: 19; 3: 1-9). அவர்கள் விசுவாசம் வலுவடைந்து, எஞ்சியோரையும் சிறிது சிறிதாக கூட்டிச் சேர்த்தது. இஸ்ரயேலை விடுவிக்க போராடாது சாகமாட்டோம் என்று துணிந்தவர்களை உருவாக்கியது (1மக். 2: 11, 39). அவர்கள், வலியவருடனான போராட்டத்தில், இறைதுணையில் தங்கள் வெற்றியைத் தேடினார்கள் (1மக். 2: 49-70; யூதி. 9: 11-14). அவர்கள் விசுவாசம் முழுமை பெற, அவர்கள் இன்னும் இறைவனுக்காக காத்திருக்க வேண்டியிருந்தது (எபி. 12: 2).

## இயேசுவில் சின்னஞ் சிறியோரின் விசுவாசம்

நசரேத்தூர் இயேசுவைச் சுற்றி "சின்னஞ் சிறியோரைக்" கொண்ட எளியோரின் கூட்டம் இருந்தது (மத். 10: 42; 11: 20). இயேசு மீதும், அவரது வார்த்தை மீதும் கொண்ட நம்பிக்கையே அவர்களை இணைக்கும் பாலமாக அமைந்தது (மத். 18: 6-10). "மரணம் மட்டும் கீழ்ப்படிந்த இயேசு" (பிலி. 2: 7), தம் மரணத்தால் எளியவர்களின் விசுவாசத்தை (லூக். 23: 46; மத். 27: 46) "நிறைவுக்கு இட்டுச் செல்கிறார்" (எபி. 12: 2). அவரது உயிர்ப்பின் வழியாக, "சாவினின்று தன்னை விடுவிக்க வல்லவர்" (எபி. 5: 7) மீது தான் கொண்ட முழு நம்பிக்கையை இயேசு வெளிப்படுத்தினார்.

இயேசுவின் சீடர்களுக்கு விசுவாசத்தில் இயேசுவைப் பின்செல்வது கடினமாயிற்று. கவலை, அச்சத்தினின்று அவர்களை விடுவிக்கும் விசுவாசம் அவர்களுக்குத் தேவையாயிற்று (மத். 16: 5 - 12; மாற் 4: 35-41; லூக். 12: 22-32). இயேசுவின் வாழ்வில் கிடைத்த விசுவாசத்தில் நிலைத்திருக்க அவர்களுக்கு அதிக விசுவாசம் தேவைப்பட்டது (மாற். 15: 31). இயேசுவின் சீடர்களின் விசுவாசம் திருமறையின் விசுவாசமாக மாறுவதற்கு, அவர்கள் இன்னும் அதிக உறுதி பெற வேண்டியிருந்தது.

## திருச்சபையின் விசுவாசம்

இயேசுவின் உயிர்புக் காட்சிகளை எதிர்கொண்டபோது (மத். 28: 17; மாற்: 16: 11-14; லூக். 24: 11), பலவித தயக்கங்களுக்குப் பின்னர், இயேசுவின் உயிர்ப்பில் சீடர்கள் நம்பிக்கை கொண்ட நிலையில் உறுதியான முதற்கட்ட விசுவாசம் தொடங்கியது. அவர்கள் இயேசு சொன்னவற்றுக்கும், செய்தவற்றுக்கும் சாட்சிகளானார்கள் ( திப. 10: 39). இயேசுவை "ஆண்டவரும்", "கிறிஸ்துவும்", என்று அவர்கள் அறிவித்தார்கள் (திப. 2: 36-38). அவர்கள் விசுவாசம் அவர்கள் வாழ்வைத் தியாகம் செய்யும் அளவுக்கு உறுதியடைந்தது. பிறரும் இயேசுவில் விசுவசித்து வாழ அழைத்தார்கள் (திப. 2: 28; 10: 43). திருச்சபையின் விசுவாசம் பிறந்தது. தொடக்கத்தில், திருத்தூதர்களின் போதனையைக் கேட்டல், நற்செய்தியை ஏற்றல், இயேசு ஆண்டவர் என அறிக்கையிடுதல் (திப. 2: 41..; 15: 7; 1கொரி. 12: 3; 15: 2; உரோ. 10: 9; 1யோவா. 2: 22) என்பன விசுவாசமாகும்.

இவ்விசுவாசம் மனித ஞானத்துக்கு அப்பாற்பட்டது (1கொரி. 1: 17-37; யாக். 2: 1-5; 3: 13-18), கிறிஸ்துவையும், அவருடைய அன்பையும் பற்றிய அறிவினால் வெளிப்படுத்தப்பட்டது என்கிறார் புனித பாவுலு. திருவெளிபாட்டு நூல் கிறிஸ்தவ விசுவாசத்தை, "சாவுக்குட்பட்டேனாயினும், இதோ, நான் என்றென்றும் வாழ்கிறேன்" (திவெ. 1:18) என்று கூறிய இயேசுவின் மீது கொண்ட பாஸ்கா விசுவாசம் என்கிறது. அவ்விசுவாசம் இறைவனை "அவர் இருப்பது போல் அவரைக்காணும் நாளை எதிர்கொள்ளச் செய்யும் விசுவாசமாகும்."

## விசுவாசத்தில் வாழ்வு

திருமுழக்கு வழியாக இயேசுவில் விசுவாசம் கொண்டோர் இறைதிட்டத்துக்கு உட்பட்டு, நல்நெறியில் ஒழுகி வாழ அழைக்கப்பட்டுள்ளனர் (திப. 6: 7; 2தெச. 1: 8; யாக். 1: 21-25; 2: 12...). இதன் வழியாக விசுவாசம் செயல்படுகின்றது. இயேசுவின் முன்மாதிரிகையைப் பின்பற்றி, சாவை எதிர்கொள்ளும் அளவுக்கு ...

தொடர்ச்சி 15ஆம் பக்கம்....

# பரீட்சைக்குத் தோற்றும் மறையாசிரியர்களே! அஞ்சவேண்டாம்.

ஆக்கம் : N. இவோண் பிரீசியா பெர்னாண்டோ.
(ஆசிரியை புனித பேதுரு கல்லூரி)

இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றைவிட்டுத் திரும்பினார். பின்னர் அவர் அதே ஆவியால் பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார் (லூக் 4:1-2) இத்திருவிவிலிய வாசகம் மறையாசிரியராகிய ஒவ்வொருவருக்கும் சாலப்பொருந்தும். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் திருச்சபையின் முப்பணிகளின் பொறுப்பு அளிக்கப்படுகின்றது. அதிலும்



இறைவாக்குப் பணியை தம் வாழ்வால் சான்று பகரவும், இறைவார்த்தையை போதிக்கவும் அழைக்கப்பட்டுள்ள விசேட பணியாளர்கள் நீங்கள். காலம், நேரம், இடம் பாராது எந்நிலையிலும் பணிக்காகத் தம்மைத் தயார் நிலையில் வைத்திருப்பவர்கள். அன்று மரியாள் மீட்புத் திட்டத்திற்காக இறைவனால் அழைக்கப்பட்டபோது தன் நிலை உணர்ந்து **"இது எங்கணம் ஆகும்?"** என்று அங்கலாய்த்தபோதும் இது இறைவனின் செயற்பாடு என்று அறிந்தவுடன் எவ்வித தயக்கமுமின்றி **"ஆம்"** என்று கூறி அனைத்து அவமானங்களையும், சவால்களையும் தன் சிரமேற் கொண்டு அனைத்தையும் தன் மனதில் இருத்தி சிந்தித்து வந்தாள். இன்று ஒவ்வொரு மறையாசிரியரும் அவ்வாறே அனைத்தையும் தாங்கி சவால்களை வென்று மறைப்பணி வாழ்வினில் வெற்றிநடை போடுகின்றனர். இவ்வாறெல்லாம் செய்கின்றோமே பரீட்சை எமக்கு எதற்கு? என்ற வினா உங்கள் மனதில் எழக்கூடும். பரீட்சையின் வழியாக ஒவ்வொரு மறைப்பணியாளனும் புடமிடப்படுகின்றான். ஒவ்வொருவனது அறிவும் கூர்மையாக்கப்படுகின்றது. வாழ்வின் அனுபவங்களை மீட்டுக்கொள்ளப்படுகிறது. கிறிஸ்து மூன்று முறை சோதிக்கப்பட்டார். சோதனைகளை வென்றார். பணிவாழ்வை பயனுரு விதமாக அமைத்துக் கொண்டார். எமது அறிவை ஞானத்துடன் பயன்படுத்தி எமது பணிவாழ்வை பயனுரு விதத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக நாம் மங்கள வார்த்தை கூறுகின்றோம். ஆனால் எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டதென்று எமக்குத் தெரியாது. இதையே நாம் கற்றறிந்து கொள்கின்றோம். திருச்சபையின் மாற்றங்களை அறிந்து கொள்கின்றோம். எமது வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகளை நாம் அனுபவமாகக் கருதுவதில்லை. அவற்றை அனுபவமாகக் கருத உதவுகிறது இப்பரீட்சைகள். வினாக்களில் முதலாம் பகுதி கட்டமைப்பு வினாவாகவும், இரண்டாம் பகுதி உங்களின் வாழ்வின் அனுபவங்களோடு தொடர்புடையதாக தரப்படுகின்றது.

உதாரணமாக வினா 1 கிறிஸ்து எத்தனை நாள் சோதிக்கப்பட்டார்? இதற்கான விடை 3 நாட்கள் இவ்விடையைத் தவிர வேறு எந்த விடையும் பொருந்தாது. ஆனால் இரண்டாம் வினா இவ்வாறாக அமையும். 2. இயேசு தன் சோதனைகளை வென்று தன் பணிவாழ்வை இறைவிசுவாசத்துடன் எவ்வாறு ஆரம்பித்தாரோ மறையாசிரியராகிய நீரும் உமது வாழ்வின் சவால்களை வென்று இறைவிசுவாசத்துடன் உமது பணிவாழ்வை எவ்வாறு ஆரம்பிப்பீர் என்பதை 100 சொற்களில் தருக? இவ்வினாவிற்கான விடையை நீங்கள் உங்கள் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு எழுத வேண்டும். அனுபவங்கள் வேறுபட்டவை. எனவே ஒவ்வொரு மறையாசிரியரினதும் அனுபவங்கள் பல்வேறுபட்டவை. அவரவர் தமது நிலையிலிருந்தே அவ்வாறான விடையை எழுத வேண்டும். 1ம், 2ம், 3ம் பரீட்சையின் ஒரு பகுதியாக ஆய்வுக்கட்டுரையொன்று சமர்ப்பிக்க வேண்டும். கட்டுரையா? 2000 சொற்களா? அங்கலாய்க்க வேண்டாம். இக்கட்டுரையில் நீங்கள் உங்கள் பணியினை, உங்கள் மறைமாவட்டத்தில் நீங்கள் ஆய்ந்து, ஆராய்ந்து பார்க்கின்றீர்கள். இதன் வழியாக உங்களை நீங்களே முழுமையாக ஆய்ந்து, ஆராய்ந்து பார்க்கின்றீர்கள். அறிகின்றீர்கள். அத்துடன் மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை என அரசாங்கத்தால் நடாத்தப்படுகின்றது. O/L பரீட்சை எடுத்த அனைவரும் இப்பரீட்சையில் தோற்றலாம்.

இதிலும் உங்களின் விசுவாச வாழ்வு, அருளடையாள வாழ்வு, செபவாழ்வு என நீங்கள் உங்கள் வாழ்வை அலசி ஆராய்கின்றீர்கள். எனவே மறையாசிரியரே பிள்ளைகளே உங்களை நீங்கள் அமைத்துக் கொள்ளுங்கள். வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள். அஞ்சாதீர்கள். அறிவுடன் வாழ்வை முன்னெடுத்துச் செல்லுங்கள். வாழ்வின் உச்சத்தில் ஏறிச் செல்ல கல்வியை, பரீட்சையை ஏணியாக்கிக் கொள்ளுங்கள். பரீட்சையில் தோற்றாலும், தோல்வியே வெற்றியின் முதற்படியென எண்ணி வாழ்வினை மகிழ்ச்சியுடன் முன்னெடுத்துச் செல்லுங்கள் என்றும் மகிழ்வுடன் இருங்கள்.

விசேட விதமாக மறையாசிரியரே சவால்களைக் கண்டு துவளாதீர்கள். துணிவு கொள் துணிந்து நில் இறைவன் என்றும் உங்களுடன் இருப்பார். மறைபணியாளனின் வாழ்வும், பாதங்களும் எத்துணை அழகானவை.



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

# அருளடையாளங்கள் ஓர் அலசல்

10




## திருச்சபையில் தூய ஆவியார்

இயேசுவினுடைய இறப்பிற்கு பிற்பாடு, சீடர்கள் யூதர்களுக்கு அஞ்சி வாழ்ந்தார்கள். தங்கள் எதிர்பார்ப்புக்கள் தவிடுபொடி ஆக்கியது போன்ற உணர்வு, கனவுகள் கானல் நீராகிப் போனது போன்ற ஏமாற்றம். இந்நிலையில் உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்கு பலமுறை தோன்றினார். சீடர்களுக்குத் துணிவையும், நம்பிக்கையும் கொடுத்தார். மேலும் தான் வாக்களித்த துணையாளரை விண்ணகம் சென்றபின் அனுப்பி வைத்தார். இது இயேசு உயிர்த்த ஐம்பதாம் நாள் நிகழ்ந்தது. சீடர்களும், இயேசுவின் தாய் மரியாவும், இன்னும் பல பெண்களும் மேல்மாடி அறையில், வாக்களித்த துணையாளரை எதிர்பார்த்து காத்திருந்தனர். அப்போது தூய ஆவி அவர்கள் மீது இறங்கி வந்தார்.

“பெந்தகோஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள். திடீரென கொடுங்காற்று வீசுவதுபோன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்து. மேலும் நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்” (தி.ப 2:1-4)

“இறுதி நாளில் மாந்தர் யாவர் மேலும் தூய ஆவியை பொழிந்தருள்வேன்” என்ற யோவேல் இறைவாக்கினரின் கூற்று பெந்தகோஸ்தே நாளன்று நிறைவேறியது. தூய ஆவியைப் பெற்றுக் கொண்ட அப்போஸ்தலர்கள் இயேசுவே ஆண்டவர் என்ற நற்செய்தியை மக்களுக்கு பறைசாற்றினர். இயேசுவின் இறப்பிற்குப் பின் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போன அப்போஸ்தலர்கள் தூய ஆவியாரின் வருகைக்குப் பிற்பாடு கர்ச்சிக்கும் சிங்கங்களைப் போல் துணிவுடன் நற்செய்தியைப் பரப்பினர். உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்தவர்கள், தங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்தார்கள். இயேசுவுக்கு சாட்சியம் பகர்வதனால் ஏற்படும் துன்பங்களை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டனர்.

நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும், நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்குச் சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம். இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படுமாறு உயிரோடிருக்கும்போதே நாங்கள் அவரை முன்னிட்டு எந்நேரம் சாவின் வாயிலில் நின்று கொண்டிருக்கின்றோம்.

மேலும் தம்மோடு இருந்து செயலாற்றிய தூய ஆவியின் வல்லமையினால் அப்போஸ்தலர்கள் புதுமைகள் செய்தனர். கோவிலின் வாயிலில் இருந்த கால் ஊனமுற்றவர் பேதுருவினால் குணமாக்கப்படுகின்றார். “பேதுரு அவரிடம் வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும் என்று கூறி, அவரது வலக்கையைப் பற்றிப் பிடித்துத் தூக்கிவிட்டார்கள். உடனே அவரது காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன. அவர் குதித்தெழுந்து நடக்கத் தொடங்கினார். துள்ளி நடந்து. கடவுளைப் போற்றியவாறே அவர்களோடு கோவிலுக்குச் சென்றார். அவர் நடப்பதையும், கடவுளைப் போற்றுவதையும் மக்களனைவரும் கண்டனர். அவர்கள் எல்லாரும் கோவிலின் அழகு வாயில் அருகே பிச்சைக்கேட்டுக் கொண்டிருந்தவர் இவரே என்று அறிந்து கொண்டனர். நடந்ததைப் பார்த்துத் திகைப்பு மிகுந்தவராய் மெய்மறந்து நின்றனர். (தி.ப 3:6-10)

முதல் கிறிஸ்தவர்கள் தூய ஆவியில் ஓர் அன்பின் குடும்பமாக ஒன்றுபட்டனர். ஒரே உள்ளமும், ஒரே உயிருமாக வாழ்ந்தனர். திருத்தூதர் பணிகள் நூல் முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைதனை மிகச் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்தியம்புகிறது. “அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது... நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். (2:42-45)

இவ்வாறு பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் செயலாற்றிய தூய ஆவி இன்றும் திருச்சபையில் செயலாற்றுகின்றார் என்பதை நாம் மறந்து போகக்கூடாது. திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் ஆகிய அருளடையாளங்களைப் பெறுகின்ற ஒவ்வொரு நபர்கள் ஊடாக செயலாற்றுகின்றவராக இருப்பவர் தூய ஆவியானவர். இயேசுவின் இறையாட்சிப் பயணத்தில் அவரோடு இணைந்த சீடர்களைப் பின்பற்றி இன்று நாமும் அவரது இறையாட்சி கனவை நனவாக்க தூய ஆவியினால் பலப்படுத்தப்படுகின்றோம். தூய ஆவியால் நிரப்பப்பட்ட இயேசு, இறையரசுப் பணிக்காக தமது வாழ்வையே அர்ப்பணித்தார். இறைத்தந்தையின் நற்செய்தியைப் போதித்தார். சென்ற இடமெல்லாம் மக்களுக்கு நன்மையே செய்தார். நீதிக்காகப் போராடினார். உண்மைக்குச் சான்று பகர்ந்தார். அதற்காகத் தம் உயிரையும் கையளித்தார். இயேசுவைப் போல் திருச்சபையும் பணி செய்ய அழைக்கப்படுகின்றது. அதற்காகவே அனுப்பப்படுகின்றது. இயேசு போதித்த இறையாட்சி திருச்சபையின் மூச்சு. இறையாட்சியை உருவாக்குவதே திருச்சபையின் பணி. எனவே இறையாட்சிக்காகவே திருச்சபை உள்ளது என துணிந்து சொல்லலாம். திருமுழுக்கின் போது ஒருவர் கிறிஸ்துவைப் போன்று, கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளுக்காக அழைக்கப்படுகின்றார். இறைவாக்குரைக்கும் பணி, குருத்துவப் பணி, வழிநடத்தும் பணி. உறுதிப்பூசுதல் பெறும் ஒருவர் இப்பணிகளைச் செய்ய தூய ஆவி ஒருவரை வலுவூட்டி பலப்படுத்துகின்றார். மேற்கூறிய மூன்று பணிகளையும் இரத்தினச் சுருக்கமாகப் பார்ப்போம்.

### இறைவாக்கு உரைக்கும் பணி

நாம் வாழும் சூழலில், எல்லா வேளைகளிலும், வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்கேற்ப கடவுளின் வார்த்தையை உரைப்பது இறைவாக்குப் பணியாகும். இயேசு மக்களின் ஏக்கங்கள் எதிர்பார்ப்புக்களை நன்கு அறிந்திருந்தார். அவர்களின் பிரச்சினைகள் போன்றவற்றை உணர்ந்து, காலத்தின் அறிகுறிகளை இனங்கண்டு தன் பணிதனை மேற்கொண்டார். அவரது இறைவாக்குப் பணி மக்களின் விடுதலை வாழ்வை மையங்கொண்டதாக அமைந்து இருந்தது. நீதிக்காக குரல் கொடுத்தார். தனது பணி வாழ்வின் தொடக்கத்திலேயே தான் எதற்காக வந்தேன் என்பதை எசாயாவை மேற்கோள் காட்டி வெளிப்படுத்துகின்றார்.

“ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது, ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்வோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்” (லூக் 4:18-19)

உறுதிப்பூசுதல் பெற்ற ஒருவர் இப்பணிதனை மேற்கொள்ள வேண்டும். இதற்காக ஒருவர் இறைவார்த்தையை வாசிக்கவேண்டும். நாளாந்தம் இதனைச் செய்ய வேண்டும். தியானிக்க வேண்டும். இறைவனுக்குச் செவி கொடுக்கவேண்டும். குடும்பத்தில், பள்ளியில், தொழில் செய்யும் இடத்தில், பங்கில் இப்பணியைச் செய்யவேண்டும். இதனை வெறுமனே வாய்ச் சொல்லால் செய்வது அல்ல. மாறாக வாழ்வால் செய்ய வேண்டியது. இன்று வாழ்க்கை சாட்சியம் காலத்தின் கட்டாயத் தேவை. பழைய ஏற்பாட்டு இறைவாக்கினரைப் போன்று அநீதிகளைக் கண்டிக்க, அக்கிரமங்களுக்கு எதிராக குரலெழுப்ப, நலிந்தவர் சார்பாக நின்று, மக்களை மனமாற்றத்திற்கு அழைக்க, இறைவன் உறுதிப்பூசுதல் பெறும் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார்.

### புனிதப்படுத்தும் பணி – குருத்துவப் பணி

இயேசு தனது பணிவாழ்வு, மற்றும் இறப்பு, உயிர்ப்பினால் மக்களை மீட்டு அவர்களுக்கு புதுவாழ்வு வழங்கினார். பழைய ஏற்பாட்டில் செம்மறி ஆடுகள் மக்களின் பாவக்கழுவாயாக இருந்தன. மக்களின் பாவங்களை சுமந்து பலியாகியது செம்மறி ஆடுகளே. அவற்றின் இரத்தமே. ஆனால் புதிய ஏற்பாட்டில் அனைத்து உலகின் பாவங்களை தம்மேற் சுமந்து கொண்டு எக்காலத்திற்குமே உரிய பலிப்பொருளாக செம்மறி ஆடாக தம்மையே பலியாக்கினார். திருமுழுக்கு பெற்ற ஒருவர் கிறிஸ்துவின் குருத்துவப் பணியில் பங்கேற்கின்றார்.

கிறிஸ்துவின் புனிதப்படுத்தும் இக்குருத்துவப் பணியில் ஒருவர் எவ்வாறு பங்கேற்கமுடியும்? திருவழிபாட்டில் பங்கேற்பதன் மூலம் திருமுழுக்கின் வழியாக திருவழிபாட்டில் பங்கேற்கும் ஒருவர் இறைவனால் புனிதப்படுத்தப்படுகின்றார். மேலும் பிறருக்காக வாழ்வை அர்ப்பணிப்பதன் மூலம் இப்பணியில் பங்கெடுக்கின்றோம். கிறிஸ்து தம்மை பலியாக்கியே தம்மை கடவுளுக்கு உகந்தவராக்கினார். அதே போன்றே நாமும் மற்றவர்களுக்காக எம்மை அர்ப்பணிக்கும் போது (கணவன் - மனைவி, பெற்றோர் பிள்ளைகள், சகோதரர் சகோதரிகள்) என இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். நீதிக்காக, உண்மைக்காக சான்று பகர்ந்து வாழ்வது போன்றன குருத்தவ புனிதப்படுத்தும் பணியின் பரிமாணங்களாகும்.

### வழிநடத்தும் பணி

பழைய ஏற்பாட்டில் மோசே, யோசுவா, சாமுவேல், தாவீது போன்றோர் மக்களை வழிநடத்தினார்கள். இறைவனின் திருவுளத்தை அறிந்து அதற்கேற்ப பல சவால்கள், போராட்டங்களுக்கு மத்தியில் தம் பணிதனை மேற்கொண்டனர். இயேசுவும் தன்னலம் கருதாது தம் மக்களை வழிநடத்தினார். அதேபோன்றே உறுதிப்பூசுதல் பெற்ற ஒருவர், மக்களை அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சமாதானம் கொண்டு வாழ வழிநடத்த வேண்டும். புதிய சமூதாயம் படைக்க வேண்டும்.

அரசியல், சமூக ஈடுபாடு என்பன விசுவாச வாழ்விற்கு முரணானவை அல்ல. இன்று அரசியல் சமூகம் என்பன சாக்கடையாக மாறிக்கொண்டு போகின்றன. இச்சூழமைவிலே ஒவ்வொரு கிறிஸ்தவரும் சமூகப் பொருளாதார, அரசியல் துறைகளில் ஈடுபாடு கொண்டு இவைகளை கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும். வழிநடத்தும் பணி மற்றவரை அடக்கி ஆழ்வதற்கல்ல. மாறாக, பணியாளனாக இருந்து பணிவிடை செய்வதற்கே இவ்வழைப்பு. கிறிஸ்து இயேசுவில் குடிகொண்டிருந்த மனநிலை உறுதிப்பூசுதல் பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரிலும் இருக்க வேண்டும்.

தொடரும்...




## வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி

### 4. உரோமன் கத்தோலிக்க திருச்சபை

இயேசுநாதரால் திருச்சபையில் காணக்கூடிய தலைவராக நியமிக்கப்பட்ட புனித பேதுரு, தமது தலைமைப் பீடத்தை உரோமாபுரியில் ஸ்தாபித்து, அங்கேயே மரணமடைந்தார் என்பதாலேயும், அவருக்குப் பதிலாக வழிவரும் உரோமாபுரியின் ஆயர்கள் திருத்தந்தையர் என்று அழைக்கப்படுவதோடு, அவர்கள் திருச்சபைக்குத் தலைவர்களாயிருந்து, எப்போதும் மேலான அதிகாரத்தை (கண்காணித்து வழிநடத்தும், ஒற்றுமைப்படுத்தும்) கொண்டு திருச்சபையை ஒருமைப்படுத்தி வழிநடத்துவதால், கத்தோலிக்க திருச்சபை உரோமன் கத்தோலிக்க திருச்சபை என்று அழைக்கப்படுகின்றது. கத்தோலிக்க திருச்சபை என்றாலும் உரோமன் கத்தோலிக்க திருச்சபை என்றாலும் ஒன்றே. வேறெந்தச் சபையும் கத்தோலிக்க திருச்சபை அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். (உரோமன் திருப்பலி முறையில் திருப்பலி நிகழ்த்தாது பிற கீழைத்தேய, மேலைத்தேய திருப்பலி முறையில் திருப்பலி நிகழ்த்தும் கத்தோலிக்க சபைகள் உ+ம் சீரோ மலபார் சபை (இந்தியா) பரிசுத்த பாப்பரசரை ஏற்றுக்கொண்டு, ஒரே விசுவாசத்தை அறிக்கையிட்டு வாழ்வதால் அவர்களும் இப்பண்புகளைக் கொண்டு உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினர்களாகவே இருக்கின்றனர்.

உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் மட்டுமே இந்த நான்கு பண்புகளுமுண்டு. இதுவே இயேசு நாதர் ஸ்தாபித்த ஏக சத்திய திருச்சபை. ஏனையவை தப்பறைகளுக்கு எம்மை இட்டுச் செல்பவை. ஆகையால் கத்தோலிக்க திருச்சபையில் மட்டுமே ஆத்தும இரட்சணியம் உண்டு என்பதை எம்மால் அறுதியும், உறுதியுமாய்ச் சொல்ல முடியும்.

### 5. திருச்சபையின் தவறாத நிலைமை

மனிதர்கள் மோட்ச இராட்சியத்தை அடைய திருச்சபை அவசியமாயிருக்கிறதினாலே, இச்சபை எப்பொழுதும் நிலையாயிருக்குமென்றும், வேத சத்தியங்களை எங்கும் போதித்து வரும் என்பதை இயேசுநாதரே திருவுளம் பற்றியிருந்தார். மேலும் நரகத்தின் வாசல் அதை ஒருக்காலும் மேற்கொள்ளாது. ஆகவே ஒரே சத்திய விசுவாசத்தை சீரான முறையில் பழுதில்லாமல் உலக முடிவு வரை வழங்குவது இறைவனின் திட்டமாகும்.

### 6. திருச்சபையின் கண்கண்ட தலைவர் திருத்தந்தை

நமது ஞானப்பிதாவான பரி.பாப்பரசர் புனித பேதுருவிற்குப் பதிலாயிருக்கிறதினாலே திருச்சபையின் கண்கண்ட தலைவராயிருக்கிறார். இயேசுநாதரின் பதிலாளியாய் இருக்கிறார்.

1. இவரே சகல ஆயர்களையும், குருக்களையும், விசுவாசிகளையும் ஆண்டு வழிநடத்தும் மேலான அதிகாரம் பெற்றவர்.
2. ஆகவே, இவராலே ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஆயர்களும், அந்த ஆயர்களால் அனுப்பப்படுகிற குருக்களும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படியே, விசுவாசம், நல்லொழுக்கம் பற்றிய விடயங்களில் போதிக்கும்போது கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

### 7. திருத்தந்தையின் தவறாத வரம் / வழுவா வரம்

ஆகவே, புனித பேதுருவின் இடத்தில் வழிவரும் திருத்தந்தையர்களுக்கு ஆண்டவர் ஒரு விசேட வரத்தைக் கட்டளையிட்டிருக்கிறார். அது வழுவா / தவறாத வரமாகும். அதாவது, அவர் விசுவாச சத்தியங்களைப் பற்றியாவது, நல்ல நடத்தையைப் பற்றிய ஒழுங்குகளைப் பற்றியாவது யாதொரு சத்தியத்தைத் தீர்மானித்து விசுவாசிகளுக்குப் போதிக்கும்போது அதில் அவர் எள்ளளவேணும் பிசகிப் போகமாட்டார். ஆகவே அவர் கற்பிக்கிறபடி நடக்கிறவர்கள் ஒருக்காலும் மோசம் போக மாட்டார்கள் என்பதும் உண்மையே

**வினாக்கள் :**

1. கத்தோலிக்க திருச்சபை உரோமன் கத்தோலிக்க திருச்சபை என அழைக்கப்படுவது ஏன்?
2. திருச்சபையின் கண்கண்ட தலைவர் யார்? அவருக்கு இருக்கும் விசேட வரம் என்ன? அது எதற்காக?

*தொடரும்....*

**விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**

*வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி*
*ஆசிரியர், ஞான ஒளி,*
*கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,*
*இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய*
*மாவத்தை, கொழும்பு - 08.*

குடும்பம் அங்கம் 85
குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*

# மனப்பான்மை (ஹியூமன் பிஹேவியர்)



தேர்தலில் வாக்குப்போடச் செல்கிறேன். ஒருவருக்கு வாக்குப்போட வேண்டும் என்றால் அவர் எனக்கு நல்லவராகத் தெரிகிறாரோ அவருக்கே வாக்களிப்பேன். இங்கே எனது மனப்பான்மை என்னைத் தூண்டுகின்றது.

**எனது பெறுமதிகள்** மிகவும் முக்கியமானவை. ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் படித்தவர்கள். கணவன் வைத்தியர். மனைவியும் தொழில் செய்கிறார். இருவருக்குமிடையில் ஒரே சண்டை ஏற்பட்டது. காரணம் கணவன் பெறுமதி என்று பணத்தையே நினைத்தார். அதனால் பணம் சம்பாதிப்பதிலேயே காலத்தைச் செலவழித்தார். பிள்ளைகளும் பிறந்தனர். ஆனால் மனைவி பெறுமதி என நினைத்தது சமுதாய சேவை செய்வதையே. அவளது மனப்பான்மை அப்படிப்பட்டது. கணவன் பெறுமதி என நினைத்தது பணம் சேர்ப்பதையே அவரது மனப்பான்மை அப்படிப்பட்டது. இங்கே இருவருடைய பெறுமதிகள் இரண்டுக்கும் இடையே போட்டியும், எதிரும் புதிருமாக இருந்தன. **எமது செயலின் பின்னணியில் எமது ஆளுமை, மனப்பான்மை பெறுமதிகளும் உள்ளன.**

மனப்பான்மை, பெறுமதிகள் ஒருவருக்கு எங்கிருந்து வந்தன. ஆகாயத்திலிருந்து விழுந்ததா? இல்லை **ஒருவர் வாழ்ந்த மனிதச் சூழலிலிருந்தே வந்தன.** ஒரு பிள்ளையின் முதல் சூழல் அவன் வாழ்ந்த குடும்பமே. குடும்பத்திலே நெருக்கமாக உறவு கொள்வோர் இருப்பதால் முதல் சூழல் குடும்பமே. கூட்டுக் குடும்பத்தில் ஒருவரிடமிருந்து கிடைக்காத பாதுகாப்புணர்வு மற்றவரிடமிருந்து கிடைக்கும். தனிக்குடும்பத்தில் வாழ்ந்திருந்தால் அனுபவம் வேறு விதத்தில் இருக்கும்.

அதேபோன்று கிராமச் சூழலுக்கும், நகரத்திற்கும் வேறுபாடு உண்டு. பெறுமதிகள், மனப்பாங்குகள் மாறுபடும் இன்று எமது சூழலில் பெற்றோர் கல்வி இல்லை. க.பொ.த சாதராண (O/L) பரீட்சை, க.பொ.த உயர்தர (A/L) பரீட்சையைவிட மன வளர்ச்சி முக்கியம். **மனம், உணர்ச்சி, பெறுமதி, மனப்பான்மைகள் வளர்வது பாடசாலையில் அல்ல. வீட்டிலேயே.** இந்த அனுபவங்கள் ஒருவரது அடிப்படைத் தேவைகள் அத்தோடு அன்பு, கவனிப்பு, பாராட்டு கிடைக்கவேண்டும். பிள்ளைக்குத் தண்டனை கொடுப்பது எப்படி? அதன்மூலம் பிள்ளைக்கு ஏற்படும் உணர்வு என்ன? மனம் நடத்தை வளர இப்படிப்பட்ட அறிவு பெற்றோருக்குத் தேவை. இப்படிப்பட்ட அறிவு ஆகாயத்திலிருந்து வருவதில்லை. படிக்கவேண்டும் பிள்ளைகளைத் திருத்துவதற்கு முன் பெற்றோர் திருந்தவேண்டும். இவ்வாறு செய்தால் நல்ல சமுதாயம் உருவாகும். பிள்ளை பிறக்க முதல் தாயின் வயிற்றில் இருக்கும்போதே வெளிச்சூழலால் பிள்ளையில் தாக்கத்தை ஏற்படுத்தும் உணர்வுகள பிள்ளைக்கு விளங்கும். பெற்றோர் அடிக்கடி சண்டை பிடிப்பது, பெற்றோர் பாடல்பாடிச் சந்தோஷமாக இருப்பது. இரண்டாவது பிள்ளை பிறந்தபின் முதலாவது பிள்ளையில் தாக்கம் ஏற்படுவது...

**தொடர்ச்சி 15ஆம் பக்கம்**




1890இல் 13ம் சிங்கராயர் பாப்பரசராக இருந்தபோது இந்தியா, பர்மா, இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளுக்கு ஒரு திருப்பணிக்கல்லூரியை அமைக்கும் பொருட்டு மென்சிஞ்சோர் லடிஸ்லோஸ் என்பவரிடம் அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட போது எழில் கொஞ்சும் பசுமை படர்ந்த கண்டி மாநகரின் அம்பிட்டியா என்னும் இடத்தில் இக்கல்லூரியை நிறுவினார். 1893இல் இக்கல்லூரி இயேசு சபைத் துறவிகளிடம் கையளிக்கப்பட்டது.

இக்கல்லூரியின் முதல் பொறுப்பாளராக அருட்பணி. சில்வெயின் கொறோஸ் ஜுன் நியமிக்கப்பட்டார். இக்கல்லூரிக்கு எமது நாட்டிலும், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து மாணவர்கள் வந்து பயிற்சி பெற்று திருநிலைப்படுத்தப்பட்டு தமது நாடுகளில் பொறுப்புக்களை ஏற்றனர். மேலும் 1926இல் கண்டி பாப்பிறைத் திருப்பணிக் கல்லூரி மெய்யியல், இறையியல் போன்ற பட்டங்களை வழங்கும் தகைமையை உரோமையில் இருந்து பெற்றுக்கொண்டது. இக்கல்லூரியானது தனது இருப்பிடத்தை இந்தியாவின் பூனா என்ற இடத்திற்கு மாற்றும் வரையில் 700 மாணவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டதன் 50 பேர் ஆயர்களாகவும், 3பேர் கர்தினால்மார்களாகவும் அபிசேகம் செய்யப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வளர்ச்சி பெற்ற இக்கல்லூரி இலங்கை அன்னையின் தேசிய குருத்துவக் கல்லூரியாக 1955ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுத் தனது பொன்விழாவைக் கொண்டாடி இலங்கைத் திருச்சபையின் உயிர்நாடியாகத் திகழ்கின்றது. இவ்வாறு வளர்ந்துவரும் இக்கல்லூரி ஆன்மீக உருவாக்கம், கல்விப்பணி, மற்றும் மனித உருவாக்கம் என்றும் முப்பணிகளை ஆற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆன்மீக உருவாக்கம் என்னும் போது ஒவ்வொரு நாளும் திருப்பலியும், மறையுரையும், நடைபெறுவதன் மூலம் ஆன்மீகம் வளர்க்கப்படுகின்றது. இவற்றோடு மாதாந்த தியானம், வருடாந்த தியானம், பல்வேறு நிலைப்பணியேற்பு மற்றும் தியாக்கோன் பட்டமளிப்பு, இறுதிவருட மாணவர்களின் மறையுரை போன்ற பல்வேறு நிகழ்வுகளால் ஒவ்வொரு அருட்சகோதரனும் தனது ஆன்மீகத்தல் வளருகின்றனர்.

அடுத்து மனித உருவாக்கம் பற்றிப் பார்க்கும் போது இக்குருமடத்தில் ஆங்கில மன்றம், தமிழ் மன்றம், சிங்கள மன்றம் என்பன இயங்கி வருகின்றன. இதன்மூலம் ஒழுக்கம், கலாச்சாரம், நடனம், நாடகம் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றித் தங்களையே வளர்த்துக் கொள்கின்றார்கள். அத்துடன் கலாச்சாரத் திருப்பலிகள், சிறப்பு உரைகள், மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறுகின்றது. விசேட விரிவுரையாளர்கள் அழைக்கப்பட்டு உரைகள் இடம்பெறுவதன் மூலம் எமது மாணவர்கள் மனித உருவாக்கத்தை பெற்றுக் கொள்கின்றனர்.

தொடர்ந்து இக்கல்லூரியின் கல்விப்பணி பற்றிக் குறிப்பிடும்போது இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் 7 வருடக் கல்வியை நிறைவு செய்ய வேண்டியவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய 10இற்கு மேற்பட்ட பாடங்களில் இருமுறை பரீட்சைகள் நடாத்தப்படும். ஏறக்குறைய 35இற்கு மேற்பட்ட குருக்கள் இங்கு கல்வி கற்பிக்கின்றார்கள். இறுதிப் பரீட்சையின் விடைத்தாள்கள் உரோமாபுரியில் திருத்தப்பட்டு புள்ளிகள் இங்கு அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு இக்கல்லூரி இன்றைய உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் குருக்களை பல வழிகளிலும் உருவாக்கி, பல்வேறு பணிகளிலும் அவர்களை வழிப்படுத்தி சிறப்பாக இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பிக்கொண்டிருக்கிறது இக்கல்லூரியின் பணி தொடர இலங்கை மாதாவைத் தொடர்ந்து வேண்டுவோம்.

**அருட்சகோ. ஜெமில்ரன்**
**3ஆம் ஆண்டு இறையியல்**
**தேசிய குருமடம், கண்டி**




## பொதுக்காலத்தின் 29வது ஞாயிறு 19.10.2014

**வாசக விளக்கம்:** தமது வல்லமையை புலப்படுத்த இறைவன் சைரசைத் தேர்ந்தெடுகின்றார். சைரசின் அழைப்பால் இஸ்ரயேல் மக்களுக்கு மீட்பும், பாரசீக மன்னருக்கு ஆளுமையின் ஞானமும் கிடைக்கிறது என்பதை முதல் வாசகம் விளக்குகின்றது. வளமையிலும், வறுமையிலும் வாழக் கற்றுக்கொண்ட பவுல் அடியார் பிலிப்பியருக்கு எழுதிய மடலில் நீங்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசுவில் கடவுளுக்கு என்றும் நன்றி உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று கூறுகின்றார். ஆண்டவர்மீது நம்பிக்கை கொள்வதே வாழ்வின் அடித்தளமாகும். நாம் அடித்தளத்தை விட்டு விட்டு சுவர்களை அலங்கரித்து பெருமைபடக்கூடாது. இன்று நாம் வாழும் சமூகத்தில் குடும்பங்களில் இறைவனுக்கு உரிய இடம் இல்லாமல் போகின்றது. உலக வழிகளுக்கும் ஆசைகளுக்கும் இடம் கொடுக்கலாம். ஆனால் அவை ஆண்டவரின் அரிய-ணையை அபகரிக்காதவாறு ஞானத்தோடு நடந்து கொள்ளவேண்டும். மற்றவர்களுக்கு உரியபங்கை கொடுக்க மறுப்பதும், சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளை தட்டிக்கழிப்பதும் முறையல்ல. மற்றவர்களுக்கு உரியதை அவர்களுக்கு கொடுக்-கும்படி நற்செய்தி கூறுகிறது. எல்லாம் இறைவனுக்கே என்பதை ஞானத்தோடு கூறும் இயேசு, சீசருக்கு உரியதும் கடவுளுக்கு உரியதல்லவா என்பதையும் உணர்த்துகின்றார். ஆண்டவரை நம்புவோம். அவரிடம் தஞ்சம் புகுவோம். நலமுடன் வாழுவோம்.

**முதல் வாசகம் :** எசாயா 45:1,4-6
சைரசுக்கு ஆண்டவர் திருப்பொழிவு செய்துள்ளார். பிற இனத்தாரை அவர்முன் அடி பணியச் செய்வார்.

**பதிலுரைப்பாடல் :** மாட்சியையும், ஆற்றலையும் ஆண்டவருக்குச் சாற்றுங்கள்

**இரண்டாம் வாசகம் :** தெசலோ 1:1-5
உங்கள் நம்பிக்கையையும் அன்பினால் உந்தப்பட்ட உங்கள் உழைப்பையும் உங்கள் மனவுறுதியையும் நினைவுகூர்கின்றோம்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா வார்த்தையைப் பற்றிக் கொள்ளுங்கள். உலகில் ஒளிரும் சுடர்களாக துலங்குவீர்கள் அல்லேலூயா

**நற்செய்தி :** மத்தேயு 22:15-21

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

ஆண்டவரை நம்பி அவரிடம் தஞ்சம் புகுவோம். அனைத்து நன்மைகளையும் பெறுவோம் எனக்கூறி தன் மக்களை வழிநடத்தும் திருச்சபைக்காகவும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் யாவருக்காகவும் உமது திருவருளைப் பொழிந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் தலைவர்களும் மக்களும் தம் கடமைகளை சரிவர செய்து தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் ஒருவருக்குரியதை ஒருவர் அபக-ரிக்காமல் பொது நலன் பேணவும், ஞானத்தோடும் விவேகத்தோடும் நடந்து அனைவரும் மகிழ்வுடன் வாழவேண்டிய சூழல் உருவாக வரமருள வேண்டுமென்று..

கிறிஸ்து இயேசுவைப் பின் செல்லும் மக்களாகிய நாங்கள் அனைவரும் அவர் மீது நம்பிக்கை கொள்ளவும், அவரைப்போன்று எதிராளிகளை மன்னி-க்கவும், அனைவரும் தந்தையாம் இறைவனின் அன்புக்குரியவர்கள் என மதிக்கவும், இவ்வுலகில் உள்ள அனைத்தும் இறைவனுக்கே சொந்தமானவை எனப் புரிந்து கொண்டு வாழவும் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 30வது ஞாயிறு 26.10.2014

**வாசக விளக்கம்:** ஒரு காலத்தில் அடிமைகளாக, அகதிகளாக, அனாதைகளாக இருந்த இஸ்ரயேல் மக்கள் இப்பொழுது ஆண்டவரின் மக்களாக இருந்தனர். அவர்கள் கடவுளுக்கு உண்மையான மக்களாக இருக்கவேண்டும் என்பதற்காக இறைவன் சட்டதிட்ட-ங்களையும், ஒழுங்கு முறைகளையும் வழங்குவதை முதல் வாசகம் விளக்குகின்றது. இரண்டாம் வாசகத்-தால் தூய பவுல் அடியார் இறைநம்பிக்கை எப்படி ஆழமானது, அது எப்படி வளர்கின்றது என்று தெசலோனிய மக்களுக்கு எடுத்துரைக்கின்றார். இறைநம்பிக்கைக்கு அன்பு தான் அடிப்படை என்று எடுத்துரைக்கும் இயேசு பரிசேயர்களையும், திருச்சட்ட அறிஞர்களையும் வாயடைக்கச் செய்கின்றார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் அன்பினைப் பிரதிப-லிக்கும் உள்ளங்கள். ஆனால் நம்மில் எத்தனைபேர் தேவையில் வாடும், வறுமையில் உழலும், துன்பத்தில் துவளும் உள்ளங்களை புறக்கணித்துள்ளோம்? எனச் சிந்திப்போம். அத்தகைய தருணங்களில் நாம் இறைவனை முழுமையாக அன்பு செய்யாது ஏன் நம்மை போலவும் அன்பு செய்யாமல் இருந்திருக்கின்றோம்? இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் மட்டும்போதாது. மாறாக கடவுளை முழுமையாக, உண்மையாக அன்பு செய்யவேண்டும். அதேபோல் அயலானையும் அன்புசெய்ய வேண்டும். பிறரன்பில் இறையன்பைக் காண இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** வி.ப 22:21-27
விதவை, அனாதை யாருக்கும் நீ தீங்கிழைக்காதே

**பதிலுரைப்பாடல் :** என் ஆற்றலாகிய ஆண்டவரே உம்மிடம் நான் அன்பு கூர்கின்றேன்.

**இரண்டாம் வாசகம் :** 1தெசலோ 1:5-10
நீங்கள் கடவுளிடம் திரும்பி அவருடைய மகன் இயேசுவுக்காக காத்திருக்கிறீர்கள்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா என் மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பர் என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார் நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம் என்கின்றார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி :** மத் 22:34-40

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

இறைநம்பிக்கைக்கு அன்புதான் அடிப்படை எனப் போதிக்கும் திருச்சபையையும், அதனை அன்புடனும் பொறுப்புடனும் வழிநடத்தும் திருத்தந்தையையும், எமது ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து இவர்கள் அனைவரும் நம்பிக்கை நட்சத்திரங்களாக துலங்கிட வரமருள வேண்டுமென்று...

பிறரை அன்பு செய்யவில்லை என்றால் எம்வாழ்வு பயனற்றது என்பதை உணர்ந்தவர்களாக எமது நாட்டின் தலைவர்களும், மக்களும் எமது நாட்டிற்குத் தேவையான பிறர் அன்பு பணிகளை ஆற்றுவதில் அனைவரும் ஒருமனத்தோராய் ஒன்றுபட்டு உழைத்திடத் தேவையான வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று..

மனிதனை மறந்து கடவுளை வணங்கும் மனநிலை மாறவும், வாழ்வு மதத்தில் இல்லை, மதம் வாழ்வதில் உள்ளது என்பதை உணரவும், இயேசுவைப் போல் எந்தவித பாகுபாடும் இல்லாமல் அனைவரையும் சமமாக அன்பு செய்து அடுத்தவரின் உள்ளத்தில் ஆண்டவரின் இல்லத்திலும் இடம் பிடிக்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# இறைபணியாற்றுவோரின் கவனத்திற்கு...!



ஆக்கம் : அருட்சகோதரி. டெலாறோஸ் அ.கா

பணிகள் பலவிதம், அதில் ஒவ்வொன்றும் ஒரு விதம். பணி புரிவதில் பல விதமான நோக்கங்களுண்டு. பதவிக்காக, பட்டத்திற்காக பணிபுரிதல். பணத்திற்காக பணிபுரிதல், பகட்டான உணர்வோடு பணிபுரிதல், பக்தியோடு பணிபுரிதல், பசிபோக்க பணிபுரிதல், பரிசுபெற பணிபுரிதல், பாசத்திற்காகப் பணிபுரிதல், கடமைக்காக பணிபுரிதல், கரிசனைக்காக பணிபுரிதல், பழிவாங்கக்கூடியும் பணிபுரியலாம்.

இவ்வாறாக எத்தனையோ எண்ணங்கள், நோக்கங்கள் இருந்தும் இறைபணிக்கென தங்களை அர்ப்பணிப்பவர்களுக்கு, சில முக்கிய அம்சங்கள் இருக்கவேண்டும். நான் இறைவனுக்காக, இறைபணியாற்றுகிறேன் என்று எப்படியும் பணியாற்ற முடியாது. இவ்வாறாக பணியாற்றினால் அது இறைபணிக்கு இடைஞ்சலாகத்தானிருக்கும். அது இறைவனுக்கு சாட்சிபகரும் பணியாக அமையாது. எப்படியும் பணியாற்ற முடியாது. இப்படித்தான் ஆற்றவேண்டுமென ஓர் இலக்கணம் இருக்கத்தான் வேண்டும். முதலாவதாக இறைபணிக்கென என்னை அர்ப்பணித்தால் அது என்ன நோக்கத்திற்கென ஆராய்ந்து பார்ப்பது சாலச்சிறந்ததாகும்.

என் சிந்தனை, சொல், செயலை ஒரு முகப்படுத்தி, ஓர் உயரிய நோக்கத்துடன் இந்த உன்னத பணியை ஆற்றினால் அதன் பயனை அநேகம் பேர் பெறுவர். இறைபணியாற்றுகிறேன் என கூறிவிட்டு என் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் எதிர்மாறாக அமைந்தால் அது பணியல்ல. பணியை இம்சைப்படுத்துதல் போலாகும். இறைபணியாற்றுவது இலகுவான காரியமல்ல. எத்தனையோ, சவால்கள், இடைஞ்சல்கள், இடர்கள், கஷ்டங்களை நாம் சந்திக்க நேரிடும். அனைத்திற்கும் முகம் கொடுத்து முன்னேறிப் பணியாற்றுவதே ஓர் உயர்ந்த இலட்சியமாகும்.

அதுமட்டுமல்ல, பல தியாகங்கள் புரிந்து, பலரின் எதிர்ப்புக்களை சந்தித்து, பலரின் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்து, பலரின் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாத நிலை, பலருக்கு முகந்தாட்சணியமற்ற நிலையில் பணிபுரிவது, இவ்வாறாக அநேக அசௌகரியங்களை சந்தித்து, அதை சமாளித்து, உண்மையாக பணியாற்றும் போதுதான் அப்பணி உயர்ந்த பணியாக அமைகிறது. அடுத்து இப்பணி எவ்வாறு இறைபணியாகின்றது? அதாவது, எனது இறைப்பணி, இறைவனுக்காக, இறைப்பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டு அவருக்கு உண்மைச் சாட்சியாக, உயர்ந்த நோக்கத்துடன் முழுமூச்சுடன் ஆற்றப்படும்போதுதான் அது இறைபணியாகிறது. எனவே இறைபணியாற்றும் நான் கவனத்தில் கொள்ள வேண்டியவை இன்னும் பல

“செய்யும் தொழிலே தெய்வம்” என்பதுபோல பலரும் பயன்பெறக்கூடிய வகையில் பணியாற்ற வேண்டும். ஏனோ தானோவென அரைகுறையாய் பணியாற்றுவது இறைபணிக்கு இழுக்காக அமையும். நான் ஓர் குருவா? குருவிற்குரிய பணியை பயன்பெறக்கூடிய வகையில் பணியாற்ற வேண்டும். திருவார்த்தை, திருப்பலி, திருத்தொண்டு, எவ்வாறாக அமைகிறதென என்னை நான் சீர்தூக்கி பார்ப்பது சிறந்தது. நான் ஒரு அருட்சகோதரியா?, என் பணி என்ன? அப்பணியை எப்படி ஆற்றுகிறேன் என என்னை ஆராய்ந்து, மீளாய்வு செய்து பார்ப்பது சாலச்சிறந்தது. நான் ஒரு மறைப்போதகனா, மறையாசிரியரா? என் பணியை நான் எவ்வாறு ஆற்றுகின்றேன் என்று கவனித்து சீர்தூக்கிப் பார்த்து, ஆற்றுவது வரவேற்கத்தக்கதாகும்.

இறைபணி ஓர் புனித பணி, பல புனிதர்களை உருவாக்கும் பணி. என் பணியால் அநேகம்பேர் பயன்பெற வேண்டும். பலருக்கும் நன்மை பயக்கத்தக்கதாயிருக்க வேண்டும். இறைபணியில் ஈடுபட்டு, இறைவனுக்கு விஷேச விதத்தில் பணிபுரிபவர்கள் சந்திக்க வேண்டிய சவால்கள் ஏராளம். ஆனால் பல தியாகங்களுடன் பணியாற்றும் இப்பணி பல பலன்களை அளிக்கும். ஏனெனில் அது இறைவனால் அவர்களுக்கு அளிக்கப்படும் பரிசு, ஆனால் இலக்கு சரியான முறையில் அமைந்தால்தான் பரிசு தானாக வந்து சேரும். இதை புனித பவுல் அழகாக வருணிக்கிறார். “நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது, நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்” (2தீமோ 4:7-8)

இறைபணிக்கென தங்களை சுதந்திரமாக அர்ப்பணிப்பவர்களின் மனப்பான்மை இவ்வாறாகத்தான் அமையவேண்டும். இறைபணிக்கு ஓர் உதாரணம், எடுத்துக்காட்டு புனித பவுல் “என் கடன் பணி செய்து கிடப்பதே” எனும் முதுமொழிக்கிணங்க இப்பணியை சிரமேற் கொண்டு, உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்து இறைபணிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் இவர். எனவே பணி செய்வோர் கவனத்திற்கு கொள்ள வேண்டியவை - ஏன் பணி செய்கிறேன்? எப்படி பணியாற்றுகிறேன்? யாருக்கு என் பணி? எவ்வாறாக என் பணி அமைகிறது? இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, இறைபணியாற்ற வேண்டிய இறைப்பணியாளர்கள் இவற்றை கவனத்திற் கொள்வது சாலச்சிறந்ததாகும்.

அடுத்ததாக கவனத்திற்க் கொள்ள வேண்டியது. அவர்களின் முன்மாதிரிகையான, எடுத்துக்காட்டான சாட்சியவாழ்வு. நான் சொல்வது, போதிப்பது செயலில் வேறுபட்டதாக அமையக்கூடாது. “அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ, அவற்றையெல்லாம் கடைப்பிடியுங்கள், ஆனால், அவர்கள் செய்வதுபோல் செய்யாதீர்கள்...

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# “மனம் மாறி இறையரசின் மதிப்பீடுகளை அறிவிப்போம்”

**அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது**
**பாப்பிறை மறைபரப்புச் சபை தேசிய இயக்குனர்.**

புனித யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்: “என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டா-விட்டால், அதனால் பயன் என்ன?..... ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, நலமே சென்று வாருங்கள்: குளிர் காய்ந்து கொள்ளுங்கள்: பசியாற்றிக் கொள்ளுங்கள் என்பாரென்றால் என்ன பயன்?.... நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்” (யாக்கோபு 2: 14 - 17).

“உயிர் இல்லாத உடல் போல, செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே”. (யாக்கோபு 2: 26).

அது எவ்வாறாயினும் எம் ஆதிக்கிறிஸ்தவர்கள் பற்றி திருத்தூதர்ப்பணியில் குறிப்பிடப்படுவது வேறொரு விடயமாகும். அதில் நடைமுறை விசுவாசத்தைப்-பற்றியும் அதன் பயன் என்ன என்பதும் தெளிவாகக் கூறப்படுகின்றது. “நம்பிக்கைக் கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை: எல்லாம் அவர்களுக்கு பொதுவாய் இருந்தது” (தி.பணி 4: 32).

“அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது. திருத்தூதர்கள் வழியாகப் பல அருஞ்செயல்களும் அடையாளங்களும் நிகழ்ந்தன. நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைக-ளுக்கேற்பப் பகிர்ந்தளித்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள்: பேருவகையோடும் எளிய உள்ளத்-தோடும் வீடுகள்தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றிவந்தார்கள்: எல்லா மக்களுடைய நல்லெண்ண-த்தையும் பெற்றிருந்தார்கள்: ஆண்டவரும் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார்கள்” (தி.பணி 2: 42-47).

எம் ஆதிக்கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ மதிப்பீடுகளை செம்மையாகக் கடைபிடித்து, கிறிஸ்துவின் மறைக்கிணங்க உண்மையுள்ளவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். அதைப் பார்த்த உரோமைய இராஜ்ஜியத்தின் பிறமதத்தவர்கள் - “இக்கிறிஸ்தவர்கள் வாழும் அழகைப் பாருங்கள்” என்று கூறியதை புத்தகங்களின் மூலம் நாம் வாசித்தும், அறிந்தும் கொண்டுள்ளோம். அவர்களில் அவ்வாழ்க்கைக் கோலத்தைப் பற்றி குறிப்பிட்டது மட்டுமன்றி, அந்நம்பிக்கையை நடைமுறைப்படுத்தி, கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினார்கள். “நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” என்ற கிறிஸ்துவின் வார்த்தைக்கு ஆதிக்கிறிஸ்தவர்கள் கீழ்படிந்தார்கள். அவர்கள் வார்த்தையால் மட்டுமன்றி, அதை வாழ்ந்தும் கிறிஸ்துவுக்கு சாட்சி பகர்ந்தார்கள். அவர்கள் விசுவாசத்தில் உறுதிப்பெற்று, அவர்களுக்கு வரும் சவால்களை எதிர்கொண்டு, கிறிஸ்துவுக்காக உயிரைக் கொடுக்குமளவுக்கும் முன்வந்தார்கள். அன்றிலிருந்து திருச்சபையானது வளர்ச்சியுற்று வந்தது, இரத்தசாட்சிகளாக தம் உயிரைத் தியாகம் செய்தவர்-களினால் ஆகும். அறிவுரை கூறுவதை விட அதை வாழ்ந்து காட்டுவது உயர்ந்தது என்பதை நினைவுறுத்திக் கொள்வோம்.

அன்று எம் ஆதிக்கிறிஸ்தவர்கள் பற்றி பிறமதத்தவர்கள் சொல்லிய விடயங்கள், இன்று கிறிஸ்தவர்களாக இருக்கும் எம்மைப்பற்றி இன்றைய பிறமதத்தவர்கள் கூறுவார்களா? “இக்கிறிஸ்தவர்கள் வாழும் அழகைப் பாருங்கள்” என்று கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோமா? அவ்வாறு கேட்டிருக்க-வில்லையென்றால் எமக்கு நடந்திருப்பது என்ன?. கிறிஸ்தவ மறையானது எம் இலங்கை நாட்டில் பரவியது இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பாகும். ஆனால் இன்று இலங்கைக் கிறிஸ்தவகள், முழு சனத்தொகையில் 7% மட்டுமே என்று கணிப்பிடப்பட்டுள்ளது. கி.பி 1960 இல் 8% மாக இருந்த இலங்கைக் கிறிஸ்தவகள், மதத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தலில் 3ம் இடத்தில் இருந்ததோடு, இன்று முன்னேறுவதற்குப் பதிலாக பின்தங்கியுள்ளோம். அன்று வரிசைப்படுத்தலில் பௌத்த, இந்து மதங்களுக்கு அடுத்துதிருந்த கிறிஸ்தவகள் இன்று இருப்பது நான்காவது இடத்திலாகும். இங்கு கிறிஸ்தவர்களின் பின்னடைவு காண்பிக்கப்படுகிறது. ஆனால், “நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்” என்ற இயேசுவின் வார்த்தைகள் இன்றும் செல்லுபடியான வார்த்தைகளாகும். ஆகையால் நாம் செய்ய வேண்டியது என்ன?, எமக்கு தவறிய விடயம் என்ன?, இறையரசின் மதிப்பீடுகளை விட இவ்வுலக மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோமா?, எங்கள் ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்விலிருந்து எமக்கு பெற்றுக்கொள்ளக் கூடியவைகள் இருக்கின்றதா?, அவர்கள் மூலம் படிப்பினைகளை பெறக்கூடியதாக உள்ளதா? நம்பிக்கை கொள்வது மட்டுமன்றி அந்நம்பிக்கையை செயலில் காட்டுவோம். இவ்வுலக வாழ்வை அடுத்து மறுவுலக வாழ்வும் உண்டு என்பதை ஏற்று, அதற்கிணங்க வாழ்வோம்.

இம்முறை மறைபரப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு நாம் எம் வாழ்வை பற்றி சற்று சிந்தித்துப் பார்ப்போம். எம் வாழ்வின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளவும், எமது நம்பிக்கையை எம் செயல்களில் காட்டவும் முயற்சி செய்வோம். கிறிஸ்துவின் வேண்டுகோலுக்கு மதிப்பளித்தும், கிறிஸ்துவை பற்றி அறியாதவர்களுக்கு அவரைப் பற்றி சொல்லிக் கொடுப்பதற்கும் முன்வருவோம். இவ்வுலக மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட, இறையரசின் மதிப்பீடுகளுக்கு ஏற்ப வாழ்வதற்கு நாம் எமது பிள்ளைகளுக்கு முன்மாதிரிகையாக இருப்போம். எமது பிள்ளைகளுக்கு சிறுவயதிலிருந்தே தூய ஆவியின் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை. கனிவு மற்றும் தன்னடக்கம் ஆகியவற்றைக் கொண்டு வாழ்வதற்கு சொல்லிக் கொடுப்போம். நாங்கள் அனைவரும், “மனம் மாறி இறையரசின் மதிப்பீடுகளை அறிவிப்போம்”.

**அனைவருக்கும் இறை இயேசுவின் ஆசீர்வாதமும், இறையன்னையின் அரவணைப்பும் உரித்தாகட்டும்!**

# மனம் ம
# மதிப்பீடுக

## வத்திக்கான் :
## 2014ம் ஆண்டு ஐப்பசி
## ஒட்டி பாப்பிறை பிரான்சிஸ்

**அன்புடன் சகோதர, சகோதரிகளிற்கு:**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறியாத மக்கள் அநேகர் உள்ளனர். இதன் நிமித்தம் நற்செய்திப்-பணியானது மிக முக்கியமானதாகவும், அவசியமானதாகவும் உள்ளது. திருச்சபையானது தன்பண்பிலே இயல்பாகவே நற்செய்திமயமானது. எனவே இறைமக்கள் அனைவரும் இதில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர். “உலகெங்கும் செல்லுங்கள்” என்ற பணிப்புரையில் பிறந்தது திருச்சபை. இம்மறைப்பரப்பு தினமானது உலகின் பல்வேறு பாகங்களிலும் வாழும் மக்களிற்கு தங்கள் செபத்தாலும் ஏனைய பல்தரப்பட்ட நற்செய்திகளினாலும் வளர்ந்து வரும் இளந்திருச்சபைகளைத் தட்டிக்கொடுக்க, கட்டி-யெழுப்ப வழங்கப்பட்ட ஒரு அரிய சந்தர்ப்பம். இது அருள் வரங்களினதும் மகிழ்ச்சியினதும் கொண்டாட்டம். ஏனென்றால்,

1. இறைவனால் அனுப்பப்பட்ட தூய ஆவியானவர் தமது ஞானத்தையும், வல்லமையையும் தனது செயற்பாடு-களிற்கு கீழ்ப்படிதலுள்ளவர்களிற்கு வழங்குகிறார்.
2. உலகை நற்செய்திமயமாக்க அனுப்பப்பட்ட அவர் மகன் கிறிஸ்து தொடர்ச்சியாக எமது நற்செய்திப்பணிக்கு தமது உடனிருப்பைப் பிரதிபலிக்கின்றார். இந்த இயேசுவினதும் சீடர்களினதும் மகிழ்ச்சி என்னை லூ-க்கா 10: 21-23 ன் வழி அறிவிக்கத்தூண்டியது.

1. நற்செய்தியாளர் இவ்வண்ணம் கூறுகின்றார். நம் ஆண்டவர் 72 சீடர்களை நியமித்து அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களிற்கும், இடங்க-ளிற்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பி இறையாட்சி நெருங்கி விட்டது என்பதை மக்களிற்கு அறிவிக்கும்படி கூறினார். தமது பணியை முடித்த-வர்களாக எழுபத்திரண்டு பேரும் மகிழ்வுடன் திரும்பி வந்தனர். இங்கு நற்செய்திப்பணியை முடித்துத் திரும்பியவர்களின் பிரதிபலிப்பாக மகிழ்ச்சி தென்ப-டுகிறது. இருந்தும் இயேசு அவர்களிடம் சமிக்ஜை காட்டி “தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பது பற்றி மகிழவேண்டாம். மாறாக, உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்” என்கிறார். அந்நேரத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து “தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்-களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்” என்றார். பின்பு அவர் தம் சீடர் பக்கம் திரும்பி அவர்களிடம் தனியாக “நீங்கள் காண்பவற்றைக் காணும் வாய்ப்புப் பெற்றோர் பேறுபெற்றோர்” என்றார். (லூக்கா 10: 20-21, 23).

லூக்கா இதனை மூன்று கோணங்களில் தருகிறார். இயேசு முதலில் தம் சீடர்களுடன் உரையாடுகின்றார். பின் தன் தந்தையுடன் மீளவுமாகத் தன் சீடர்களுடன் இது வரை தம் சீடர்கள் அனுபவியாத

# எல்லோரும் நற்செய்தி அறிவிப்பதற்கு அழைக்கப்

## திருச்சபையின் நற்செய்திப் பணி

**இல 23:** நம்பிக்கையை பரப்புகின்ற கடமை கிறிஸ்துவினுடைய சீடர் ஒவ்வொருவரின் மீதும் அவரது சக்திற்கேற்பச் சுமத்தப்ப-ட்டுள்ளது.

**இல 35:** திருச்சபை முழுவதும் நற்செய்திப்பணிக்கு அனுப்பப்படக் கூடிய தன்மை கொண்டது: நற்செய்தியை அறிவித்தலானது இறை-மக்களுடைய அடிப்படையான கடமையாகும். ஆகவே, யாவரும் தங்களையே ஆழ்ந்து உள்ளூரப் புதுப்பிக்குமாறு எல்லோரையும் அழைக்கிறது. இவ்வாறு அனைவரும் நற்செய்தியை அறிவிக்கத் தங்களுக்கு இருக்கும் பொறுப்பினை உயிரோட்டத்தோடு உணர்ந்து எல்லா இனத்தார்க்கும் நற்செய்திப் பணி புரிவதில் தங்களுக்குரிய பங்கை ஏற்பார்கள்.

**இல 38:** எல்லா ஆயர்களும் திருத்தூதர் குழுவின் வாரிசாக வரும் ஆயர் குழுவின் உறுப்பினர்கள் என்னும் முறையில், ஒரு குறிப்பிட்ட மறைமாவட்டத்திற்காக மட்டுமன்றி, உலகம் முழுவதின் நிறை-வாழ்வுக்காகவுமே திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**இல 39:** திருப்பணியாளர்கள் கிறிஸ்துவின் பதிலாள்களாக உள்ளனர்: இயல்பிலேயே திருச்சபையின் நற்செய்திப் பணியைச் சார்ந்துள்ள மூவகையான தூய அலுவலில் அவர்கள் ஆயர்நிலையின் ஒத்துழைப்பாளராய் இருக்கின்றனர். எனவே, தங்களுடைய வாழ்வு நற்செய்தி அறிவிக்கப்படும் நாடுகளுக்குச் சேவை செய்வதற்காகவும் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை திருப்பணியாளர்கள் ஆழ்ந்து உணர வேண்டும்.

**இல 40:** ஆழ்நிலைத் தியான வாழ்வு, பணி வாழ்வு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள துறவறச் சபைகள் உலகில் நற்செய்தியை அறிவிக்கும் பணியில் மாபெரும் பங்கினை இதுவரை ஏற்று வந்துள்ளன. இப்பொழுதும் ஏற்று வருகின்றன. திருச்சங்கம் இச்சபைகளின் நற்செயல்களை மகிழ்வோடு ஒப்புக்கொண்டு, கடவுளின் மாட்சிமைக்காகவும் மக்கள் சேவைக்காகவும் அவை புரிந்துள்ள எண்ணற்ற பணிகளுக்காகக் கடவுளுக்கு நன்றி கூறுகின்றது.

பணி வாழ்வில் ஈடுபட்டுள்ள சபைகள் தாம் வெளிப்-படையாக நற்செய்தி அறிவிக்கும் நோக்கம் கொண்டிருந்தாலும் சரி, கொண்டிராவிட்டாலும் சரி, கடவுள் முன்னிலையில் தங்களிடமே கேள்விகளை நேர்மையுடன் கேட்டுக் கொள்ள வேண்டும்.

**இல 41:** திருச்சபையின் நற்செய்திப் பணியில் பொதுநிலையினர் ஒத்துழை-க்கின்றனர். சிறப்பாக, கடவுளால் அழைக்கப்பட்டு ஆயரால் திருச்சபையின் மீட்புப் பணிக்காகத் தேர்ந்து கொள்ளப்படும் போது பொதுநிலையினர் இப்பணிக்குச் சாட்சிகளாகவும் அதே நேரத்தில் அதன் உயிருள்ள கருவிகளாகவும் இருந்து அதில் பங்கு பெறுகின்றார்கள்.

## பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி

**இல 12:** இன்றைய சமுதாயத்தில் இளைஞர்கள் பெரும் செல்வாக்குக் கொண்டுள்ளனர். இவர்களின் சமுதாய முக்கியத்துவமும் அரசியல்

# மாறி இறையரசின் களை அறிவிப்போம்

உலக மறைபரப்பு ஞாயிறு
19.10.2014

## சி 19ம் திகதி கொண்டாடப்படும் மறைபரப்புத் தினத்தை ல் அவர்களால் வெளியிடப்பட்ட செய்தியை வத்திக்கான் நகரம் அறிவிக்கின்றது.

ஓர் இறை அனுபவத்திற்குள் இயேசு அவர்களை அழைக்கின்றார்.

2. லூக்கா 10: 20 ல் சீடர்களிற்கு இறை அனுபவப்பகிர்வும், அதைப்பகிரும் பெறுபேறும் அருளப்படுகிறது. இயேசுவின் இவ்வுச்ச அனுபவத்தை லூக்கா மூவொரு இறைவனின் சங்கமமாகக் காண்கிறார். தந்தைமட்டில் இயேசுவிற்கிருந்த வரையறைக்குட்படாத அன்பின் நிமித்தம் "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்" (லூக் 10: 21). இறைவன் மறைப்பொருளாகவும், வெளிப்படுத்துவராகவும் இருக்கின்றார். விண்ணரசு பற்றியமை, இயேசுவில் வெளிப்படுத்தப்படப்போகும் இறைமாட்சிமை, சாத்தானை வெற்றி பெறுதல் இவை மறைக்கப்பட்டுள்ளன. இம்மறைப்பொருளானது தம்மிலே நிறைவு பெற்றவர்களிற்கும், எல்லாம் அறிந்தவர்கள் என நினைப்பவர்களிற்கும் மறைக்கப்பட்டுள்ளது. இவர்கள் இறைவனுக்கு இடம் கொடுக்காதவர்கள், பார்வையற்றவர்கள். இயேசு கூறும் சின்னஞ் சிறியோரும், பேறுபெற்றோரும் எனப்படுவோர்: ஏழை எளியவர்கள், தாழ்ச்சியுள்ளோர், அடக்கி ஒடுக்கப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோர், நாதியற்றோர், சுமை சுமந்து சோர்ந்திருப்போர் ஆவர். தாய்மரியாள், சூசை, கலிலேய மீனவர், சீடர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.

3. "ஆம் தந்தையே இதுவே உமது திருவுளம்" (லூக் 10: 21) இயேசுவின் இவ் வார்த்தைகள் தந்தையின் உடனிருப்பில் உருவாகிய உள்ளார்ந்த பேருவகை. இப்பதம் இறைவன் மானிடத்தின் மேற்கொண்ட மீட்புத்திட்டத்தை உணர்த்தி நிற்கின்றது. இறைவன் தன்மகன் மேற்கொண்ட அதே பேரன்பினால் மக்களையும் அன்பு செய்வது இயேசுவையும் பேருவகை கொள்ளச் செய்தது.

லூக்கா இதே தொனிப்பொருளை லூக் 1:47ல் "ஆண்டவரை எனதுள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனதுள்ளம் பேருவகை கொள்கின்றது" என மரியாளின் பூரிப்பினைத் தருகின்றார். மீட்புத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது இந்த நற்செய்தியே.

தந்தை மகிழ்ச்சியின் ஊற்று, மைந்தன் இறைவெளிப்பாடு, தூய ஆவி கொடுப்பவர். நற்செய்தியாளர் மத்தேயுவின் கூற்றுப்படி இயேசு தந்தையைப் போற்றிப்புகழ்ந்த மறுகணமே மத் 11: 28- 30 "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது: என் சுமை எளிதாயுள்ளது" எனப்பகர்வதாகக் கூறுகின்றார்.

"நற்செய்தியின் மகிழ்ச்சி" (Evangelii Gaudium) எனும் சுற்று நிருபமானது "நற்செய்தியானது இயேசுவை அனுபவிப்பவர்களிற்கு நிறைமகிழ்ச்சியைத் தருகின்றது. இயேசு அளிக்கும் மீட்பை ஏற்றுக்கொள்பவர்கள் தம் பாவ வாழ்விலிருந்தும், துக்கத்திலிருந்தும், உள்ளார்ந்த வெறுமையிலிருந்தும், தனிமையிலிருந்தும் விடுவிக்கப்படுகின்றார்கள். கிறிஸ்துவுடன் இருப்பவர்களிற்கு மகிழ்ச்சி எப்போதும் புதுப்பிக்கப்படுகின்றது" எனக் கூறுகின்றது. மரியாள் இயேசுவுடன் ஓர் தனித்துவமான அனுபவத்தைப் பெற்றிருந்தாள். அதனால், "Causa nostrae laetitiae" அதே போல் இயேவின் சீடர்களும் நற்செய்திப்பணியினால் நிறைமகிழ்ச்சியை அடைந்தார்கள் எனின், நாமும் ஏன் இம்மகிழ்ச்சியின் நீரோட்டத்தில் கலக்க முடியாதா?

4. இன்றைய உலகின் பயங்கர நிலை யாதெனில், நுகர்வோர் கலாச்சாரம் பரவியதால் நிறைவுணர்ச்சியும் பற்றும் பெருகி அதனால் மனிதன் தனிமையும் துயரும் அடைகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விளையாட்டுத்தனமான தற்காலிக மகிழ்ச்சியையும் மழுங்கலான மனச்சான்றையும் பெற்றுள்ளான்.

"நற்செய்தியின் மகிழ்ச்சி"(Evangelii Gaudium 2) மனுகுலத்திற்கு இயேசு கொணர்ந்த மீட்பு இன்று மிக அவசியமாகின்றது. இறை அன்பினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள், இறையரசின் மேற்கொண்ட வேகரமான வேட்கையினால் நற்செய்திப் பணிக்கும் தம்மை அர்ப்பணிப்பவர்களே இயேசுவின் சீடர்கள், அனைவரும் இத்தூதுரைப் பணியை வளர்ப்பதற்கு அழைக்கப்படுகின்றார்கள். தலத்திருச்சபையின் ஒற்றுமையை வளர்ப்பதிலும், இப்பணியை முன்னெடுத்துச் செல்வதிலும் ஆயர்களும், பொறுப்பாயிருப்பவர்களும் கவனம் செலுத்த வேண்டும். பெரும்பான்மையான ஏழைகள் இந்நற்செய்தியை அறிவிப்பதற்கு மிகவும் ஆவலாக இருக்கின்றார்கள். தூர இடங்களிலிருப்பவர்களிற்கும், தங்கள் சொந்தப்பகுதிகளில் வதிவோருக்கும் தொடர்ச்சியாக இயேசுவை நற்செய்திப்பணி வழி அறிமுகப்படுத்த வேண்டும்.

இன்று உலகின் பலபகுதிகளிலும் குருத்துவ துறவற அழைத்தல்கள் அருகிய நிலையில் உள்ளன. குழும வாழ்வில் ஊழிய ஆர்வம் குன்றிப்போவதும், ஆர்வமின்மையும் பிறரைக் கவராதிருத்தல், இதற்குக் காரணமாகின்றது. செபவழி ஊட்டத்தினால் கிறிஸ்துவுடன் ஒன்றாகுவதன் வழியாகக் கிடைக்கும் இறை அனுபவப் பகிர்வை தூதுப்பணியூடாக அறிவிப்பதன் வழி மகிழ்ச்சி பிறக்கின்றது.




எனவே, இதன் நிமித்தம் நான் பங்குச்சபைகளையும், பக்திச் சபைகளையும் ஏனைய குழுக்களையும் இயேசுவை அடித்தளமாகக் கொண்ட உண்மையான அன்புறவு வாழ்க்கை வாழவும். குறைபாடுள்ளவர்களின் தேவைகளில் கவனம் செலுத்தவும் கேட்டுக்கொள்கிறேன். எங்கே மகிழ்ச்சி, தன்னார்வம், கிறிஸ்துவைப் பகிரும் ஆவல் பிறக்கின்றதோ அங்கே, நேர்மையான அழைத்தல்கள் உருவாகின்றன.

இதேவேளை இந்நற்செய்திப் பணிக்கு அழைக்கப்பட்ட பொதுநிலையினரை மறந்து விடக்கூடாது. இவர்கள் மத்தியில் நற்செய்திப் பணியை அறிவிக்கும் ஓர் விழிப்புணர்வு வளர்ந்து வருவது கண்கூடு. இவர்கள் பணியில் துலங்கலை ஏற்படுத்த பொருத்தப்பாடான பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.

5. "முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்குரியவர்" (2 கொரி 9:7). இத்தினமானது எங்களால் ஆன தானதருமங்களையும் நற்செய்திப்பணிக்காகப் புரியும்படி அழைக்கின்றது. அன்பான சகோதா, சகோதரிகளே இன்று எல்லாத் திருச்சபைகளையும் நினைவு கூறுகின்றேன். வெறுமனே மறைபரப்புத் தினமெனப் பெருமை பாராட்டாமல் நற்செய்தி ஆர்வத்திற்குள் உங்களைத் தக்கவைத்து உங்கள் அழைத்தலிற்கும் பணிக்கும் ஒளியூட்டுங்கள்.

உள்ளார்ந்த ரீதியாக உங்களைப் புதுப்பிக்கும் பின்னூட்டத்திற்கும் அழைக்கிறேன். நாம் இனாமாகப் பெற்றுக்கொண்ட விசுவாசம், நம்பிக்கை, இறை அன்பு ஆகிய கொடைகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்வோம். நாம் எல்லோரும் சேர்ந்து எளிமையான, மகிழ்ச்சியான நற்செய்திப் பணிக்கு முன்னடையாளமாக விளங்கும் மரியாளின் பரிந்துரையினால் திருச்சபையானது அனைவரையும் வரவேற்கும் இல்லமாகவும், அனைத்து மக்களிற்கும் தாயாகவும், உலகின் புதுப்பிறப்பிற்கு ஊட்டமாகவும் விளங்க செபிப்போம்.

**பெந்தகோஸ்தே தினம்**
**வத்திக்கான் 8 ஜீன் 2014**
**திருத்தந்தை பிரான்சிஸ்**
**தமிலாக்கம்: அருட்சகோதரி இலேன் [அப்பேஸ்தலிக்க கார்மேல் சபை]**

## ட்டுள்ளோம்.

முக்கியத்துவமும் நாளும் வளர்ந்து கொண்டே வருகின்றன. ஆனால் அதே வேளையில், தங்கள் மேல் விழும் இப்புதுச் சுமைகளைத் தக்க விதமாய்த் தாங்கத் திறனற்றவர்களாய்ப் பெரும்பாலும் இவர்கள் காணப்படுகின்றனர்.

இளைஞரோடு நட்புறவுடன் உரையாடல் நடத்த வயது வந்தோர் முன்வருவார்களாக. இதன் மூலம் வயதினால் உருவாகும் தடைவேலி அகன்றுபோகும்: இரு சாராரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளக்கூடும்: ஒருவர் ஒருவரிடையே தத்தம் சிறப்பு நலன்களைப் பரிமாறிக் கொள்ளக்கூடும்.

சிறுவர் சிறுமியரும் கூட, தமக்கே உரித்தான திருத்தூதுப் பணியைப் பெற்றிருக்கின்றனர். தத்தம் ஆற்றலுக்கேற்பத் தம் தோழர் தோழியரிடையே கிறிஸ்துவின் உயிருள்ள உன்மைச் சாட்சிகளாய் இருக்கின்றனர்.

**தேசிய செயலகத்திலிருந்து.....**



1822, ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் லியோன்ஸ் என்னும் நகரில் செல்வி. மாரி பொலின் ஜெரிக்கோ என்பவரால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் நோக்கம் மறைபரப்பு சேவையில் ஈடுபட்டுள்ள மறைப்பரப்பாளர்களுக்கு செபத்தினாலும் ஒறுத்தலினாலும் ஒத்துழைப்பு வழங்கி மறைபரப்பு சேவையை எல்லா நாடுகளிலும் வளர்க்க வேண்டும் என்பதாகும்.

**தேசிய இயக்குனர்**
**பாப்பிறை மறைபரப்புச் சபைகள்,**
**19, பல்கம் இடம்,**
**கொழும்பு - 08.**
**Tel/Fax : 0112685673**
**email : ndpms@sltnet.lk**
**Webside : www.pontificalmissionlk.org**

## 2013 ஆம் ஆண்டு உலக மறைபரப்பு ஞாயிறு தின நிதி சேகரிப்பு

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| அநுராதபுரம் | 56,201.00 |
| பதுளை | 83,870.00 |
| சிலாபம் | 555,284.00 |
| கொழும்பு | 2,332,156.50 |
| காலி | 102,264.00 |
| யாழ்ப்பாணம் | 798,778.00 |
| கண்டி | 295,260.00 |
| குருநாகலை | 232,270.00 |
| மன்னார் | 4,186,790.00 |
| இரத்தினபுரி | 101,500.00 |
| மட்டக்களப்பு | 107,281.00 |
| திருகோணமலை | 106,000.00 |
| தொகை | 8,957,654.50 |




அன்பின் சிறார்களே!

நாம் ஐந்தாவது கற்பனை பற்றியும் அதனால் ஏற்படும் நன்மைகளும் அக்கட்டளையை கடைப்பிடிக்காவிட்டால் ஏற்படும் தீமைகள் பற்றியும் அறிந்து கொண்டோம். நாம் இப்போது ஆறாவது கற்பனை என்ன சொல்கின்றது என அறிந்து கொள்வோம்

### "விபச்சாரம் செய்யாதே" (இ.ச 5:18)

ஓர் ஆசிரியர் மாணவனிடம் ஒரு காதலிக்கும் ஒரு நண்பனுக்குமிடையே உள்ளே வேறுபாடு என்ன? என்று கேட்டதற்கு அவன் கூறிய பதில் உடைந்து போன ஓர் உள்ளத்தை நண்பனிடம் கொடு. அதை அவன் ஒட்டிக்கொடுப்பான். ஒரு முழுமையான உள்ளத்தை ஒரு காதலியிடம் கொடு அதை அவள் சுக்குநூறாக உடைத்துக்கொடுப்பாள்.

தோழா... தோழா... என்ற திரைப்பட பாடலில் "காதல் காதல் தான், நட்பு நட்புத்தான். காதல் மாறலாம் நட்பு மாறாது என்ற வரிகள் மிகவும் ஆழகான வரிகள். காதல் என்றும் நீடிக்காது, ஆனால் நட்பு என்றும் நீடிக்கும். குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை எனச் சொல்வார்கள். 6வது கட்டளையான மோகபாவம் செய்யாதே என்பது திருமணத்தோடும் குடும்ப வாழ்வோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன.

கணவனும், மனைவியும் சிறந்த நண்பர்களாக மாறாதவரை அவர்களது மணவாழ்வு ஒரு தோல்வியே. ஆகவே கடவுள் வாழும் இல்லமாகிய எமது உடலை, பாவக்கறைபடியாது பரிசுத்தமானதாக பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

### ஆறாம் கற்பனைக்கு மாறான எமது செயல்கள்

- விபச்சாரம், முறைகேடானபாலுறவு, ஓரினச்சேர்க்கை, சிறுவர் துஷ்பிரயோகம், நெருங்கிய இரத்த உறவு, சுய இன்பம் போன்றனவையாகும்.

"தூய ஆவியின் தூண்டுமலுக்கு ஏற்ப வாழுங்கள். அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள்" (கலா 5:16)

**வினாக்கள்**

1. பத்துக் கற்பனைகளில் ஆறாவது கற்பனை எது?
2. ஆறாவது கற்பனைக்கெதிரான பாவச் செயல்கள் எவை?
3. ஆறாம் கற்பனையைக் கடைப்பிடிப்பதால் எமக்கு ஏற்படும் நன்மைகள் எவை?

(இவ்வினாக்களுக்கு விடையை எழுதி அனுப்புங்கள்)

**ஆக்கம் : ஃபிறிஜுடியா ஸ்ரனிஸ்லோஸ்**
**கிளரேஷியன் அருட்சகோதரி**

## நோயை விரட்டி வாழ்ந்திடு!

தம்பிப் பாப்பா ஒரு வார்த்தை
தாத்தா கூறிடக் கேட்டிடு!
நம்பி அதனை நீ கேட்டால்
நலமே அடைவாய் திண்ணமாய்!

கணிப்பொறி ஆட்டம் சிதைத்திடும்
கண்ணைக் காதைக் கெடுத்திடும்!
கூனல் முதுகாய் ஆக்கிடும்
குறுக்கு வலியும் வந்திடும்!

நரம்புத் தளர்ச்சி வந்திடும்
தொப்பை விரைவில் தோன்றிடும்!
சோர்வினை மூளை அடைந்திடும்
நினைவு மறதி நிலைத்திடும்!

எனவே,

திறந்த வெளியில் ஆடிடு
வியர்வை சிந்த ஓடிடு
துள்ளிக் குதித்துத் தாண்டிடு
தாவிப் பந்தை அடித்திடு!

தியானம் செய்யக் கற்றிடு
யோகப் பயிற்சியும் பெற்றிடு
தூய மனதைக் கொண்டிடு
நோயை விரட்டி வாழ்ந்திடு!



## கடவுள் வசிக்குமிடம்



மிகவும் கஷ்டப்பட்ட நிலையிலிருந்த ஒரு விவசாயி கால்நடை பயணமாகப் பக்கத்து ஊருக்கு ஒரு காட்டின் வழியே சென்றான். இருட்டிவிடவே, இனிமேலும் பயணம் செய்யவேண்டாம் என்று முடிவு செய்து அங்கிருந்த ஒரு மரத்தடியில் படுத்து ஓய்வெடுக்கத் தொடங்கினான். அந்த மரம் நினைப்பதையெல்லாம் தரும் கற்பக மரம் என்று அவனுக்குத் தெரியாது. மிகவும் பசியாக இருக்கிறதே என்று நினைத்தான். உடனே தட்டு நிறைய உணவு வந்தது. ஆச்சரியமடைந்த அவன். அதை சாப்பிடத் தொடங்கினான். உணவை சாப்பிட்டதும் உறக்கம் வந்தது. ஒரு பஞ்சனை இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தவுடன் பஞ்சு மெத்தையும் வந்தது. அதில் ஏறிப்படுத்தான். நடந்து வந்ததால் கால்கள் வலிக்கிறதே, இரண்டுபேர் கால்களை அழுக்கிவிட்டால் சுகமாக இருக்குமே என்று எண்ணினான். உடனே இரண்டுபேர் அவனருகில் அமர்ந்து அவனது கால்களை அழுக்கிவிடத் தொடங்கினார்கள். அவனுக்கு மிகவும் சந்தோஷமாய் போய்விட்டது. இதெல்லாம் எப்படி நடக்கிறது என்பது புரியாமல் மேலும் கீழுமாய் பார்த்தார். எதுவும் புரியவில்லை அவனுக்கு! உடனே அவனுக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது. இது ஒரு பூதத்தின் வேலையாகத்தான் இருக்கும் அது வந்து நம்மை விழுங்கப் போகிறது என்று நினைத்தான். அதன்படியே பூதம் ஒன்று வந்து அவனை விழுங்கிற்று. தூய்மையான உள்ளத்தில்தான் கடவுள் வசிப்பார். அவநம்பிக்கையுன் இருந்தால்....

## சிந்தனைத் துளிகள்

1. நான் எங்கு போகிறேன் என்று எனக்குத் தெரியாமல் இருந்தால் நான் போய் சேருமிடமும் எனக்குத் தெரியாது
2. இறைவன் தந்த வாழ்வை வாழவும், இயற்கை தந்த காற்றைச் சுவாசிக்கவும மலையருவி ஈன்ற நீரை ருசிக்கவும் மங்கையரின் அன்பை ரசிக்கவும் இன்பமாகச் சிரிக்கவும் கிடைக்கும் வாய்ப்பே சுதந்திரம்
3. "அன்பு செய்ய ஓர் ஆளும், செயல்பட ஒரு பணியும் எதிர்பார்ப்புக்கொரு இலக்கும் மகிழ்ச்சிக்கு இன்றியமையாதவைகளாகும்.




செல்வி. அபினி கல்நாயுடு, தரம் – 4,
திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பலபிட்டி

## வந்தேன் நானும் வையகம் காண



வந்தேன் நானும்
வையகம் காண
கண்டேன் இறைவா உன்னை
என் அன்னையிடம்
உணர்ந்தேன் அன்பை
என் அம்மம்மாவிடம்
வாங்கினேன் பல பொருட்களை
என் அப்பாவின் உழைப்பினில்
பெற்றேன் ஞான அறிவை என்
தொட்டம்மாவிடம்
கண்டேன் தன் கடமை
உணர்த்தும் குணத்தை
என் தொட்டப்பாவிடம்

சிறுவர் தினமாம் இன்று
முதியோர் தினமும் இன்றே
நானும் அம்மம்மாவும் ஒன்று
நாமும் வாழ்வோம் நன்று
பெறுவோம் என்றும் அன்பு - எம்
வாழ்வினில் காட்டுவோம் பண்பு - வலம்
வருவோம் நாளும் உலகினில் வான் சிட்டுக்
குருவிகளாய்



N. ஜொயல் டிலான் பர்னாந்து

## தகவல் களஞ்சியம்

- நீர்யானை பன்றி வகையைச் சேர்ந்தது
- சந்திரனில் மலைகள் உள்ளதை முதலில் கண்டறிந்து கூறியவர் கலிலியோ
- கழுதைப்புலி நாய் வகையைச் சேர்ந்தது
- ஆபிரிக்கா என்பதன் பொருள் "கறுப்பு"
- இங்கிலாந்தின் பழைய பெயர் ஆல்பியன்
- திமிங்கலங்கள் ஆண்டு ஒன்றுக்கு 4 ஆயிரம் மைல் தூரம் நீந்திச் செல்லுகின்றன.

## ஒற்றுமையே பலம்



ஒற்றுமை என்பது அனைவரும் ஒன்றிணைந்து மகிழ்வுடன் வாழ்வதாகும். நாம் அனைவரும் இன பேதமின்றி அனைவரும் ஒருதாய் பிள்ளைகள்போல் வாழவேண்டும். இன்று மிருகங்கள், பறவைகளைப் பாருங்கள் எவ்வளவு ஒற்றுமையாக வாழ்கின்றன. ஏன் மனிதனால் வாழமுடியாது. பௌத்த சமயமும் சகல பண்புகளும் நிறைந்து உண்மை பேசி ஒற்றுமையாக வாழும்படியாகவே கூறுகின்றது. காகத்தைப் பாருங்கள் ஒரு காகத்திற்கு உணவு கிடைத்துவிட்டால் அக்காகம் அனைத்து காகங்களையும் தன் மொழியால் அழைத்துவிடும். இவ்வாறு நாமும் வாழ்ந்தால் என்ன? இச்சிறுவர் தினமதில் ஆசிரியரை மதித்து, பெரியவரை வணங்கி அவர்கள் வாழ்வை முன்மாதிரிகையாக கொண்டு, ஒற்றுமையுடன் வாழ்வில் வரும் சவால்களை வென்று வாழும் திறனைப் பெறுவோம்.

**ஆக்கம் : செல்வன். லெஹரான்**

## யார் இவர்?

- பெண்களுக்கான துறவற சபையை நிறுவியவர்
- பத்து வயதில் பெற்றோரை இழந்தவர்
- பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையில் சேர்ந்து ஏழை பெண்களுக்காக உழைத்தவர்
- புனித பயணத்தின் போது பார்வையை இழந்தவர்
- ஒரு பாடுபட்ட சுருபத்தின் முன் செபித்தபோது மீண்டும் பார்வை பெற்றவர்
- வருங்கால தலைமுறை பெண்களின் கல்வியறிவுக்காகவும், ஆழமான கிறிஸ்தவ வாழ்வுக்காகவும் உழைத்தவர்.

**விடை : புனித ஆஞ்சலா மெர்சி**

# கத்தோலிக்க திருமறை
## தரம் (11) (க.பொ.த) மாணவர்களுக்கான மாதிரி வினாக்கள்

விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. இவ்வினாவுக்கு விடையளித்தல் கட்டாயமானது
   i. இறைவன் மனிதனை ஒருபோதுமே கைவிடமாட்டார் என்பதை உறுதிப்படுத்தும், பழைய உடன்படிக்கையின் மையமான நிகழ்ச்சியைப் பெயரிடுக.
   ii. "உயிர் இறைவனிடமிருந்து நீர் பெறும் ஒரு கொடையாகும்" விவிலிய நூலில் இதனை வெளிப்படுத்தும் புத்தகத்தின் பெயரை எழுதுக?
   iii. திருவழிபாட்டின் பிரதான பகுதிகள் இரண்டு எழுதுக?
   iv. ஒல்லாந்தர் காலத்தில் வீழ்ச்சியுற்ற கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் கட்டி எழுப்பக் கைகொடுத்த மறைத்தூதுக் குருக்கள் இருவரின் பெயர்களைத் தருக?
   v. "மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்" இவ்வாறு இயேசு கூறிய இடத்தில் நடைபெற்ற புதுமை என்ன?
   vi. தூய ஆவியின் செயற்பாட்டிற்கு உட்பட்ட உமது வாழ்வில் நீர் பெற்றுள்ள தூய ஆவியின் கொடைகள் இரண்டு எழுதுக?
   vii. புகுமுக அருளடையாளங்களுள் நற்கருணை முக்கிய இடம் வகிப்பது ஏன்?
   viii. இறை தந்தையிடம் எவ்வாறு செபிக்க வேண்டும் என்பதை விளக்க இயேசு கூறிய உவமைகள் இரண்டின் பெயர்களைத் தருக?
   ix. இயேசு கற்பித்த இப்படிப்பினையைப் பூர்த்தி செய்க. "நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும்...."
   x. ஞாயிறு தினத்தை இறைவனின் நாள் எனக் குறிப்பிட ஏதுவான காரணங்கள் இரண்டு எழுதுக?
2. அ. இயேசுவின் வாழ்வில் நீர் காணும் ஆளுமைப் பண்புகள் இரண்டு எழுதுக?
   ஆ. பகைவர்களையும் அன்பு செய்தல் தொடர்பான, புதிய உடன்படிக்கையின் படிப்பினைகள் மூன்று எழுதுக?
   இ. நீர் கல்வி கற்கும் வகுப்பறையில் அன்பின் கட்டளையைச் செயற்படுத்த உம்மால் செய்யக்கூடிய செயல்கள் ஐந்தினை எழுதுக?
3. அ. திருமுழுக்கு வழியாக நீர் பெற்றுள்ள வரங்கள் இரண்டு எழுதுக?
   ஆ. திருமுழுக்கின் வழியாக நீர் பெற்ற புதுவாழ்வை வளர்த்துக் கொள்ள உம்மால் செய்யக்கூடிய செயல்கள் மூன்று எழுதுக?
   இ. இறை அருள் நிறைந்த ஒரு பிள்ளையாக சமுதாயத்தில் உம்மால் ஆற்றக்கூடிய செயல்கள் ஐந்தினை எழுதுக?
4. அ. இறை சித்தத்திற்கு செவிமடுத்த மரியாள் கபிரியேல் தூதருக்குக் கொடுத்த பதிலை எழுதுக?
   ஆ. கர்த்தர் கற்பித்த செபத்தில் அடங்கியுள்ள பிரதான பண்பு ஒன்றைக் குறிப்பிட்டு அதன் மூலம் கிடைக்கும் செய்திகள் இரண்டு எழுதுக?
   இ. நாட்டின் சமாதானத்திற்காக 50 சொற்கள் அளவில் செபம் ஒன்று எழுதுக. அச்செபம் கர்த்தர் கற்பித்த செபத்தில் அடங்கியுள்ள பண்புகள் ஐந்தின் அடிப்படையில் எழுதப்படவேண்டும்.
5. அ. இயேசு இறுதி இராவுணவின்போது அப்பத்தை எடுத்து இறைவனுக்கு நன்றி கூறிச் சொன்ன வார்த்தைகளை எழுதுக?
   ஆ. நற்கருணை ஒற்றுமையின் உணவாகும். இந்த உணவை அருந்தும் நீர் ஒற்றுமையின் அடையாளமாக எவ்வாறு விளங்குவீர்? மூன்று விடயங்கள் தருக?
   இ. இயேசுவைப் போல் பிறருக்காக உம்மால் தியாகத்துடன் ஆற்றக்கூடிய செயல்கள் ஐந்து எழுதுக?
6. "உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி உன் தந்தையையும், தாயையும் மதித்து நட
   அ. இறைவனின் இச்சட்டத்தை வெளிப்படுத்தும் கட்டளையை எழுதுக?
   ஆ. உமக்காகத் தம்வாழ்வை அர்ப்பணிக்கும் உமது பெற்றோர் மட்டில் உமக்குள்ள கடமைகள் மூன்றினை எழுதுக.
   இ. கிறிஸ்தவராகிய உமது இல்லம் இறைவன் வாழும் ஓர் இடமாக அமைய உம்மால் மேற்கொள்ளக்கூடிய செயல்கள் ஐந்து எழுதுக.
7. பின்வரும் தலைப்புக்களில் இரண்டைத் தெரிவு செய்து சிறுகுறிப்பெழுதுக
   i. அன்னை தெரேசாவின் இரக்கத்தின் வாழ்க்கை
   ii. தூய பவுலின் மறைபோதகப் பணி
   iii. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்
   iv. தொடக்க திருச்சபையில் சகோதரத்துவ வாழ்க்கை
   v. சீடர்களின் பாதங்களைக் கழுவுதல்
   vi. முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகள்




## உலக மக்கள் வணங்கும் மதங்கள்

1. கத்தோலிக்க மக்களின் மதம் - ரோமன் கத்தோலிக்கம்,
   புனித நூல் - திருவிவிலியம்
2. முஸ்லிம் மக்களின் மதம் - இஸ்லாம்
   புனித நூல் - அல்குர்ஆன்
3. ஜெருசலேம் இஸ்ரயேலின் மதம் - யூத மதம்
4. இந்து மக்களின் மதம் - சைவ மதம்
   புனித நூல் - பகவத் கீதை
5. பௌத்த மக்களின் மதம் - பௌத்தம்
   புனித நூல் - தீபடகய (திரிபீடகம்)
6. குர்திஷ் மக்களின் மதம் - யஜிதிசம்
   புனித நூல் - கரும் புத்தகம்
7. சிறப்புமிக்க மாயன் மக்களின் மதம் - சுதேச மதம்

ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12

## விவிலியத்தில் குறிப்பிடப்படும் மலைகள் – 06

# மோரியா மலை



மோரியா மலையானது பழைய ஜெருசலேம் நகரில் அமைந்துள்ளது. 'மோரியா' என்ற சொல் ஈபுரு மொழியின் பின்னணியில் இருந்து உருவாகியது. இம்மலை ஒலிவ மலைக்கு மேற்கு பக்கமாக சில நூறு மீட்டர்கள் இடைவெளியில் அமைந்துள்ளது.

மோரியா மலையானது விவிலியத்தில் இடம் பெற்றுள்ள பல கூற்றுக்களை நிரூபிப்பதாக உள்ளது. இந்த இடம் கிறிஸ்தவர்களுக்கு மற்றும் யூதர்களுக்கு ஒரு புனித இடமாக இன்றும் திகழ்ந்து வருகிறது. இந்த மலையின் வரலாறு விவிலியத்தில் தொடக்க நூலில் இருந்தே ஆரம்பிக்கின்றது. அந்த வரலாற்றை இப்பொழுது அலசிப் பார்ப்போம்.

தொடக்கநூல் 22ஆம் அதிகாரத்தில் கடவுள் ஆபிரகாமிற்கு ஒரு கட்டளை விடுக்கின்றார். அது என்னவென்றால்; "உன்னுடைய ஒரே மகனான ஈசாக்கை இப்பொழுதே மோரியாவுக்குக் கொண்டுபோய் அங்கிருக்கும் ஏதாவது ஒரு மலைகளில் எரிபலியாக எனக்குக் கொடு" (தொ.நூ 22:2) ஆபிரகாமால் இந்த கட்டளையை முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் ஈசாக்கின் மூலமாக உன்னுடைய சந்ததியை கடல் மணணைப் போன்று பெருக்குவேன் என்று கடவுள் அவருக்கு வாக்களித்து இருந்தார். கடைசி நேரத்தில் கடவுள் ஈசாக்கிற்கு பதிலாக ஓர் ஆட்டுக் குட்டியை பலியாக ஏற்றுக்கொண்டார். அன்று முதல் ஆபிரகாம் அந்த இடத்தை "இது கடவுள் கொடுத்த இடம். இந்த இடத்தில் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்" (தொ.நூ 22:14) என்று அழைத்தார். உடனே கடவுள் ஆபிரகாமைப் பார்த்து "நீ எனக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தாய். ஆதலால் உன்னுடைய சந்ததியினர் எதிரிகளின் நகர்களைக் கூட ஆட்சி செய்வார்கள். அது மட்டுமன்றி உன்னுடைய சந்ததியினர் முழுவதும் இந்த பூமியில் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்று உரைத்தார்.

ஆயிரம் வருடங்கள் கழித்து இதே இடத்தில் தாவீது அரசன் ஜெபிசிதே என்று அழைக்கப்படும் பளிங்குத் தரையான அரோனா என்ற இடத்தை வாங்கி அதில் கடவுளுக்கு ஒரு பலிப்பீடம் அமைத்து பஞ்சம் அம்மக்களை விட்டு நீங்குமாறு பலி செலுத்தினார். அதே இடத்தில் தாவீது அரசரின் இறப்பிற்குப் பிறகு அவருடைய மகனான சாலமோன் அரசன் ஓர் அற்புதமான கோயிலைக் கட்டினார். இந்த ஆலயமானது நானூறு வருடங்களுக்கு மேலாக தாக்குப் பிடித்து அதன் பின்னர் நெபுகத்நேசரின் படையால் கி.மு 587-586 அழிக்கப்பட்டது.

எழுபது வருடங்கள் கழித்து இந்த ஆலயம் புதிதாக நிறுவப்பட்டது. இதை ஜெருசலேமில் இருந்து திரும்பிய பாபிலோனை ஆட்சி செய்த யூதர்கள் வெற்றிகரமாக செய்து முடித்தனர். முதலாம் நூற்றாண்டில் ஏரோது மன்னர் இந்த ஆலயத்திற்கு ஓர் புதுமையைக் கொண்டு வந்தார். ஆதலால் இந்த ஆலயம் "ஏரோதின் ஆலயம்" என்று அழைக்கப்பட்டது. இதே ஆலயத்தில் தான் மக்கள் கால்நடை சந்தை நடத்திக் கொண்டிருந்தனர். (யோவான் 2:15) அப்பொழுது இயேசு மிகுந்த சினம் கொண்டு அவர்களை துரத்தி அடித்தார்.

கி.பி 70ஆம் ஆண்டில் 'டைட்டஸ்' என்பவரின் தலைமையில் உரோமைப் படைகள் இந்த ஆலயத்தை அழித்தனர். (இந்த டைட்டஸ் மன்னன் என்பவன் வெஸ்பாசியன் சக்கவர்த்தியின் மகனாவான்) அன்று அழிக்கப்பட்ட இந்த ஆலயத்தின் ஒரு மதில் சுவர் இன்னும் அழியாமல் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இது உண்மையிலேயே கடவுளின் ஓர் அற்புதமான புனிதச் செயலாகும். அந்த மதிலின் பெயர்தான் "மேற்கு மதில்" அல்லது "வெயிலின் மதில்" இந்த இடம் இன்றும் கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களுக்கு ஒரு புனித இடமாக மட்டுமல்லாது செபம் செய்யும் ஒரு அற்புத ஆலயமாகவும் திகழ்ந்து வருகின்றது.

ஆபிரகாமை முதன் முறையாக இந்த மலைக்கு அழைத்த கடவுள் இன்றும் பல திட்டங்களை வைத்துள்ளார். விவிலியமானது என்ன கூறுகிறதென்றால் மூன்றாவது ஒரு புதிய ஆலயம் கட்டப்படும். அந்த ஆலயமானது ஏற்கனவே இருந்த சாலமோன் ஆலயத்திற்கு மேலாகவோ அல்லது அருகிலோ கட்டப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது....

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## இறைவா உன்னையே நான் கூப்பிடுவேன்



யாரை நோக்கி
நான் கூப்பிடுவேன்
இறைவா நீர் என்னோடு
இருக்கையிலே
யாரை நோக்கி
நான் கூப்பிடுவேன்

உறவாக நீர்
இருக்கையில் - என்
உயிராகவும் நீர்
இருக்கையில்
உண்மையாய் நீர்
இருக்கையில்
உலகமே உனதாய்
இருக்கையில்
இறைவா யாரை நோக்கி
நான் கூப்பிடுவேன்

அன்பான அன்னையாய்
நீர் இருக்கையில்
அரவணைக்கும்
தந்தையாய் நீர்
இருக்கையில்
அருகிருக்கும் நண்பனாய்
நீர் இருக்கையில்
ஆளுகின்ற அரசனாயும்
நீர் இருக்கையில்
இறைவா யாரை நோக்கி
நான் கூப்பிடுவேன்

கற்றுத்தரும் குருவாய்
நீர் இருக்கையில்
கரும்புப் போல் இனிக்கும்
உன் அன்பிருக்கையில்
கள்ளமில்லா உன்
உள்ளமிருக்கையில்
கருணையின் ஊற்றாய்
நீர் இருக்கையில்
இறைவா யாரை நோக்கி
நான் கூப்பிடுவேன்

உன்னை நோக்கி நான்
கூப்பிடுவேன்
இறைவா, உன்
அன்பை நோக்கி நான்
கூப்பிடுவேன்
உன் உரு தந்து
என்னை
உருவாக்கியதால்
உன்னையே நான்
கூப்பிடுவேன்

ஆக்கம் : P.M. மேரி பெனடிக்கா
பென்றித், அவிசாவளை




# ஆலய வரலாறுகள்

# மரியாயின் கிராமம்

1980 ஆண்டு வைகாசி மாதத்திலும், 1985ஆம் ஆண்டு ஆவணி மாதம் திருநற்கருணை மாநாட்டுக்காகவும் ஆப்ரிக்காவின் கென்ய நாட்டுக்கு புனித திருத்தந்தை 2ஆம் ஜோன் போல் அவர்கள் திருப்பயணம் மேற்கொண்ட பின்னர் அந்நாட்டில் இறைவனின் தாய் மரியாவுக்கென ஒரு தேசியத் திருத்தலம் தேவை என்பதை கென்ய ஆயர்கள் உணர்ந்து ஒரு தேசிய அன்னை மரியாத் திருத்தலம் அமைப்பதற்கு தீர்மானித்தனர். Nakuru மறைமாவட்டம், கென்யாவின் மத்திய பகுதியில் இருப்பதாலும், நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் வருவதற்கு வசதியான பகுதியாக அது இருப்பதாலும் அம்மறைமாவட்டத்தில் தேசிய அன்னை மரியாத் திருத்தலத்தை எழுப்புமாறு 1984 மற்றும் 1985ஆம் ஆண்டுகளில் கென்ய ஆயர் பேரவை அம்மறைமாவட்டத்தைக் கேட்டுக்கொண்டது. அதேசமயம் 1980களின் தொடக்க காலங்களில் கென்யாவின் பல பகுதிகளில் மக்கள் அன்னைமரியாவைக் காட்சியில் கண்டதாக அறிவித்து வந்தனர். Nakuru மறைமாவட்டத்தின் Subukia விலுள்ள Magomano பள்ளி வளாகத்தில் 1984ஆம் ஆண்டு ஆவணி 29ம் திகதியிலிருந்து புரட்டாதி 28ந் திகதி வரை அன்னை மரியாவை மக்கள் காட்சியில் கண்டதாக நற்செய்தியாளர் புனித யோவான் ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்தந்தை John Jones அறிவித்தார். இக்காட்சிகள் உண்மையா என்பது தெரியவில்லை எனினும், இப்பங்கிலும், நாட்டின் சில இடங்களிலும் அன்னைமரியா பக்தி தீவிரமடைந்தது. குறிப்பாக செபமாலை பக்தி முயற்சி பிரபலமடைந்தது.

பாட்ரிக் மறைபோதகச் சபையைச் சேர்ந்த அருட்தந்தை John Jones தனது பங்கிலிருந்து சிறிய கிறிஸ்தவச் சமூகங்களைச் சந்தித்து அன்னைமரியா பற்றிய கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளை விளக்கினார். விவிலியத்திலிந்து மேற்கோள்களையும் சுட்டிக் காட்டினார். 1985ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அப்பங்கில் அன்னை மரியாவுக்கென ஒரு சிறிய திருத்தலம் கட்டத் தீர்மானித்தார்.

அப்பங்கைச் சேர்ந்த Munanda என்ற ஊரில் திருத்தலம் கட்டி, அயர்லாந்திலிருந்து கொண்டு வந்திருந்த சிறிய அன்னைமரியா திருவுருவத்தையும் அங்கு அவர் வைத்தார். இதன் மூலம் 1987ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி அன்னை மரியா ஆண்டையும் Nakuru மறைமாவட்ட ஆயரின் ஆசிரோடு சிறப்பாகத் தொடங்கினர் அப்பங்கு மக்கள். 1988ஆம் ஆண்டு 15ம் திகதி அன்னைமரியா ஆண்டையும் சிறப்பாக நிறைவு செய்தனர் அப்பங்கு மக்கள். இவ்வழிபாடுகளில் எல்லா இடங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். மக்களின் இப்பக்தியைக் கண்ட Nakuru Mah; Ndingi Mwana' Nzeki கர்தினால் Maurice Michael Otunga அவர்களும் சேர்ந்து கென்ய நாட்டுக்கு ஒரு தேசிய அன்னை மரியாத் திருத்தலத்தை எழுப்புவதற்குத் தகுந்த இடம்தேடும் பணியில் தீவிரமாக இறங்கினர். அச்சமயத்தில், புதிதாகத் கட்டப்படவிருக்கும் இந்தத் திருத்தலம் “இறைவனின் அன்னை, மரியின் கிராமம்” என அழைக்கப்பட வேண்டும் எனவும் கர்தினால் Otunga அறிவித்தார். இதன்மூலம் Subukiaவில் அமைக்கப்படவிருந்த தேசியத் திருத்தலத்துக்கு “இறைவனின் அன்னை, மரியின் கிராமம்” என்ற பெயர் அதிகாரப்பூர்வமானது. இறைவனின் அன்னை விழாவானது தை முதலாம் திகதியன்று இங்கு விழாவைச் சிறப்பிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

உண்மையில் Subukia புவியில் அமைப்பின்படியும் முக்கியத்துவம் வாய்ந்தது. கென்யாவின் பல்வேறு பூர்வீக இன மக்களை ஒன்று சேர்ப்பதற்கும் இவ்விடம் வசதியாக இருந்தது. ஏனெனில் ஏற்கனவே Subukia பள்ளத்தாக்கில் இந்தப் பூர்வீக இனங்களில் பலர் வாழ்ந்து வந்தனர். மேலும், பூடத்தியரேகை Subukia வழியாகச் செல்வதால் உலகின் இரண்டு அரைக்கோளங்களை இணைக்கும் இடமாகவும் இவ்விடம் உள்ளது. 1989ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் திருத்தலம் கட்டுவதற்கு இடம் தேடுவதற்குச் சிறப்பு குழு உருவாக்கப்பட்டது. இதன் உறுப்பினர்கள் அன்னை மரியாவை மக்கள் காட்சியில் கண்ட Munadana வளாகம் 12 ஏக்கர் இடமாக இருந்ததால் பெரிய இடம் தேடினர். இக்குழு இதற்கு முயற்சிகள் எடுத்த 48 மணி நேரத்துக்குள்ளாக, எதிர்பாராதவிதமாக, ஒருவர் 50 ஏக்கரை இலவசமாகக் கொடுப்பதற்கு முன்வந்தார். திருத்தலத்தை விரிவுபடுத்துவதற்கு மேலும் 200 ஏக்கர் தேவைப்பட்டது. தளபதி Ikou Muteithia என்பவர் மலிவான விலையில் இந்த இடத்தை விற்பதற்கு முன்வந்தார். பின்னர் புதிய திருத்தலத்துக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கின.

1991ஆம் ஆண்டு மார்கழி 8ந் திகதி அமல மரி விழாவன்று அந்தப் பசிலிக்கா அமைந்துள்ள குன்றில் அடர்ந்த புதர்ச்செடிகளை பணியாளர்களின் தலைவர் Henry Muthuku அகற்றிக் கொண்டிருந்தபோது ஒரு சிறிய நீர் ஊற்று வெளிப்பட்டது. அங்கு தோண்டியபோது தண்ணீர் தொடர்ந்து ஊற்றெடுத்து ஓடியது. அது இந்நாள்வரை வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கின்றது. இதை அன்னையின் அற்புதம் என்றே மக்கள் நம்புகின்றனர். அங்கு தொடர்ந்து பல புதுமைகள் இடம்பெற்று வருகின்றன. பல நோயாளிகள் குணமடைந்து வருகின்றனர். நைரோபியின் Subukia இறைவனின் அன்னை, மரியின் கிராமம் திருத்தலம், கென்ய மக்களை ஒன்றிணைக்கும் புனித இடமாக விளங்கி வருகிறது. கத்தோலிக்கர் மட்டுமல்ல,பிற மதத்தவரும் அங்குச் சென்று தங்களின் விசுவாசத்தை ஆழப்படுத்தி வருகின்றனர். 200கிலோ மீட்டர் தூ ரம் பக்தர்கள் கால்நடையாகச் சென்று அன்னையின் அருள்பெற்றுச் செல்கின்றனர். தங்களின் மெக்காவாக இதனை மக்கள் கருதுகின்றனர். தற்போது அத்திருத்தலத்தின் மீது பெரிய திருச்சிலுவை வைக்கப்பட்டுள்ளது. புனித திருத்தந்தை 2ஆம் ஜோன் போல் அவர்கள் இத்திருத்தலத்தை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளார்.

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை வருகையும், முத்திப்பேறுபெற்ற அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரை புனித தன்மைக்கு உயர்த்துவதை பற்றிய விசுவாசிகளின் மன்றாட்டு

**ஐப்பசி 19 ஞாயிறு 2014**

1. நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கவும் அதைக் குறித்து சாட்சியமளிப்பதற்கு எமக்கு தரப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றும்போது, எமது பலவீனங்களால் அல்லது எமது பாவத்தினால் அல்லது வேறு பல்வேறு காரணங்களால் ஏற்படவுள்ள தடைகளை கண்டு பின்வாங்காது, முழுமையான தெளிவுடன் எம் ஆண்டவர் தரும் சக்தியில் தங்கி வாழுவதற்கு வரம் தர வேண்டி மன்றாடுகின்றோம்.

2. கருணையும் தயவும், அனைத்துத் தடைகளையும் ஜெயங்கொள்ளும் எனும் உண்மையை நன்கு விளங்கிக் கொண்டு பலவிதமான காரணங்களால் தவறான பாதைக்கு இட்டுச் செல்லப்பட்ட எமது சகோதரர்களுக்கு புதியதோர் வாழ்வையும், நம்பிக்கையும் பெறுவதற்கான, புரிந்துகொள்ளுதலும், தன்னலமற்ற தியாகத்துடன் செயற்பட எம்மனைவருக்கும் அருள்புரிய வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.

3. இலங்கை கத்தோலிக்க திருச்சபை, ஏனைய மதத்தினருக்கு நட்புக்கரம் நீட்டவும், உலகெங்கும் பரவிவரும், வன்முறை, பிரிவினை, கடும்போக்கு வாதங்களை அகற்றி உண்மையான அமைதி நட்புறவை ஏற்படுத பயனுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபட வரமருள மன்றாடுகின்றோம்.

4. கத்தோலிக்க விசுவாசிகள் அனைவரும் முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகளாரின் பாத சுவடுகளை பின்பற்றி, துன்புறும், நோயில் வாடும், ஏழ்மையில் துவளும், போரினால் பாதிக்கப்பட்டு வாழும் மக்களின் தேவைகளை புரிந்துணர்ந்து அவர்களுக்கு உறுத்துணையுடன் அவர்களை விசுவாச வாழ்வில் நிலைத்து வாழச் செய்ய வேண்டுமென்று மன்றாடுகின்றோம்

**ஐப்பசி 26 ஞாயிறு 2014**

1. எம்மில் அநேகமானோர் உதாசீனத்துடன் மற்றவர்களை கவனியாது வாழும் எண்ணத்திலிருப்பதால், பலவித பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதுடன், மனிதவாழ்வுக்கு ஒவ்வாத பங்கமான விளைவுகளை எதிர்கொள்வதைப் புரிந்து கொண்டு, கைவிடப்பட்டுள்ள மக்களினுள் துன்புறும் இயேசுவை இனங்கண்டு, அவர்களது வளமான வாழ்விற்காக, பரித்தியாகத்துடன், சகோதரத்துவத்துடன் செயற்பட அருள்புரிய வேண்டுமென்று மன்றாடுகின்றோம்

2. கிறிஸ்தவ மதம் நன்னடத்தையும், அமைதியையும் பற்றிய தரிசனமல்ல, சிலுவையில் அறையுண்டு வாழ்க்கை பலியால் எம்மை மீட்டெடுத்த இயேசு கிறிஸ்துநாதருடனான, கொழுந்துவிட்டு சுவாலையாக எரியும் தீயைப் போன்று உறவாகுமென்பதைப் புரிந்துகொள்ளவும். அவ்வாறே ஆண்டவர் இயேசுவின் வழி சென்றவாறு வாழ்க்கை நடைமுறை செயற்பாடுகளில் அன்பிற்கும் பரித்தியாகத்திற்கும் சாட்சியாக வாழ உம்மை மன்றாடுகின்றோம்

3. “உனது சொத்து எங்கே உன் இதயமும் அங்கே”எனும் வசனத்திற்கு ஏற்றவாறு, எமது உள்ளங்களை உற்று நோக்குவோம். பலம், பணம், அழகு, அந்தஸ்து போன்றவைப்பற்றிய பேராசையை அகற்றி கொள்வதற்கு ஆழமானதோர் தியானத்துடன், எமது உள்ளரங்கத்திலிருக்கும் இறைவனைப் பற்றிய உண்மையான தாகத்தை இனங்கான வரமருள வேண்டுமென மன்றாடுவோம்.

4. முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகளார் இறைத்தந்தையினுள் வைத்த ஆழமான விசுவாசத்தையும், எளிமையான வாழ்வையும் கொண்டு அக்காலத்திலிருந்த அரசியல், சமூக, பொருளாதாரத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தியது போல் நாமும் எமது கொழுந்து விட்டு ஜொலிக்கத் தெரியும் விசுவாசத்துடனும் எளிமையான வாழ்க்கை முறையினூடாக எமது சமூகத்தில் பெரியதோர் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் பங்காளிகள் ஆக வல்லமை பெறும்படி மன்றாடுவோம்.

தேசிய கத்தோலிக்க பொதுநிலையினருக்காக கூட்டம் ஐப்பசி 11ம் திகதி கடந்த வருடாந்த கூட்ட ஒன்றுகூடலில் அதன் முன்னாள் தலைவர் நீதிபதி பியந்த பெரேரா அவர்களின் தலைமையில் மேதகு ஆயர் நோபர்ட் அந்திராடி ஆண்டகையும் உறுப்பினர்களும் இணைந்து இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின் இறுதியில் புதிய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

- தலைவர் Dr. **மெக்சி பர்னாந்து புள்ளே**
- உபதலைவர் **ஏட்லி பெரேரா**
- உப செயலாளர் **செற்றிக் பொஸ்டர்**
- பொருளாளர் **ஹிரான் திசானாயக்கா**
- செயற்குழு உறுப்பினர்களாக - **இக்னேசியஸ் அலகரட்ணம், லக்ஸ்மன் பொன்வீர, பிரேங் மாக்கஸ் பர்னாந்து**

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

தகவல் : Dr. **மெக்சி பர்னாந்து புள்ளே**



வத்தளை புனித அன்னம்மாள் ஆலயத்தின் மறைக்கல்வி மாணவர்கள் 11.10.2014 அன்று கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையினால் உறுதிபூசுதல் அருட்சாதனத்தை பெற்றுக் கொண்டார்கள். உறுதிபூசுதல் பெற்றுக் கொண்ட மாணவர்களையும், ஆயர் அவர்களையும் பங்குத்தந்தை, உதவி பங்குத்தந்தை, பயிற்றுவித்த ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : உதவி பங்குத்தந்தை அ. உதயதாஸ் அடிகள்.**

இளையோர் இபக்கம்

அங்கம் - 64

# இன்றைய இளைஞர்கள் நாளைய திருச்சபை

### முன்னுரை

இளம் உள்ளங்கள் இயேசு காட்டிய வழியில் வாழ்வதற்கு நமது திருச்சபையும், திருச்சபை சீராக வளர்வதற்கு இளைஞர்கள், இளம்பெண்கள் உதவி செய்வார்கள் என்பதை நன்கு உணர்ந்திருப்பதால், "இன்றைய இளைஞர்கள் நாளைய திருச்சபை" என்ற தலைப்பிலே நான் பின்வரும் கட்டுரையை எழுத துவங்கினேன்.

### இளைஞர்களும், திருச்சபையும்

முகம் இழந்து முகவரியைத் தேடிக் கொண்டிருக்கும் இளைஞர், இளம் பெண்களாக இந்த உலகின் இளம் உள்ளங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, திருச்சபையின் பணி இளைஞர்களுக்கு என்ன சொல்கின்றது என்பதை பின்வரும் தலைப்புகளில் காண்போம்

1. இன்றைய உலகில் நலிவுற்ற இளைஞர் - இளம் பெண்களுக்கு திடம் அளித்து, இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ திருச்சபை அழைக்கின்றது.
2. கத்தோலிக்கத் திருச்சபை வாழ்விலே, பணியிலே பொறுப்புமிக்க பங்கேற்பாளராக இளம் உள்ளங்களை அழைக்கின்றது.
3. திருச்சபை தன்னுடைய இளைஞர்களை, இளம் பெண்களை முழு ஆளுமை மற்றும் ஆன்மீக வளர்ச்சிகளிலே ஈடுபடுத்துகின்றது.

### 1. இளைஞர்கள், இளம் பெண்களுக்குத் திடமும், கிறிஸ்துவின் உண்மை சீடத்துவம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் டென்வரில் 1993ஆம் ஆண்டு நடைபெற்ற உலக இளையோர் தின மாநாட்டிலே பின்வருமாறு கூறுகின்றார் : "உங்கள் இளமைத் துடிப்புக்களையும், திறமைகளையும் உலகின் பண்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் பயன்படுத்துங்கள். நீதியின், அமைதியின் போராட்டங்களில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்". ஆம் அன்பானவர்களே! திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு இளைஞனும், இளம் பெண்ணும், கிறிஸ்து எதற்காகத் வாழ்ந்தார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இது இறையாட்சியை இம்மண்ணில் பரப்புவதற்கும், இயேசுவினுடைய வாழ்க்கையை தமதாக்கவும், உலகைப் பண்படுத்துவதற்கும் பேருதவியாக அமையும்.



இவ்வாறு உலகு மேம்படும்போது இளைஞர்களும், இளம்பெண்களும் இவ்வுலகிலே நல்முத்துக்களாய் பிரகாசிப்பார்கள்.

### 2. திருச்சபையின் பணிகளிலும், வளர்ச்சியிலும் இளையோரின் பங்கும், பொறுப்புகளும்

இளையோர் குடும்ப அளவிலும், பங்கு அளவிலும் கத்தோலிக்கப் பள்ளிகளிலும், நிறுவனங்களிலும் தங்களுக்கென்று தனி முத்திரையைப் பதிக்க முயற்சி செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்வின் பணியிலும், அவருடைய மறைபரப்பு பணியிலும் ஆர்வமுள்ளவர்களாக திகழ்வதற்கு முயற்சி செய்யும்போது திருச்சபை வளமடையும்.

### 3. இளையோர் சம்பந்தப்பட்ட இறை-பணியிலே முதலில் ஆன்மீக வாழ்வினை வலுப்படுத்துகின்றது

ஆன்மீக வாழ்வினை மட்டுமன்று முழு மனித வளர்ச்சிக்கும் திருச்சபை வித்திடுகின்றது. இளம் உள்ளங்கள் கிறிஸ்துவின் சீடர்களாகவும், கத்தோலிக்க அடையாளங்களைக் கொண்டவர்களாகவும் வாழ அழைக்கப்படுகின்றார்கள். சமூக, ஆன்மீக, பொருளாதார, கலாச்சார, அரசியல் மாறுபாடுகளுள் கிறிஸ்துவை வலிமையாகப் பற்றிக்கொள்ளக்கூடிய மனநிலை கொண்ட-வர்களாக இளைய சமுதாயத்தை மாற்றத் திருச்சபை ஆர்வமாய் உள்ளது. ஏழ்மை, இனவேற்றுமை, சமுதாய அநீதி ஆகிய-வற்றிலிருந்து விடுதலை பெற்று பாவ வாழ்விலிருந்து மீண்டு எழுபவர்களாக நல்ல உள்ளம் கொண்டவர்களாக இளையோர் மாற வேண்டும்.

### முடிவுரை

திருச்சபை இன்றைய இளையோர்களை

1. கிறிஸ்துவின் சீடர்களாக மாற அழைக்கின்றது
2. திருச்சபையின் பக்கபலமாக இருக்க கோருகின்றது
3. ஆன்மீக வளர்ச்சியும், ஆளுமை வளர்ச்சியும் காண முயற்சி செய்யத் தூண்டுகின்றது.

இதை உணர்ந்தவர்களாக இளையோர் ஒவ்வொருவரும் இறைவன் விரும்புகின்ற இனிய உலகத்தை இன்றே வடிவமைப்போம் இளை-யோர்களாக...!

நன்றி : அன்னை வேளாங்கண்ணி

# மற்றவரை அவராகவே ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவமே மகிழ்ச்சியான குடும்ப வாழ்விற்கான அடித்தளம்



– தமிழ் நேசன் அடிகளார் –

இன்று கணவன் மனைவி ஆகிய இருவருக்குமிடையே கருத்து முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. காரணம் ஒவ்வொருவரும் தம் எதிர்பார்ப்புக்கு ஏற்ற ஆளாக மற்றவர் இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். பொதுவாக "நான் எதிர்பார்க்கும் ஆளாக நீ இருக்க வேண்டும்" என்றுதான் கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரைக் குறித்து எதிர்பார்க்கின்றனர். இந்த எதிர்பார்ப்புத்தான் குடும்பங்களுக்குள் குழப்பத்தையும், சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றது. இங்கேதான் பிரச்சினைக்கான அடித்தளம் உருவாகின்றது. நாம் எதிர்பார்க்கும் ஒருவராக மற்றவர் இருக்க முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். "நீ நீயாக இரு. உன்னை நீயாகவே ஏற்றுக்கொள்கிறேன்." "நான் நானாக இருக்கின்றேன். என்னை நானாக நீ ஏற்றுக்கொள்" என்று சொல்லக்கூடிய ஒரு மனநிலை, மனப்பக்குவம், மன முதிர்ச்சி ஏற்படும்போது அந்தக் குடும்பத்தில் உண்மையான புரிந்துணர்வு, அன்பு, அமைதி ஏற்படும் என்று இம்மாதம் 4ஆம் திகதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற கிறிஸ்தவ மாநாட்டில் உரையாற்றும்போதே மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவி இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார். "குடும்பமே சமூக வாழ்வின் ஊற்று" என்ற மையப்பொருளில் இடம்பெற்ற இம்மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது,

பலத்த எதிர்பார்ப்புகளோடு திருமண வாழ்க்கைக்குள் நுழைகின்ற தம்பதியரில் பெரும்பான்மையானவர்கள் இறுதியில் ஏமாற்றத்தையும், விரக்தியையும் விலையாக வாங்கிக் கொள்கின்றனர். தமது எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகிவிட்டதை உணருகின்றனர். திருமண வாழ்வை நாம் எப்படி சிறப்பாக ஆரம்பிக்கின்றோம் என்பது முக்கியமல்ல. அதை எப்படி நாளாந்தம் வாழ்கின்றோம் என்பதுதான் முக்கியமானது.

வெளிநாடுகளில் உள்ளதைப்போல எடுத்ததற்கெல்லாம் விவாகரத்துக்கோருகின்ற நிலை நமது நாட்டில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இங்கு பல குடும்பங்கள் மனதளவில் பிரிந்து, உடலளவில் ஒரே வீட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலைமையை நாம் பார்க்கின்றோம். இதை "உள்ளார்ந்த விவாகரத்துக்கள்" அல்லது "உள்வாரிப் பிரிவுகள்" (Internal Divorce) என அழைப்பார்கள். பல குடும்ப தலைவர்கள் அல்லது தலைவியர் தங்கள் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியைத் தொலைத்தவர்களாக, வாழ்க்கையில் பிடிப்பற்றவர்களாக ஏனோதானோ என்று நடைபிணமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அடிக்கடி சொல்லுகின்ற வார்த்தை, "என்ன செய்வது பிள்ளைகளுக்காக வாழ வேண்டி உள்ளது"

கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள் என குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆற அமர இருந்து மனம் திறந்த பேசவேண்டும். தமது மன ஆதங்கங்களை, எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்தி பேச வேண்டும். அப்போதுதான் உண்மையான புரிந்துணர்வும், உறவும், மகிழ்ச்சியும் குடும்பத்தில் ஏற்படும்.

# இரத்தினபுரி மறைமாவட்டத்தில் சிறுவர் தின விழா

செல்வி. ஜெயமேரி மறைக்கல்வி நிலையம், அவிசாவளை.

சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய இரு மறைக்கோட்டங்களையும் கொண்ட இரத்தினபுரி மறைமாவட்டத்தில் சிறுவர் தினவிழா சென்ற புரட்டாதி திங்கள் 6ஆம் நாள் மறைமாவட்ட மறைப்பணி நிலைய வளாகத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இம்மறை மாவட்டத்தின் மறைக்-கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி நிரோஷன் வாஸ் பாலர் சபை இயக்குனர் அருட்பணி டென்சில் ஆகிய இருவரும் இணைந்து இவ்விழாவினை நெறிப்ப-டுத்தியிருந்தனர்.

அவிசாவளை, சீதாவாக்கை நகர சபை விளையாட்டுத் திடலிலிருந்து ஆரம்பமாகிய விழா ஊர்வலத்தில் அனைத்துப் பிள்ளைகளும், "ஒளியின் பிள்ளைகள் நாமாவோம்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, தமது பங்கின் பெயரையும் இணைத்த பதாதைகளை ஆங்காங்கே ஏந்திய வண்ணமும், நடனமாடியும், பேன்ட் வாத்தியங்களை இசைத்துக் கொண்டும் நகரின் பிரதான வீதி வழியாக மறைக்கல்வி நிலையத்தை நோக்கி ஊர்வலமாக வந்த காட்சி கண்கொள்ளா காட்சியாக - மிகவும் சிறப்பாக இருந்தது.

விழா ஊர்வலத்திலே, எமது ஆயர் மேதகு கிளீட்டஸ் சந்திரசிறி பெரேரா அவர்கள் பிரதம விருந்தினராக மாலை அணிவித்து வரவேற்கப்-பட்டதோடு கத்தோலிக்க கல்வி பிரதி இயக்குனர் அருட்பணி. கிரகரி பெர்னான்டோ, தேசிய மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. பியல் ஜானக்க, தேசிய மறைக்கல்வி நிலைய தமிழ் பிரிவு பொறுப்பாளர் அருட்சகோதரி ரஞ்சி போல்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினராக அழைத்து வரப்பட்டனர். ஊர்வலத்திலே அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மாணவர்கள், மறையாசிரியர்கள், பெற்றோர் உட்பட மொத்தம் 1500 பேர்வரை கலந்து சிறப்பித்தனர்.

அன்றைய தின திருப்பலியில் ஆயர் தமது மறையுரையிலே கிறிஸ்தவ பிள்ளைகள் இன்று எதிர்நோக்கும் சவால்கள், அவர்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பன பற்றி சிறப்பான அறிவுரை...

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# உலக ஆயர்கள் மாமன்றம்




## ஐப்பசி 5-19 வரை



5.10.2014 ஞாயிறன்று வத்திக்கான் பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருப்பலியை ஒப்புக்கொடுத்து உலக ஆயர்கள் மாமன்றத்தை தொடங்கி வைத்தார் திருத்தந்தை அவர்கள். அதற்கு முதல் நாள் சனிக்கிழமை மாலை இவ்விசேட ஆயர்கள் மாநாட்டுக்ககான செப வழிபாட்டிலும் திருத்தந்தை கலந்து கொண்டு உலக மாமன்றத்திற்காக எங்களோடு சேர்ந்து செபியுங்கள் என்று தனது டுவிட்டரில் கூறியுள்ளார். உலக ஆயர்கள் மாமன்றத்தின் கருப்பொருளான "குடும்பம்" பற்றிய பேசிய மாமன்றத்தின் செயலாளர் குடும்பத்தின் அழகாக உலகுக்கு உணர்த்தும் மற்றும் குடும்பம் முன்வைக்கும் உலகளாவியச் சவால்களுக்கு நற்செய்தியின் ஒளியில் பதில் காணப்படும். இம்மாமன்றம் திருமண முறிவு பற்றியது அல்ல மாறாக குடும்பம் பற்றியது.

இம்மான்றத்திற்கு ஐந்து கண்டங்களில் இருந்து 191 மாமன்றத் தந்தையர்கள் உட்பட 253 பேர் கலந்து கொண்டனர். இதில் ஆபிரிக்காவிலிருந்து 42 பேர், அமெரிக்காவிலிருந்து 38பேர், ஆசியாவிலிருந்து 29 பேர், ஐரோப்பாவிலிருந்து 78பேர், ஓசியாவிலிருந்து 48 பேர் கலந்து கொண்டனர்.

அத்தோடு திருமணத் தம்பதியர் உட்பட 16 வல்லுனர்கள், 38 பார்வையாளர்கள், 8 பிற கிறிஸ்தவ சபைப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இம்மாமன்ற தொடக்க திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாறு கூறினார். இறைவனின் கனவு தனது சில ஊழியர்களின் வெளிவேடத்தோடு எப்போதும் மோதுகிறது. நாம் தூய ஆவியால் நம்மை வழிநடத்த அனுமதிக்காவிட்டால் இறைவனின் கனவை நாமும் பாழாக்குகிறோம். இறைவனின் கனவை நனவாக்க, செயல்பட குடும்பம் குறித்து நாம் செயல்பட அழைக்கப்பட்டுள்ளோம். ஏனெனில் மனித சமுதாயத்திற்காக இறைவனின் திட்டத்தில் குடும்பம் ஒருங்கிணைந்த அங்கமாக இருந்தது என்று திருத்தந்தை கூறினார்.

மாமன்றத்தில் கூடியிருந்த அனைவருக்கும் தங்களது கருத்துக்களை வெளிப்படையாக எடுத்துரையுங்கள், பிறர் என்ன நினைப்பார்கள் என்பது குறித்து கவலைப்படாதீர்கள் கடந்த மாசி மாதம் இடம்பெற்ற ஆயர் மாமன்றத்திற்குப் பின்னர் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தை கர்தினால் ஒருவர் எழுதியிருந்தார். திருத்தந்தை என்ன நினைப்பாரோ என நினைத்து சில கர்தினால்கள் ஆயர்கள் மாமன்றத்தில் முழு கருத்துக்களையும், முன்வைக்கவில்லை என தெரிவித்திருந்தார். திருத்தந்தை வேறு விதமாக எண்ணி இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டு தங்கள் சொந்த கருத்துக்களை வெளியிடாமல் செல்வது தவறாகும். உண்மையை எடுத்துரைப்பதும், அதற்கு தாழ்மையுடன் செவிமடுப்பதும், வெற்றிக்கு இட்டுச் செல்லும், ஆகவே மனம் திறந்து பேசுவோம். தாழ்ச்சியில் செவிமடுப்போம் எனக் கேட்டுக் கொண்டார்.

5ந் திகதி தொடங்கிய ஆயர் மாமன்ற நிகழ்வுகள் தொடர்ந்து 19ம் திகதி வரை நடைபெறுகின்றது. ஒவ்வொரு நாளும் ஆயர் மாமன்ற அமர்வில் குடும்பம் பற்றி பலவகையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதில் ஐந்தாவது பொது அமர்வின் குடும்பத்தில் கணவரும், மனைவியும், மகிழ்ச்சியோடு சேர்ந்து வாழ்ந்து குழந்தை செல்வங்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் போது, அக்குடும்பத்தின் அன்பு பல மடங்காக விரிவடைகிறது.

குடும்பங்கள் இவ்வாறு மகிழ்ச்சியோடு, வாழும்போது திருமண அன்பு மற்றும் குடும்ப அன்பின் அழகையும், எளிமையையும், உறுதிப்படுத்த திருச்சபை இயங்குகின்றது. குடும்பங்கள் பிளவுபட்டிருக்கும் போது பிள்ளைகளின் அமைதியான இதயம் சீர்குலைகின்றது என்று கூறினார் ஸ்காட்லாண்ட் பேராயர் Philp Tartaglia ஆண்டகை அவர்கள்.

பொதுநிலையினர் திருமதி Alice Heinzen கருத்து கூறுகையில் ஞாயிறு திருப்பலி, மாலையில் செபமாலை செபிப்பது, நோயாளிளைச் சந்திப்பது, ஏழைகளுக்கு சேமித்து வைப்பது நித்திரைக்குப் போகும் முன் செபிப்பது போன்றவை இன்றைய கத்தோலிக்க குடும்பங்களில் மறைந்து வருகின்றன.

ஆபிரிக்கப் பிரதிநிதி இவ்வாறு கூறுகின்றார். ஒருவர் முகமூடியின்றி தான், தானாக வாழ்வதற்கும், ஒருவர் ஒருவருக்கு ஊக்கமூட்டுவதன் மூலம், தன்னம்பிக்கையில் வளர்வதற்கும், தனிமை துன்பத்தில் அடைந்திருப்பதற்கும் பகிர்வில் பழகி முழு மனிதராய் வாழ்வதற்கும் குடும்பம் ஒரு தளமாக அமைந்துள்ளது என்று கூறினார். இவ்வாறாக மாமன்றத்தில் கலந்து கொண்ட தம்பதிகள் தங்கள் கருத்துக்களையும், சிந்தனைகளையும் வழங்கினர் இம்மாநாடு 19ந் திகதி வரையும் நடைபெறுகின்றது.

# Boko Haram வன்முறையால் 185 ஆலயங்களுக்குத் தீ



நைஜீரிய நாட்டின் Maiduguri மறைமாவட்டத்தில் Boko Haram இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பினரின் வன்முறையால் கடந்த இரு மாதங்களில் 185 ஆலயங்களுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளன. மற்றும் ஒரு இலட்சத்து 90 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வட நைஜீரியாவிலுள்ள Maiduguri மறைமாவட்டத்தில் Boko Haram அமைப்பினரின் வன்முறையால் கடந்த இரு மாதங்களில் இடம்பெற்றுள்ள அழிவுகள் குறித்து பீதெஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய, அம்மறைமாவட்ட சமூகத் தொடர்பு பணிக்குழு இயக்குனர் அருள்பணி Gideon Obasogie இதனைத் தெரிவித்தார். கடந்த 30 நாள்களில் நான்கு நகரங்களிலுள்ள ஆலயங்கள் Boko Haram பயங்கரவாதிகளால் சூறையாடப்பட்டுள்ளன எனவும் அருள்பணி Gideon Obasogie தெரிவித்தார். மேலும் Boko Haram வன்முறை குறித்துப் பேசிய அம்மறைமாவட்ட ஆயர் Oliver Dashe Doeme அவர்கள், கடந்த இரு மாதங்களில் தனது மறைமாவட்டத்தின் 11 நகரங்களை, அந்த அமைப்பினர் கைப்பற்றியுள்ளனர் எனக் கூறினார்.

# கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து ஈராக்கைக் கட்டியெழுப்ப முஸ்லிம்களுக்கு அழைப்பு



மதத்தைப் புண்படுத்தும் வன்முறை, பிரிவினைவாதம், பயங்கரவாதம் ஆகியவற்றுக்கு எதிராக, ஈராக்கிய கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து அந்நாட்டு முஸ்லிம்களும் கண்டனம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். பாக்தாத் முதுபெரும் தந்தை லூயிஸ் இர.ஃபேல் சாக்கோ. முஸ்லிம்களின் EId al - Adha தியாகத் திருவிழாவை முன்னிட்டு, ஈராக்கிலும், உலகெங்கிலும் இருக்கின்ற முஸ்லிம் சகோதரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதுபெரும் தந்தை சாக்கோ அவர்கள், தீமையின் ஒவ்வொரு வடிவத்திலிருந்தும் நாட்டை பாதுகாக்குமாறு இறைவனிடம் செபிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இன்னல்கள் மற்றும் துன்பங்கள் மத்தியிலும், ஒவ்வொருவர் மீதும் கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் அன்பைக் குறிப்பிட்டுள்ள மதுபெரும் தந்தை சாக்கோ அவர்கள், தேசிய தனித்துவத்துக்கும், ஒன்றிணைந்து வாழ்வதற்கும் சகிப்புத் தன்மையும், ஒருவர் ஒருவர் மீதான மதிப்பும், நீதியும் அவசியம் என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

ஈராக்கில் உண்மையான அமைதி நிலவ, ஒப்புரவுக்கும், துணிச்சலான உரையாடலுக்கும் அழைப்பு விடுத்துள்ள அதேவேளை, ஐஎஸ் இஸ்லாமிய நாட்டின் அடக்கு முறையிலிருந்து மோசுலையும் நினிவே பகுதியையும் காப்பாற்றுமாறு,ஈராக் அரசுக்கும், குர்திஸ்தான் அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார் பாக்தாத் முதுபெரும் தந்தை சாக்கோ

## இளைஞர் யுவதிகளுக்கான அறிவித்தல்

கொழும்பு வடக்கு மறைக்கோட்டம் இளைஞர் யுவதிகளுக்கான மாதாந்த விசேட திருப்பலி இம்மாதம் 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு செக்கட்டித் தெரு புனித அன்னம்மாள் வேளாங்கண்ணி ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படுகின்றது. அனைத்து இளைஞர் யுவதிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயத்தில் வருடார்ந்த இளைஞர் யுவதிகளுக்கான திருப்பலி இம்மாதம் 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிதிருப்பலியில் கொண்டாடப்படுகிறது. திருப்பலி முடிவில் விசேட ஆசீர்வாதமும் அளிக்கப்படும். கிரான்பாஸ் பங்கு இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு ஆசீர் பெறுமாறு அழைக்கின்றோம்.

**தகவல் : அருட்தந்தை F. ஒனாசியஸ்**



கொழும்பு உயர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவர்களுக்கான தலைமைத்துவ செயலமர்வு அதன் இயக்குனர் ஆனந்தன் பர்னாந்து புள்ளே அடிகளாரின் தலைமையின் கீழ் 8.10.2014 அன்று ஹெரனை மார்ட்டீன் டி போரஸ் ஆலயத்தில் நடைபெற்றது. இச்செயலமர்வில் 52 இளைஞர் யுவதிகள் பங்குபற்றி பயன் பெற்றனர் இவர்களை படத்தில் காணலாம்.

**தகவல் : அருட்தந்தை F. ஒனாசியஸ்**

## தரம் 11ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான அறிவித்தல்

தரம் 11ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு (கா.பொ.த சா.தர) 18.10.2014 அன்று காலை 9-4 வரை மாவத்தை புனித அந்தோனியார் மகா வித்தியாலத்திலும், அதே கருத்தரங்கு 25.10.2014 அன்று கொட்டாஞ்சேனை புனித லூசியாள் மகா வித்தியாலத்தில் காலை 9-4 வரையும் நடைபெறுகின்றது. அனைத்து தரம் 11ல் கற்கும் மாணவர்களும் கலந்து பயன் பெறுமாறு அழைக்கின்றோம்.

**தகவல் : அருட்தந்தை F. ஒனாசியஸ்**

## 01ம் பக்கம் – இறையரசின் விழுமியங்களை..

பால் மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்டுள்ளது. "காலம் நிறைவேற்றிவிட்டது இறையாட்சி நெருங்கி வந்து விட்டது: மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1: 15) "இறையாட்சி" அல்லது "இறையரசு" என்றால் என்ன?. இச்சொல்லானது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் காணக்கிடக்கிறது. பழைய ஏற்பாட்டில் "கடவுளின் ஆட்சி" "கடவுள் அரசர்" என்ற சொற்றொடர்கள் இறையாட்சியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. "கடவுள் ஆட்சி செய்கின்றார்" என்பது இறையாட்சியைக் குறிக்கும் சொல்லாக பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இறையாட்சி என்பது கடவுள் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை ஆட்சி செய்கின்றார் என்பதல்ல: அவரது அரசாளும் அதிகாரத்தையும் குறிப்பதல்ல: மாறாக இறையாட்சி என்பது கடவுள் செயல்களில் கடவுள் தான் ஓர் அரசு செயல் என்று கூறலாம். (தோழன் பெப்ரவரி 2012).

இயேசுவும் தனது பணிவாழ்வை மேற்குறிப்பிட்ட (மாற்கு 1: 15) இறைவார்த்தை முழக்கத்துடன் ஆரம்பித்தார். இயேசுவின் பணியில் இறையாட்சி வெளிப்பட்டது. இயேசு இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்று போதித்த பொழுது மக்கள் ஒருவித விடுதலை வந்து விட்டதாக எண்ணினார்கள். ஆனால் இயேசு விடுதலை அளிக்கும் ஆற்றல் அன்புக்கு மட்டுமே உள்ளது என்று வலியுறுத்தினார். இயேசு போதித்த இறையரசு கடவுள் மக்கள் மீது காட்டும் அளவற்ற அன்பு, நிபந்தனையற்ற அன்பு. கடவுளின் அன்பின் வெளிப்பாடே இறையரசு. இது கடவுளின் கொடை. கடவுள் தன் அன்பை வெளிப்படுத்தும் பொழுது மனிதனும் அவ்வன்பிற்கு பதிலன்பு காட்ட வேண்டும். தன்னையே பல்வேறு சுயநல நாட்களிலிருந்து விடுவித்து சமுதாயத்தில் நிலவும் அநீதிகளையும் களைய பாடுபட வேண்டும். அன்பு, நீதி, நட்புறவு ஆகிய மதிப்பீடுகளை வாழ்ந்து காட்டுவதன் மூலம் இறையரசு வந்துவிட்டது என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

"ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாக இருங்கள்" (கலா 5:13) எனும் பவுலடிகலாரின் வாக்கு இயேசு போதித்த நற்புறவின் அடையாளமாகும். அதாவது நாம் ஒவ்வொருவரும் பிறருக்கு அன்பின் அடிமைகளாக மாறுவதாகும். இவ்வாறு நாம் ஒருவர் மற்றவர் மட்டில் அன்பின் அடிமைகளாக மாறும் பொழுது இறையரசின் மற்றொரு கூறாகிய நீதியை நிலைநாட்ட முடியும். இயேசு போதித்து, வாழ்ந்து காட்டிய இறையரசு என்பது கடவுளின் ஆழ்ந்த அன்பை உணர்த்துவது: அவர் நம் தந்தை என்று உணர்வது: அதன் விளைவாக பிறரை அன்பு செய்து விடுதலை, நட்புறவு, நீதி நிலவும் சமுதாயம் உருவாக்குவதாகும். இத்தகைய விழுமியங்களின் அடிப்படையில் இறையாட்சியை இவ்வுலகில் நிறுவிட நம்பிக்கை கொண்டோர் பாடுபட வேண்டும். பிறரையும் இத்தகைய விழுமியங்களை உலகில் நிறுவிட ஈடுபடுத்த வேண்டும். இறையரசின் விழுமியங்களை பறைசாற்றுவது நமது கடமையாகும். நாம் இதை செயல்படுத்துவதற்கு மாற்றம் இன்றியமையாத ஒன்றாகும். நம்மில் நாம் மாற்றத்தை ஏற்படுத்தி இறையரசின் விழுமியங்கள் இன்றைய உலகில் தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அன்பு, நீதி, நட்புறவு ஆகிய பண்புகளின் வழியில் தான் புதிய வானகமும் புதிய வையகமும் படைக்க முடியும் என்பதனை நாம் ஆழமாக உணர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது வாழ்வில் எப்போது இவை தேவை என்ற உணர்வு மலருமோ அன்றே அதை ஏற்கும் மனநிலை உருவாகின்றது. இந்த மனநிலை மாற்றத்திற்கான வழியை எம்மில் ஏற்படுத்திவிடும். மாற்றம் ஏற்படாவிடில் எம்மால் இயேசுவின் வழியில் இறையரசின் விழுமியங்களை வாழ்ந்து அனுபவித்து பறைசாற்ற முடியாது. எனவே தான் நம் ஆண்டவர் "மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" எனும் அழைப்பினை எம் மத்தியில் விட்டுச் சென்றுள்ளார்.

இறையரசின் விழுமியங்களை மண்ணுலகில் பறைசாற்றிட எம்மிடையே மாற்றம் தேவை எம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த முடிவில்லை என்றால் இயேசுவின் மறைபரப்பு கட்டளையை ஏற்று எம் வாழ்வில் கடைபிடித்து இறையரசின் விழுமியங்களை உண்மையுடனும் பிரமாணிக்கத்துடனும் பறைசாற்றிட முடியாது.

**அருட்பணி. சுகுநேந்திரன் குரூஸ்**
**திருகோணமலை மறைமாவட்ட திருப்பாலர் சபை**
**இயக்குனர்**

## 04ம் பக்கம் – திருவிவிலியக் கண்னோக்கில்..

பிரமாணிக்கமுள்ளதாக விசுவாசம் வளமாகின்றது (2திமொ. 1: 12). விசுவாசத்தில் வாழ்வதன் வழியாக, விசுவாசிகள் இயேசுவின் பாஸ்கா நிகழ்வுக்கு சாட்சியம் பகர்ந்து, தூய ஆவியாரின் கொடைகளை வாழ வேண்டும் என்பார் புனித பாவுலு... ( உரோ. 6: 1...; 8: 1-13; கலா. 5: 13- 26). புனித யோவான் விசுவசிப்பவர்கள் உயிர்த்து விட்டவர்கள் (11: 25), ஒளியில் வாழ்பவர்கள் (12: 46), முடிவில்லா வாழ்வைக் கொண்டவர்கள் (3: 16; 6: 47) என்கிறார். திருவெளிபாட்டு நூல் மரணம்மட்டும் பொறுமையாக வாழ்ந்த புனிதர்களை விசுவாசிகளின் கண்முன் வைக்கின்றது (திவெ. 13: 10).

முடிவாக, திருமுழக்கு வழியாக நாம் அறிக்கையிட்ட விசுவாசத்தை பிரமாணிக்கமாய் வாழ்வது புனித வாழ்வாகும். இதுவே கிறிஸ்தவ வாழ்வாழ்வின் முடிவாகும். கிறிஸ்தவ திருச்சபையில், புனிதர்கள் இவ்விசுவாச வாழ்வுக்கு முன்னுதாரணமாய் உள்ளார்கள். புனிதராக திருச்சபையால் அறிவிக்கப்படவுள்ள யோசப்வாஸ் அடிகளாரின் வாழ்வை ஆழமாக சிந்திக்கவும், நம் விசுவாச வாழ்வை அவரைப்போல நம் மண்ணில் வாழ்வது எப்படி என்று தெளிவு பெறவும் இந்நாட்கள் அமைந்தால் அதுவே நம்மிடம் வேண்டப்படுவதாகும். இலங்கை மண்ணில் அன்றைய நெருக்கடிகள், நெருடல்கள் மத்தியில் விசுவாசத்தை வாழ்ந்தும். பிறரையும் வாழவைத்தும், புனித நிலையை அடைந்த யோசேப் வாஸ் அடிகளாரிடம் இருந்து இன்றைய இலங்கைத் திருச்சபை எதைக் கற்கப்போகின்றது? விசுவாசத்தில் பிறரையும் வாழவைக்க அவரின் வழிமுறைகளில் இருந்து எதை ஏற்க வேண்டியுள்ளது?

## 01ம் பக்கம் – அகில இலங்கை...

ஒரு மொழியில் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும்.

* இவ்வாக்கத்தை நீங்கள் சமர்ப்பித்த பிறகு இதன் உரிமையாளராக திகழ்பவர் இலங்கை கத்தோலிக்க திருச்சபையே ஆகும்.

உங்களுடைய ஆக்கங்கள் விசேட பார்வையிடும் இயக்குனர்களால் பரிசோதனை இடப்பட்டு, ஆக்கத்தின் திறமைக்கேற்ப 1ம், 2ம், 3ம் பரிசில்கள் வழங்கப்படும்.

1ம் இடம் : 100,000
2ம் இடம் : 50,000
3ம் இடம் : 25,000

அத்தோடு 5பேருக்கு ஆறுதல் பரிசுகளாக 5000/= வழங்கப்படும். அதைவிட ஏழு பேருக்கு சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வெற்றியாளர்களின் ஆக்கங்கள் ரூபவாகிணி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும். அத்தோடு இந் நிகழ்வை ஒட்டி நடாத்தப்படும் திரைப்படக் கொண்டாட்டத்தில் இவ் ஆக்கங்கள் ஒளிபரப்பப்படும்.

**E-mail : lankacathcom@gmail.com**
வெப்சையிற் : **www.popefrancissrilamka.com**

## 02ம் பக்கம் – மரியாயின் சேனை...

உத்தியோகத்தர்களின் கடமைகள், பொறுப்புகள். சேனையின் குறிக்கோள், என்பவை பற்றிய விளக்கங்கள் கொமிசிய அலுவலர்களினால் சிறப்பான முறையில் தயார்ப்ப-டுத்தப்பட்டமையும், அனுபவப்பகிர்வு நிகழ்வில் மிக நீண்ட காலமாக கொமிசியத்தை தலைமைதாங்கி வழிநடத்திச் சென்ற முன்னாள் தலைவர்கள் பிரசன்னமாகி, கலந்துரையாடல்களை நெறிப்படுத்தி வழிநடத்திச் சென்றமையும் ஊழியச் செயற்பாட்டில் வரும் தடைகளை வெற்றிகொண்ட சர்ந்தப்பங்களை பகிர்ந்து கொண்டமையும் நிகழ்வில் பங்கு கொண்ட சேனை அலுவலர்களுக்கு ஓர் புதிய உத்வேகத்தை கொடுத்திருந்தது. ஊரிய நேரத்திற்கு சகல நிகழ்வுகளும், ஆரம்பிக்கப்படடமையும், தடையின்றி உபசரணைகள், உணவு, சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்ற இம்மாநாடு இறுதியாக மரியன்னையின் பிறந்த நாள் பாடலையடுத்து நினைவு செயலாளரின் நன்றியுரையடன் மாநாட்டு நிகழ்வுகள் நிறைவெய்தின.

## 06ம் பக்கம் – மனப்பான்மை...

பற்றிய அறிவு பெற்றோருக்கு உள்ளதா? (ரென்சன்) பதட்டம், (ஸ்றெஸ்) மன அழுத்தம் இவை எல்லாமே பிள்ளை வளர்ந்ததும் வெளிப்படத் தொடங்கும். பிள்ளைக்கு அன்பு, கருணை, ஏற்பு, பாராட்டுதல் அடிப்படைத் தேவைகள் இவை சரியாகக் கிடைத்தால் பிள்ளையின் ஆளுமை வளரும். நல்ல பெறுமதிகள், மனப்பான்மைகள் பெற்றோரின் முன்மாதிரிகையால் வளரும். உதாரணமாக மன்னித்து மறப்பது, ஏழைகளுக்கு உதவுவது, இயற்கையைப் பாதுகாப்பது இறைவன் எமது தந்தை என்ற மனநிலை போன்ற எல்லாமே பிள்ளையின் ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

உதாரணமாக 12வயது சிறுவன் நன்நடத்தைப் பாடசாலையில் ஆறுமாத பயிற்சிற்காக விடப்பட்டான். ஒருஅதிகாரியிடம் அவனைப் பாரம் கொடுத்தனர். சிறுவன் கத்தோலிக்கன். அந்த அதிகாரியும் கத்தோலிக்கர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அந்த அதிகாரி தானே முன்வந்து அந்தச் சிறுவனுக்கு மறைக்கல்வி கற்பித்தார். அப்போது பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே என்ற செபத்தை கற்பித்தார். அச்சிறுவன் அதிகாரியை நோக்கி "கடவுள் என்பவர் அப்பாவைப் போன்றவர் என்றால் அந்தக் கடவுள் எனக்கு வேண்டாம்" என்றான். "எனக்கு அப்பா அடிப்பார், ஏசுவார், சிறுதவறு செய்தாலும் வீட்டுக்கு வெளியே அனுப்பிவிடுவார்" என்றான். மனித அனுபவத்தின் மூலமே இறைவனைப் பற்றிய மனப்பான்மை ஒருவருக்கு உருவாகும். அப்படியானால் அப்பா என்று கூறமுடியாது.

"உனக்கு நன்றாக அன்பு காட்டும் ஆண் யார்?" என்று சிறுவனிடம் கேட்டார். "நீங்கள்தான்" என்று சிறுவன் கூறினான். "பரலோகத்தில் இருக்கும் நன்நடத்தை அதிகாரியே" என்று செபத்தைக் கற்றுக்கொடுத்தார். ஒரு குழந்தை இறைவனைப் பற்றிக் கற்றுக்கொள்வது வளர்ந்த பெரியவர்களிடம் இருந்தே. நாம் யாருடன் நெருங்கி வளர்கின்றோமோ அவரிடமிருந்து 6, 7 வயது வரும்போது பிள்ளையின் ஆளுமையில் பெரும்பகுதி முழுமை பெறுகின்றது. அப்பிள்ளைக்குக் கிடைக்கும் அனுபவங்கள், முன்மாதிரிகைகள், பாராட்டுதல், தட்டிக்கொடுத்து ஊக்குவித்தல் மூலம் பெறுமதிகள், மனப்பான்மைகள் உருவாகும்.

*தொடரும்....*

**மணமகன் தேவை**



கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 1981ஆம் ஆண்டு பிறந்த, A/L வரை படித்த அழகிய தோற்றமுடைய மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர் தொடர்பு 0773323871

(N 3850)

**மணமகள் தேவை**



திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த 32 வயதுடைய தனியார் துறையில் நல்ல ஊதியம் பெறும் தீய பழக்கங்கள் அற்ற மணமகனுக்கு கொழும்பில் மணமகள் தேவை. தொடர்பு 0754724781

(N 3803)

## 07ம் பக்கம் – இறைப்பணியாற்றுவோரின்...

ஏனெனில் அவர்கள் சொல்வார்கள், செயலில் காட்டமாட்டர்கள் (மத் 23:3) என இயேசு கூறுவதுபோல் இருக்கக்கூடாது. இறைபணியாற்றும்போது என் வாழ்வை அவதானிப்போர் அநேகர். எனது சொல்லும், செயலும் ஒரே மாதிரியாக அமைவதுதான் சாட்சிய வாழ்வு. நான் எவரை மையமாக வைத்து பணியாற்றுகிறேனோ, அவருக்கு சாட்சி பகர்வதாக என் வாழ்வு அமைய வேண்டும். இறைப்பணியாற்றுவோர் இதை கவனத்திற் கொள்வது மிகவும் முக்கியம். இறுதியாக இயேசு கூறுவது போல் "மானிடமகன் தொண்டு ஏற்பதற்கல்ல, தொண்டு ஆற்றுவதற்கு வந்தார்" (மத் 11:45) இறைபணி கைமாறு கருதாத பணி கடைசி மட்டும் நிலைத்து நிற்க வேண்டிய பணி. முகமலர்ச்சியோடு ஆற்ற வேண்டிய பணி. "எதனை நீ எவனுக்கு செய்தாலும், அதனை நீ எனக்கே செய்கின்றாய்" என இயேசு எடுத்துரைப்பது போல், இறைப்பணியாற்றுவோர் கருத்தில் கொள்ள வேண்டியது. தனது பணி இறைபணி, இறைவனுக்காய், ஆற்றும் பணி. இறைவனை மையமாகக் கொண்ட பணி இறுதி மட்டும் ஆற்ற வேண்டிய பணி. இறையரசை மையமாகக் கொண்டபணி. எனவே இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு கருத்தோடு பணியாற்றினால் இப்பணியை போல் எப்பணியும் அமையாது. எனவே மேற்கூறப்பட்டவைகளை கவனத்திற்கொண்டு செயலாற்றுவது இறைபணியாற்றுவோரின் கடமையாகும். இக்கடமையை கண்ணும் கருத்துமாக கவனத்திற்கொண்டு ஆற்றும்போது இப்பணி உண்மையாகவே இறைபணியாக அமையுமென்பது மிகையாகாது. எனவே இறைபணி ஆற்றுவோர் கவனத்தில் கொள்ள வேண்டியவை, கருத்தில் கொள்ள வேண்டிய பல முக்கியமான விடயங்கள் சிலவற்றை நான் எடுத்தியம்பினாலும், இறைபணிக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இவை ஓரளவு தெரிந்திருக்க வேண்டும். எல்லாப்பணிகளிலும் ஓர் வித்தியாசமானது இப்பணி. ஏனெனில் எம்பிரான் இயேசு விட்டுச் சென்ற பணி இது. தொடரச் சொன்னபணி. தொடர்ந்து ஆற்றிக்கொண்டே இருக்கவேண்டிய பணி இது. இதற்கு துணை நிற்பவர் நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து. இதற்கு உறுதியளித்தவர் இயேசு. "இதோ உலகம் முடியும்வரை எந்நாளும் நான் உங்களுடன் இருப்பேன்" (மத் 28:20ம)இந்ந உன்னத உறுதிமொழியை உரைத்த இயேசு இறைபணியாற்றும் ஒவ்வொருவருடனும் இருக்கிறார் என்பதை இப்பணி செய்யும் ஒவ்வொருவனும் உணர்ந்து செயல்படுவோம்.

"வாழ்க உங்கள் பணி. வளர்க இறைபணி"

"நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும், அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக" (2கொரி 13:13

## 11ம் பக்கம் – விவிலியத்தில் குறிப்பிடப்படும்...

(தானி 9:27) இந்தச் செயல் இன்று பல அரசியல் எதிர்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அதாவது மத்திய இஸ்லாமிய கவுன்சில் இந்த ஆலயத்தில் நடக்கும் பல மத வழிபாடுகள் மற்றும் போதனைகளை பகிரங்கமாக எதிர்த்து வருகின்றது. ஆனால் கடவுளின் அற்புத செயல் இங்கு விளங்கும். அது என்னவென்றால் எவ்வித தடங்கல்களும் கடவுளுடைய அற்புதமான திட்டங்களுக்கு ஓர் இடறலாக இருக்க முடியாது. இந்த சம்பவம்தான் லூக்கா அதிகாரம் 21:24ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஜெருசலேம் நகரம் இவ்வித மதவெறியர்களின் கையில் சிக்கித் தவிக்கும். ஒரு கால கட்டத்திற்குப் பின்னால் இவர்களிடம் இருந்து விடுவிக்கப்படும் என்பதே அது. இன்று இந்த மலைப்பரப்பானது பூமியில் மிகவும் பிரசித்தி பெற்று மற்றும் விலை மதிப்பற்ற நிலமாகவும் திகழ்ந்து வருகின்றது. இந்நிலப்பரப்பில் இடம் வாங்க பலர் தரகர்களை அணுகி போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய புகழ்மிக்க மோரியா மலையை நாம் நமது செபத்தில் தினம் தினம் நிறுத்தி தியானிப்போமாக!

## 13ம் பக்கம் – இரத்தினபுரி மறைமாவட்டத்தில்...

வழங்கினார். திருப்பலி, மறையுரை அனைத்துமே தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் வழங்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து சிறுவர் கலைநிகழ்ச்சிகளும் ஆரம்பமாகின. இக்கலை நிகழ்ச்சியில், சிறுவர்தின விழாவை முன்னிட்டு நிலையத்தினால் ஏற்கனவே நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில், முதலாம் இடத்தைப் பெற்ற பிள்ளைகளின் நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன. சிறந்த அறிவிப்பாளரைத் தெரிவு செய்யும் மேற்படி போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மறையாசிரியர்கள் இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர். நிகழ்ச்சியின் இடையிடையே போட்டிகளில், முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்ற பிள்ளைகளுக்கு பணமும், பொருட்களும் பரிசாக வழங்கப்பட்டன.

விழாவை சிறப்பான ஒழுங்கமைப்புச் செய்திருந்த எமது இயக்குனர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இத்தகைய நிகழ்வுகள் மாணவர்களுக்கு மேலும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் வழங்கும் என்பதில் ஐயமில்லை.

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ)
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும்,
- பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்
- அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்




## உங்களுக்கான பல விசேட சேவைகள்!

### கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

ஞான ஒளி பத்திரிகையின்
விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | 1½" x 1" single | 3" x 1"Double | 5" x 1"Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 7750/= 15500/= 31000/= | 7000/= 14000/= 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 11500/= 23000/= 46000/= | 10000/= 20000= 40000/= |
| வர்ணம் + 25 % | | |

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 7750/= 15500/= 31000/= | 7000/= 14000/= 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 11500/= 23000/= 46000/= | 10000/= 20000= 40000/= |
| வர்ணம் + 25 % | | |

### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com







அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்